88 Aug.
A/L வகுப்புகள்
11.30 - Chemistry: திரு. நிர்மலநாதன்
12.30 - Physics: திரு. வர்ணம்
1.30 - Botany: திரு. குகாதரன்
2.30 - Zoology: திரு. நாகநாதன்
1.30 - 3.30 - Maths: திரு. நல்லையா
New Master Institute
BMC Lane, JAFFNA.

# சஞ்சீவி

அறிவு-ஆக்கம்-அபிவிருத்தி

விலை ரூ.2/=

88 AUG.
A/L வகுப்புக்கள்
ஆரம்பம்: 01 — 02 — 86
விபரங்களுக்கு;
New Master Institute
BMC Lane, JAFFNA-

மலே:- 1 யாழ்ப்பாணம் குரோதன ஆு தை மீ 19 உ சனிக்கிழமை ஹிஜ்ரி 1406 ரபி. ஐ. அவ். பிறை 21 (01-02-1986) -SANJEAVY- REGENERATIVE TAMIL WEEKLY சிகரம்:2

## கருத்துக் கலசம்

மயூரா

"கம்பன் வீட்டுக் கட்டுத் தறியும் கவி பாடும்!"

இவ்வாறு ஒரு சொல்வழக்கு கம்பனின் கவிதைகள் சிறப்பு வாய்ந்தவை. தனித்துவம் மிக்கவை, சொற்சுவை, பொருட் சுவை அவன் கவிதைகளின் மகத்துவம்.

அதனுல் தான் உலக மகா கவியான பாரதியே "கம்பனைப்போல் வள்ளுவன் போல்" என்று துள்ளிக் குதித்தான். கவிஞனுக்குத் தெரியாதா கவிதையின் அருமையும், பெருமையும், பெறுமதியும்?

கவிச் சக்கரவர்த்தி கம்பன் கவிச்சக்கரவர்த்தியே தான்.

அவன் பெயரால் ஒரு கழகம் யாழ்ப்பாணத்தில் அகில இலங்கைக் கம்பன் கழகம் நல்லூரில் கம்பன் தமிழ்க் கோட்டம் ஒன்றை நிறுவப்போகிறது. அது ஓர் இலக்கியப் பணிமன்றமாக இருக்கும்.

தமிழ் மொழி, கலை, கலாசாரம் ஆகியவற்றைப் பேணிப் பாதுகாப்பது இதன் முக்கிய குறிக்கோள்களாக இருக்கும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

கவிக்கடல் கம்பனுக்குக் கோட்டம் அமைக்கும் முயற்சி பாராட்டுதற்குரியது. தமிழ் வளர்த்த பெரியார்கள் பெயரால் சங்கங்களை நிறுவித் தமிழ்த் தொண்டு புரிவது அரிய சேவை.

ஆனுல் இப்போது தமிழ் வளர்ப்பதற்கென கடிதத் தலைப்புச் சங்கங்கள் தான் எமது நாட்டில் அதிகம். தனிப்பட்ட ஒரு சிலரின் விளம்பரத்திற்கும், பணப்புழக்கத்துக்குமாகவே அவற்றுள், பல உயிர்வாழ்கின்றன! அவை உருப்படியாகச் செய்தது எதுவுமில்லை.

இந்த வகையில் கவிச்சக்கரவர்த்தி போலவே, கம்பன் கழகமும் உயர்ந்து நிற்கிறது. வேறு எந்தப் பணி மன்றமும் செய்ய நினைத்தும் பார்க்காத பாரமான பணியை அது தலையில் போட்டிருக்கிறது. அதனைச் சரியாக நேராகச் சுமந்து, வானுயர நிற்கும் கட்டடத்தை நிறுவி முடித்துவிட வேண்டும்.

அது மட்டுமன்றி தமிழறிஞர்கள் கூடி இலக்கியக் கலந்துரையாடல்கள், தமிழ் ஆராய்ச்சி மன்றங்கள் போன்றவறை நடத்தவும் வசதி செய்ய வேண்டும்.

சொல்வது சுகம். செய்வது கடினம். இதனைக் கம்பன் கழகத்தினரும்புரிந்து கொண்டு தான் மாடிக் கட்டடத்தைக் கட்டத் திட்டமிட்டிருப்பார்கள்.

கம்பன் கழகத்தின் தூண்களாக விளங்குபவர்கள் துடிப்பு மிக்க இளைஞர்கள். இளைஞர்களால் ஆகாதது இந்தக்காலத்தில் எது? எனவே வானுயரும் கம்பன் கோட்டம் நல்லையம்பதியில் நின்று தமிழ்த் தொண்டு புரியும் என எதிர்பார்ப்போமாக.



உச்சி குளிர்ந்ததடீ — சகியே
உடம்பு நேராச்சு,
மச்சிலும் வீடுபெல்லாம்—முன்னைப்போல்
மனதுக் கொத்ததடீ!.
இச்சை பிறந்ததடீ!. — எதிலும்
இன்பம் விளைந்ததடீ!.
அச்சம் ஒழிந்ததடீ! — சகியே!
அழகு வந்ததடீ!.

—மகாகவி பாரதியார்—

★ இனப்பிரச்சினை:

# அரசின்பதிலை ஆராய ராஜீவ் - அமிர் பேச்சு

## பண்டாரி கொழும்பு வருமுன் விடுதலை இயக்கங்களுடன் பேச்சு

புதுடில்லி, ஜன.31

இலங்கையின் இனப்பிரச்சினை சம்பந்தமாக தமிழர் விடுதலைக் கூட்டணி சமர்ப்பித்த மாற்றுத்திட்டத்திற்கான இலங்கை அரசின் பதில் இங்கு கிடைத்துவிட்டது.

அரசாங்கத்தின் பதிலை பரிசீலனை செய்வதற்காக கூட்டணிச் செயலாளர் நாயகம் திரு. அ. அமிர்தலிங்கம் புதுடில்லி விரைந்துள்ளார்.

இவர் சென்னை சென்றிருந்த பிரதமர் ராஜீவ் காந்தியுடன் இன்று ஒரே விமானத்தில் இங்குவந்து சேர்ந்தார்.

கூட்டணியைச்சேர்ந்த திருவாளர்கள் மு. சிவசிதம்பரம், இரா. சம்பந்தன் ஆகியோரும் அவர்களுடன் புதுடில்லிக்கு பறந்து வந்தனர்.

இவர்கள் அரசாங்கத்தின் பதில் குறித்து பிரதமர் திரு. ராஜீவ் காந்தியுடன் விரிவாகப் பேச்சு வார்த்தை நடத்துவார்கள்.

கூட்டணி — ராஜீவ் பேச்சு முடிந்ததும், போராளிகள் குழுக்களை பிரதமர் அழைத்துப்பேசுவார்என எதிர்பார்க்கப் படுகிறது.

அதற்குமுன்னேடியாக வெளியுறவுச்செயலாளர் திரு ரொமேஷ் பண்டாரி ஞாயிற்றுக்கிழமை போராளிகள் குழுக்களைச் சந்திக்கிறுர்.

திரு. ரொமேஷ் பண்டாரி திங்கட்கிழமை கொழும்பு வருவதற்கு முன்னர் அரசாங்கத்தின் பதில் சம்பந்தமாக கூட்டணி மற்றும் போராளிகளின் நிலைப்பாடு என்ன என்பது குறித்து திட்டவட்டமாக அறிந்து கொள்வர்.

இதேவேளையில் இலங்கை ஜனதிபதி திரு.

(8 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். நகரில் நேற்று விழுந்த குண்டு

யாழ்ப்பாணம், பெப்.1

யாழ்ப்பாணம் கோட்டை முகாமிலிருந்து நேற்று மாலை 6 மணியளவில் ஏவிவிடப்பட்ட குண்டு ஒன்று தீப்பிழம்பாய்வந்து முகாமிலிருந்து அரை மைல் தூரத்தில் ஆரியகுளத்திற்கு அண்மையில் விழுந்தது.

வீடு ஒன்றுக்கு அருகில் விழுந்த போதும் உயிருக்கோ, உடைமைக்கோ எந்தவிதசேதமும் ஏற்படவில்லை எனத் தெரிவிக்கப் படுகிறது.

இந்தச் சம்பவத்தினுல் நேற்று மாலை யாழ்நகர் அல்லோலகல்லோலப்பட்டது. மக்கள் அகப்பட்டதில் ஏறி ஓடித்தப்பினர்கள் கடைகள் இழுத்து மூடப்பட்டன. நகர் வெறிச்சோடியது.

## ரத்து

கொழும்பு, பெப். 1

கொழும்பு பெரியாஸ் பத்திரியைச் சேர்ந்த இருதய சிகிச்சை நிபுணர் டாக்டர் அத்துகோறளையின் தற்காலிக வேலை நீக்கம் ரத்துச் செய்யப்பட்டு விட்டது.

# முல்லைத்தீவில் இரவிரவாக ஆயுதப் படைகள் குவிப்பு

## நேற்று தொடர்ந்தும் சண்டை

முல்லைத்தீவு, பெப். 1

முல்லைத்தீவில் நேற்றுப் பகலும் பின்னர் தொடர்ந்து இரவும் போராளிகளுக்கும் படையினருக்கும் இடையில் கடும் சண்டை நடைபெற்றதாக அறியப்படுகிறது.

சண்டை விட்டு, விட்டு நடைபெற்றதாகவும் —

இந்தச் செய்தி அச்சுக்குப்போகும் வரை ஹெலிக்கொப்டரிலிருந்து துப்பாக்கிச் சூடுகள் தீர்க்கப்பட்ட வண்ணம் இருந்ததாகவும்—

கனரக வாகனங்களில் இருந்து குண்டுகள் முழங்கியதாகவும் பிந்திக் கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன.

இங்கு தொடர்ந்து ஐந்தாவது நாளாக சமர் நடைபெறுவது குறிப்பிடத்தக்கது.

நேற்றைய மோதலில் மட்டும் சுமார் 20பொது மக்கள் காயமுற்று முல்லைத்திவு ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவர்களில் இரண்டு உயர் அதிகாரிகள் உட்பட எட்டுப் பேர் அரசாங்க ஊழியர்கள் என்றும் பரவலாகப் பேசப்பட்டது. உயிர்ச்சேதம் பற்றிய விவரம் எதுவும் அறியமுடியவில்லை.

நேற்றைய தாக்குதல் சம்பவங்களை அடுத்து இராணுவ உயர்அதிகாரிகள் முல்லைத்திவுக்கு விரைந்தனர்.

இரவோடு இரவாகப் படைவீரர்கள் ஹெலிக்கொப்டர்மூலம் முல்லைத்திவில குவிக்கப்படுவதாகவும் தெரியவருகிறது.

ஹெலிக்கொப்டர் விமானத் தாக்குதல்களினுலும், மோட்டார் ஷெல் தாக்குதல்களினுலும் பெருந்தொகையான வீடுகள் சேதமடைந்திருக்கின்றன.

முகாமைச் சுற்றியுள்ள மூன்றுமைல் சுற்று வட்டாரத்தில் வதியும் மக்கள் அச்சத்தால் வீடுகளை விட்டு வெளியேறி விட்டனர்.

## தொடர்ந்து ஊரடங்கு

கொழும்பு, பெப். 1

நுவரெலியா மாவட்டத்தைச் சேர்ந்த ஒன்பது பிரதேசங்களில் ஊரடங்குச் சட்டம் தொடர்ந்து நடைமுறையில் இருந்தது.

நேற்று இரவு 7 மணி முதல் இன்று காலை 6 மணிவரை ஊரடங்கு அமுலாகி இருந்தது.

# குடியுரிமை சட்டம் நிறைவேறியது

## ஆதரவு: 130; எதிர்ப்பு: 9

கொழும்பு, பெப். 1

மலையகத் தமிழருக்குக் குடியுரிமை வழங்கும் சட்டமூலம் நேற்று நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

இரண்டாம் வாசிப்பின்போது 130 வாக்குகள் ஆதரவாகக் கிடைத்தன. 9 வாக்குகள் எதிராகக் கிடைத்தன.

களனி எம்.பி.யும் முன்னுள் அமைச்சருமான திரு. சிறில் மத்தியூ எதிர்த்து வாக்களித்தார்.

அவரின் மகனும் கொலன்ன எம். பி. யும் மாவட்ட அமைச்சருமான திரு. நந்தா மத்தியூ ஆதரவாக வாக்களித்தார்.

கலவான எம். பி. திரு. சரத் முத்தெட்டுவேகம சட்டத்தை ஆதரித்து வாக்களித்தார்.

விவாதத்தின் கடைசிக் கட்டத்தில் அத்தனகலை எம். பி. திரு லக்ஷ்மன் ஜயக்கொடி அடிக்கடி குறுக்கிட்டுக் கொண்டிருந்தார்.

இப்படி தொடர்ந்து

(8 ஆம் பக்கம் பார்க்க)

## மாநில சுயாட்சியே தீர்வுக்கு ஒரேவழி

### எச். என். பெர்ணுண்டோ உறுதி

யாழ்ப்பாணம், பெப்.1

மாநில சுயாட்சி வழங்குவதன் மூலம்தான் தமிழர் பிரச்சினைக்கு தீர்வுகாணமுடியும்.

இதற்கான பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கு ஏற்ற சூழ்நிலையை இலங்கை அரசு உருவாக்க வேண்டும்.

அப்படிப்பட்ட அமைதிச் சூழ்நிலையை உருவாக்க அரசு முதல் கட்டமாக பாதுகாப்பு வலயங்களை அகற்ற வேண்டும்.

வடக்கு, கிழக்கில் உள்ள இராணுவமுகாம்களை அகற்ற வேண்டும். எல்லாத் தமிழ் அரசியல் கைதிகளையும் விடுதலை செய்ய வேண்டும்.

இப்படி இலங்கை ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் திரு. எச். என். பெர்ணுண்டோ சொன்னுர்.

இப்படி திரு. பெர்ணுண்டோ உதயனுக்கு அளித்த பேட்டியில் சொன்னுர்.

## பாப்பசர் இந்தியா விஜயம்

கொழும்பு,பெப் 1

புனித பாப்பரசர் இரண்டாவது அருளப்பர் சின்னப்பர் இரண்டுவார கால விஜயத்தை மேற்கொண்டு இன்று சனிக்கிழமை இந்தியாவருகிறுர்.

யாழ்ப்பாணத்தில்

## இ.போ.ச. -- மினிபஸ் பிரச்சினை தீர்ந்தது

யாழ்ப்பாணம்,பெப்,1

வடபிராந்திய போக்குவரத்துசேவையினருக்கும் தனியார் வாகன சேவையினருக்கும் இடையில் நிலவி வந்த பிரச்சினை சுமுகமான முறையில் தீர்த்துவைக்கப் பட்டது. இளைஞர் இயக்கங்கள் பலவும் எடுத்துக் கொண்ட முயற்சியினுல் இது சாத்தியமானது.

இனிமேல் வடபிராந்திய போக்குவரத்து சபையின் பஸ்களை நிறுத்துவதற்கு ஒதுக்கப்பட்ட பகுதிக்குள் தனியார்மினி பஸ்கள் செல்லக் கூடாது என்ற தீர்வுக்கு இருசாராரும் இணங்கிக் கொண்டனர்.

இந்த முடிவை மீறுவோர்மீது தக்க நடவடிக்கை எடுப்பது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

இரு பிரிவினருக்கும் இடையில் உள்ள பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக நேற்று நடத்தப்பட்ட விசேட கூட்டம் ஒன்றில் இவ்முடிவுகள்மேற்கொள்ளப்பட்டதாக அறியப்படுகின்றது.

## சுபநேரம்

1.2.1986

சனிக்கிழமை

சுபநேரம்: 3.36முதல் 5.06 வரை

ராகுகாலம்: 9.36 முதல் 11.06 வரை

இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

★ குடாநாட்டில்

## பிரார்த்தனைப் போராட்டம் 12-ஆம் திகதி நடைபெறும்

### வீட்டை விட்டு வெளியேறவேண்டாம்

—சஞ்சீவி செய்தியாளர்:- க. இரத்தினராஜசிங்கம்—

யாழ்ப்பாணம், பெப்.1

வீடுகளை விட்டு வெளியே வராமல் உள்ளே இருந்துகொண்டு பிரார்த்தனையில்ஈடுபடும் புதுவித போராட்டம் எதிர்வரும் 12ஆம் திகதி நடத்தப்படும்.

யாழ். குடாநாட்டில் அன்றைய தினம் 24மணி நேரமும் பொதுமக்கள் வீட்டை விட்டு வெளியே வரக்கூடாது என்று கேட்கப்பட்டிருக்கிறது.

இனப் பிரச்சினைக்கு அரசு உடனடியாக தீர்வு காணவேண்டும் எனக் கோரியே இந்தப் போராட்டம் நடத்தப் படுகிறது.

இத்தினத்தில் குடாநாட்டில் உள்ள சகல அரசாங்க, தனியார்,கூட்டுத்துறை ஊழியர்கள் வேலைக்குச் செல்லமாட்டார்கள்.

ஆஸ்பத்திரிகள், பாடசாலைகள், வங்கிகள், போக்குவரத்துக்கள், தபால் சேவைகள், வர்த்தகக் கடைகள் எதுவும் இயங்க மாட்டாது.

அரசாங்கஊழியர்கள், தனியார்துறை ஊழியர்கள் வீடுகளிலேயே தங்கி இருப்பர்

நேற்று தொழிற்சங்க, சமூக, வர்த்தக அரசு துறையைச் சேர்ந்த பிரமுகர்கள் கலந்து கொண்ட குழுக் கூட்டத்தில் இத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

பிரார்த்தனை இயக்கத்தை வழி நடத்திச் செல்வதற்கு குழுஒன்றும் அங்கு தெரிவு செய்யப்பட்டது.

இந்த இயக்கத்திற்கு சகல பொதுமக்களும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் எனவும் கூட்டத்தில் கோரிக்கை விடுக்கப்பட்டது

## செய்திச் சாரம்

### தொண்டமானுறில் குண்டுச் சத்தம்

யாழ்ப்பாணம், பெப். 1

தொண்டமானுறு இராணுவ முகாமிலும் அதன் அயலில் உள்ள பகுதிகளிலும் நேற்றுப் பிற்பகல் சிலமணி நேரம் துப்பாக்கி, குண்டு வெடிப்புச் சத்தங்கள் விட்டு விட்டு கேட்டுக் கொண்டிருந்தன.

இதனுல் அப்பகுதியில் உள்ள மக்கள் பாதுகாப்பான இடங்களை நாடிச் சென்றனர்.

அந்த பகுதியில் போராளிகள் ஆயுதங்கள் சகிதம் ரோந்துச் சேவையில் ஈடுபட்டதாகத் தெரிகிறது.

### டாக்டர்கள் வேலை நிறுத்தம்

கொழும்பு, பெப். 1

கொழும்பு பெரியாஸ் பத்திரியைச் சேர்ந்த டாக்டர்கள் நேற்று வேலை நிறுத்தம் செய்தனர்.

சம்பளப் பிரச்சினையை முன் வைத்தே அவர்கள் வேலை நிறுத்தம் செய்திருந்தனர்.

### ஜனதிபதி டாக்டர்களுக்கு எச்சரிக்கை

கொழும்பு, பெப். 1

டாக்டர்கள் தொடர்ந்து வேலை நிறுத்தம் செய்தால் வெளிநாட்டில் இருந்து டாக்டர்களை அழைப்போம்.

அது மட்டுமன்றி அரச டாக்டர்கள் தனிப்பட்ட சேவை செய்வதற்குத் தடை விதிக்கப்படும்.

இவ்வாறு ஜனதிபதி திரு. ஜே. ஆர்.ஜெயவர்த்தன நேற்று எச்சரிக்கை விடுத்தார்.

### நாடாளுமன்ற கூட்டத் தொடர் நேற்றேடு ஒத்திவைப்பு

கொழும்பு, பெப். 1

நாடாளுமன்றக் கூட்டத்தொடர் நேற்றேடு ஒத்திவைக்கப்பட்டது.

புதிய கூட்டத்தொடர் இம்மாதம் 20-ஆம் திகதி ஜனதிபதியால் ஆரம்பித்து வைக்கப்படும்.

இந்த விவரங்களை சபாநாயகர் திரு. ஈ. எல். சேனநாயக்கா நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

நாடாளுமன்றகூட்டத் தொடரை ஜனவரி 24 ஆம் திகதி ஒத்திவைக்க முன்னர் ஏற்பாடாகி இருந்தது. எனினும் குடியுரிமைச் சட்டத்தை நிறைவேற்றும் பொருட்டு அது ஜன.30 31-இல் கூடவேண்டி இருந்ததால் அவ்வாறு செய்யப்படவில்லை.

### மேலும் 100 பேர் வவுனியாவில் கைது

வவுனியா, பெப். 1

வவுனியாவில் நேற்றும் தொடர்ந்து நடைபெற்ற தேடுதலில் சுமார் நூறு பேரை பாதுகாப்புப் படையினர் தம்முடன் அழைத்துச் சென்றனர்.

இதனுல் கடந்த 5 நாட்களாக இடம்பெற்ற தேடுதல் வேட்டையில் இராணுவப் பிடியில் சிக்கியவர் எண்ணிக்கை 400 க்கும் அதிகமாக உயர்ந்தது.

கைது செய்யப்பட்டவர்களில் அதிகமானேர் மாணவர்கள். இவர்கள் அனைவரும் தொடர்ந்து

(8 ஆம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சிக்கு

# "சலஞ்ஜர்" ஒரு சவால் ஆனது!

## விண்ணில் நிகழ்ந்த கோரவிபத்து

செவ்வாய். காலை 11 - 40 கென்னடி விண்வெளி நிலையம் பரபரப்பாக இயங்குகிறது.

"சலஞ்ஜர்" விண்கலம் வானவெளிக்குச் செல்ல தயாராக உள்ளது.

கட்டுப்பாட்டு நிலையம் 'சலஞ்ஜரி'னுள் உள்ள வீரர்களுடன் தொடர்பு கொள்கிறது.

சலஞ்ர் வர்ணனையாளர்: 10,9,8,7,6 பிரதம என்ஜின் இயங்குகிற - 5,4,3,2,1 மேலே எழும்புகிறது.

மைக்கல் ஸ்மித்: ரோல் புரோகிராம்

மிஷன் - கட்டுப்பாடு: ரோஜர் ... ரோல் புரோகிராம்.

வர்ணனையாளர்: ரோல் புரோகிராம்... உறுதிப் படுத்தப்படுகின்றது! என்ஜின்களின் வேகம் 94சத வீதத்துக்கு குறைந்து வருகிறது.

இப்படியான பயணத்துக்கு 104 சத வீதம் வேகம் இருக்க வேண்டும். மூன்று என்ஜின்கள் நல்லபடி இயங்குகின்றன. மூன்று எரிபொருள் செல்கள் நல்லாக உள்ளன. நல்ல நிலையில் 3 துணை மின்யூனிட்டுக்கள் உள்ளன.

ஓட்டத்தின் வேகம்: ஒரு விநாடிக்கு 22,057 அடி. (ஒரு மணித்தியாலத்திற்கு 2,240 கிலோ மீட்டர் அல்லது 1,400 மைல்) சமுத்திர மட்டத்தில் இருந்து 4.3 நோட்டிக்கல் மைல்கள்.

என்ஜின்களின் வேகம் கூடுகிறது. மூன்று என்ஜின்களின் வேகம் 140 சத வீதமாக வருகிறது.

கட்டுப்பாட்டு நிலையம்: சலஞ்ஜர், வேகத்தைக் கூட்டவும்.

ஸ்மித்: ரோஜர், வேகத்தைக் கூட்டவும் (அமைதி - தீப்பந்தம்)

வர்ணனையாளர்! பயணக் கட்டுப்பாட்டாளர்கள் நிலைமையை தீவிரமாகக் கண்காணிக்கிறுர்கள்.

தெளிவாகவே இது பெரிய இயந்திரக் கோளாறு. கீழ்தொடர்பு ஒன்றும் நம்மிடம் இல்லை.

இது தான் சலஞ்ஜர் மாலுமிகளுடன் கடைசியாக நடந்த உரையாடல்.

அதன் பின்னர் வானத்தில் தீப்பந்து தோன்றிச் சிதறியது.

120 கோடி டாலர் செலவில் செய்யப்பட்ட 100 தொன் நிறையுள்ள சலஞ்ஜர் பூமியில் இருந்து 10 மைல் மேலே வானவெளியில் தூள் தூளாக வெடித்துச் சிதறியது.

இந்த சலஞ்ஜர் விண்வெளிக் கலத்தினுள் அச்சமயம் 5 ஆண்களும் 2 பெண்களும் இருந்தனர்.

கென்னடி விண்வெளித் தளத்தில் இருந்து வானவெளியை நோக்கிப் புறப்பட்ட 72 ஆவது விநாடியில் சலஞ்ஜர் விபத்துக்குள்ளானது.

அந்தக் கோரக் காட்சியை சலஞ்ஜரில் இருந்த சங்கீத ஆசிரியையான கிறிஸ்டா மக்கோனிப்

**- எஸ். ஜி. -**

பின் பெற்ருேர்கள் கண் கலங்க, மனம் அதிரப் பார்த்துக் கொண்டிருந்தனர்.

இந்த விண்வெளிக் கலம் 'சலஞ்ஜர்' எப்படிப் பட்டது?

அமெரிக்கா வைத்துள்ள விண்வெளிக்கலங்களிலே இது மிகவும் திறமையாகச் செயல்பட்ட கலம் என்று மதிப்பிடப் பட்டது.

அமெரிக்காவில் உள்ள நான்கு இறகுகளைக் கொண்ட விண்கலங்களில் 'சலஞ்ஜர்' இரண்டாவது ஆகும்.

ஆயிரம் கோடி டாலர் விண்கலத் திட்டத்தில் 'சலஞ்ஜர்' முக்கிய பணி ஆற்றி வந்தது.

ஒன்பது தரம் உலகை வெற்றிகரமாக வலம் வந்த பெருமையும் 'சலஞ்ஜரு'க்கு உண்டு.

பரிசோதனைக் கலமாகத் தான் 'சலஞ்ஜர்' அமைக்கப்பட்டது. கொலம்பியா செயற்கைக் கோள் வெற்றிகரமாக வானவெளிக்கு அனுப்பப்பட்ட பின்னர் 'சலஞ்ஜர்' ஷட்டில் கலமாகப் பயன்படுத்தப் பட்டு வந்தது.

சலஞ்ஜரின் நீளம் 122 அடி; இறகு அகலம் 78 அடி. வானத்தில் பறக்கக்கூடியதாகவும் நிலத்தில் தாளுகத் தரையிறங்கவும் கூடியதாக இது அமைக்கப்பட்டு இருந்தது.

தாளுகத் தரையில் இருந்து மேல் எழும்பக் கூடியதாக இது அமைக்கப்படவில்லை.

கலத்தின் இரண்டு பக்கத்திலும் பூஸ்டர் ரொக்கட்டுக்கள் இணைக்கப்பட்டிருந்தன.

அந்த ரொக்கட்டுக்கள் தான் கலத்தை, பூமியின் ஈர்ப்புச்சக்தியில் இருந்து விடுபடச் செய்கிறது.

எரிபொருள் அடங்கிய கட்டுறுதி அமைப்புக் கொண்ட இரண்டு விசை தள்ளிகள் (பூஸ்டர்கள்) இரண்டு நிமிடங்களுக்கு இயங்கும். அதே சமயத்தில் மூன்று பிரதான என்ஜின்கள் மேலெழும்பக் கூடியதாக 8 நிமிடங்கள் வேலை செய்யும்.

கலம் மேல் எழும்புவதற்கு உதவும் பூஸ்டர் ரொக்கட்டுக்கள் பிரமாண்டமான எண்ணெய்க் குதத்துடன் இணைக்கப்பட்டிருக்கும். அந்தக் குதத்தில் 7 லட்சம் கிலோ கிறும் திரவ எரிபொருள் இருக்கும். 3 பிரதான என்ஜின்களுக்குத் தேவையானவைதான் இந்த எரிபொருள்.

'சலஞ்ஜர்' அடிக்கடி வானவெளிக்கு ஷட்டில் பயணங்களை நல்லபடியாகவே மேற்கொண்டு வந்தது.

ஆனல் பத்தாவது முறையாக வானவெளிக்குப் புறப்பட்ட சலஞ்ஜரின் பயணம் பரிதாபமாக கடந்த செவ்வாய்க்கிழமை காலை முடிந்தது.

சலஞ்ஜரில் பயணஞ் செய்த ஏழு விண்வெளி வீரர்களில் எவராவது உயிர் தப்பி இருக்க முடியுமா?

உயிர் தப்பக்கூடிய சாதனங்களான பரசூட், வேறு உபகரணங்கள் சலஞ்ஜரில் பொருத்தப் பட்டிருக்கவில்லை — இப்படி விமானப்படை கேர்ணல்சூல்ட்ஸ் சொன்னுர்.

'சலஞ்ஜர்' கடந்த ஞாயிறு விண்வெளிக்கு அனுப்பப்படுவதாக இருந்தது.

பாதகமான காலநிலை, சிறு தொழில் நுட்பக் கோளாறுகள் காரணமாக இரண்டு தினங்களுக்கு அப்பயணம் ஒதுக்கி வைக்கப்பட்டது.

செவ்வாய்க்கிழமை இக்கலம் மீண்டும் 2 மணித்தியாலங்கள் தாமதமாகவே வானவெளிக்கு அனுப்பப்பட்டது.

'சலஞ்ஜர்' விபத்தில் மரணமானவர்கள்;

1. கமாண்டர் பிரான்க் 'டிக்' ஸ்கோபீ
2. விமானி மைக்கல் ஸ்மித்
3. குழு நிபுணர் டாக்டர் ஜூடி ரெஸ்னிக் (பெண்)
4. எலிசன் ஒனிசுக்கா
5. டாக்டர் ரொனல்ட் மக்நர்
6. திருமதி கிறிஸ்டா மக் கோனிப் (சங்கீத ஆசிரியை)
7. கிரெக் ஜார்விஸ்

இந்த விபத்துக்கு என்ன காரணம் என்று கூறமுடியாது என்று நாஸா இயக்குநர் ஜெஸி மூர் சொன்னுர்.

'சலஞ்ஜர்' வானில் சிதறிய பின்னர் இயக்குநர் ஜெஸி மூர் செய்தியாளர்களிடம் சொன்னுர்:

"மிகுந்த கவலையுடன் உங்கள் மத்தியில் பேசுகிறேன்.

"காலை 11.40 மணியளவில் வானவெளிக்குப் புறப்பட்ட ஒன்றரை நிமிடங்களில் சலஞ்சர் விபத்துக்குள்ளாகி விட்டது."

விண்வெளி வீரராக இருந்து பின்னர் செனட்டரான ஜோன் கிளென் இவ்விபத்து பற்றி வெளியிட்டத் தத்துவார்த்தமான கருத்து இது:

"எமது வாழ்க்கையில் வெற்றியும் வரும்; துன்பமும் வரும். சில சமயம் நாம் பூரணத்துவமாக இருக்கலாம். அச்சமயத்தில் மனதை பாதிக்கக் கூடியதான துன்பங்களும் வரும்" —

இப்படி அமெரிக்காவின் முதல் விண்வெளி வீரர் சொன்னுர்.

சலஞ்ஜர் விபத்து அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சிக்கே ஒரு 'சலஞ்ஜ்" ஆக வந்து விட்டது.

### வான வெளியில் இறந்தவர்கள்

'சலஞ்ஜரி'ல் இறந்தவர்களுடன் வான வெளியில் இறந்தவர்கள் தொகை இத்துடன் 14 ஆக அதிகரித்துள்ளது.

3 அமெரிக்க விண்வெளிவீரர்களும் 4 சோவியத் வீரர்களும் முன்னர் வானவெளியில் விபத்துக்குள்ளாகி மரணமானுர்கள்.

1967 ஜனவரி 27இல் அப்போலோ கலத்தினுள் மூன்று அமெரிக்க விண்வெளி வீரர்கள் எரிந்து மரணமானுர்கள்.

மூன்று மாதங்கள் கழிந்து சோவியத் விண்வெளி வீரர் விலாடிமிர் கொமாவ சோயுஸ் கலம் 1 பூமிக்குத் திரும்புகையில் வெடித்ததினுல் மரணமானுர்.

1967 ஜூன் 29இல் மூன்று சோவியத் விண்வெளி வீரர்கள் ஜோர்கை டொபொரொவல்ஸ்தி, விளடிமிர் வொக்கோவ், விக்டர் பாஸவ் ஆகியவர்கள் வானவெளியில் இருந்து பூமிக்குத் திரும்புகையில் மூச்சுத்திணறி சோயுஸ் கலம் 11 இனுள் மரணமானுர்கள்.

# நித்திரை மனிதனுக்கு உணவு போன்றது

## அது இல்லையேல் அறிவு குன்றிவிடும்

உறக்கம் உடல் வளர்ச்சிக்கு மிக அவசியமானது. வாழ்வுக்கு விழிப்பு எவ்வளவு அவசியமோ அவ்வளவு அவசியம் உறக்கம் என்கின்றனர் உளநூல் வல்லார்.

உறக்கம் என்பதுஉடல் ஒய்வு கொள்ளுவதற்குச் சிறந்ததொரு சாதனம். சமமான ஓய்வுக்குப் பின் நடைபெறும் உழைப்பு மிகத் திறமையுள்ளதாக இருக்கும்.

தூக்கமும் சாவும் இரட்டைக் குழந்தைகள் என்பது நம் முன்னேர் கூறும் கருத்து. இதில் பெரியதோர் உண்மையும் இருக்கத் தான் செய்கின்றது.

ஒரு மனிதன் தூங்கும்போது அவனது உடலுறுப்புக்கள் செயல்படுகின்ற விதத்தைப் பார்த்தால் இந்த உண்மை தெரிகின்றது. ஒரு மனிதன் சாதாரணமாக 4மணி நேரம் உறங்கிய பின் அவனது உடல் உறுப்புக்களெல்லாம் தங்களது செயலைச் சிறிதளவாகக் குறைத்துக் கொள்கின்றன.

உறங்கும் பொழுது இரத்த அழுத்தம் குறைகிறது. இரத்தத்தின் ஓட்டமும் நாடித்துடிப்பும் உணவைச் செறிக்க வயிற்றில் சுரக்கும் நீர்களும் செயலில் வேகம் குறைகின்றது. மூச்சு விடுவதும் மெதுவாக நடைபெறுகிறது. விழித்துக் கொண்டிருக்கும்போது உள்ளே இழுக்கும்காற்றின் அரைவாசியே உறங்கும்பொழுது உள்ளே இழுக்கப்படுகின்றது. தசைகள் வேலை செய்யாமல் ஒய்வு கொள்கின்றன. சிறுநீர்ப்பையில் சேரும் நீரின் அளவு குறைகிறது. இதன் காரணமாக உடலின் நீர் வியர்வையாக வெளியேறுகின்றது. எனவே உறங்கும்பொழுது வியர்வை அதிகமாகிறது.

பல நாட்கள் தூங்காமலே ஒரு மனிதன் இருக்க முடியாது. அவ்வாறு இருந்தால் விழிப்பின் காரணமாக உடல் அசதியாக இருக்கும். மனநிலை சிறு தடுமாற்றமுறும். சில படை வீரர்களைத் தூங்காமல் விழித்திருக்கச் செய்து ஆராய்ந்த பொழுது பல மாற்றங்கள் தென்பட்டதாக ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர். தூங்காமை காரணமாக இவர்களின் நினைவாற்றல் குறைவதையும் கவனக் குறைவால் ஒன்றுக்கொன்று சம்மந்தமில்லாமல் பேச்சைப் பேசுவதையும் காரணமில்லாமல் சிரிப்பதையும் கண்டனர்.

இவ்வாறுதான் தூக்கமின்மையால் மனிதனின் அறிவுத்திறனும் பாதிக்கப்படுகிறது. தங்கள் அறிவைப் பயன்படுத்திச் செய்கின்ற சிறிய வேலையையும் அவர்கள் தூக்கமின்மையால் சரிவரச் செய்வதில்லை.

வேலை செய்வதில் பெருமளவு மந்தம் ஏற்படுகிறது. தசைகளில் உறுதிகுறைகிறது. ஆனல் தூங்கி விழித்தபின் தசைகளின் உறுதியையும் மனநிலைஅமைதியையும்பெறுகிறது. நித்திரை மனிதனுக்கு உணவுபோல அவசியமானது.

மற்றப் பிராணிகளை விட மனிதனின் இயல்பு விழிப்பையும் தூக்கத்தையும் மாறிமாறி அனுபவிப்பதாகும். பகலில் விழித்துக்கொண்டுவேலை செய்கிறவர்கள் இரவில் தூங்கி இளைப்பாறுவதே மனித இயல்பு. ஆனல் இரவில் தொழில் செய்பவர்கள் பகலில் தூங்குவதும் இயல்பு. சாதாரணமாக இருபத்திநாலு மணி நேரத்தில் எட்டு மணி நேரம் தூங்குவது மிக அவசியமானது.

ஒருவருக்குத் தூக்கத்திற்கு உறுதுணையாக இருப்பவை உடலுக்கும் உள்ளத்திற்கும் ஓய்வு. ஆடாத அசையாத வசதியான படுக்கை இருட்டு, அமைதி, வசதியான வெப்பநிலை முதலியன. அமைதியும் இருட்டும் உடலின் உறுப்புகளின் இயக்கத்தைத் தூண்டாதன. இவையே தூக்கத்திற்கு அத்தியாவசியத் தேவையானது. சிலர் தூங்காமல் வேலை செய்வதற்காக காப்பி,தேயிலை கொக்கோ முதலியவற்றை உட்கொள்வதுமல்லாமல் மருந்துவகைகளையும் பாவிக்கிருர்கள். சிலர் தூக்கத்தைக் கொடுப்பதற்காக, "வெரோனல்' அபினிலிருந்து எடுக்கப்படும் மார்பைன், கோடீன்" போன்ற மருந்து வகைகளைப் பாவிக்கிருர்கள். இவ்விரண்டு வகையான பொருள்களும் நரம்பு மண்டலத்தையே பாதிக்கின்றன. விழிப்பைக் கொடுக்கும் பொருள்கள் நரம்பு மண்டலம் தூங்குகின்ற சிறுமூளையின் பகுதியைத் தூண்டுகிறது. இதுபோலவே தூக்க மருந்துகள் நரம்புமண்டலத்தின் செயலைக் குறைக்கிறது. எனவே இது காரணமாகத்தான் தூக்கம் ஏற்படுவதில்லை. தூக்கத்திற்கு உறுதுணையான மற்ற வசதிகள் அமையும் போதும். நரம்பு மண்டலத்தின் வேலை குறையும் போதும் தூக்கம் தானுகவே வருகிறது. தூங்குவதற்கு வசதி கொஞ்சமும் இல்லாத சூழ்நிலையில் தூக்கமருந்துகள்—அர்த்தமற்றது, பயன்படாது.

விழிப்பு மருந்துகளையும் தூக்க மருந்துகளையும் அடிக்கடி பயன்படுத்துவதால் உடலுக்குக்கெடுதியே தவிர நன்மை பயக்காது. உடல் வெப்பநிலையின் ஏற்ற இறக்கத்தை மட்டுப்படுத்துவதிலேயே பயன் உண்டு. இதற்கு ஒழுங்குவிதியைக் கடைப்பிடித்தலே விரும்பத்தக்கது.

நன்றி;—உன்னைப்பற்றி.

# துப்பாக்கிக் குண்டு பாய்ந்தால் செய்வதற்கு சில முதலுதவிகள்

கை, கால்களில் குண்டு (துப்பாக்கிரவை) பாய்ந்து விட்டால்......

1. காயத்திலிருந்து இரத்தப்போக்கு அதிகமாக இருந்தால் இரத்தப்போக்கைக் கட்டுபடுத்த வேண்டும்.

இரத்தப்போக்கை கட்டுப்படுத்துவது எப்படி?

1. காயம் பட்ட இடத்தைச் சிறிது உயர்த்திப் பிடிக்கவும்.

2. சுத்தமான ஒரு துணியை (துணி எதுவும் இல்லா விட்டால் உங்கள் கையை) நேரடியாகக் காயத்தின் மீது வைத்து இரத்தப் போக்கு நிற்கும் வரை அழுத்திப் பிடித்துக் கொண்டிருக்கவும். 15 நிமிடங்களோ சில சமயங்களில் ஒரு மணி நேரமோ அல்லது அதற்கும் அதிகமாகவோ இவ்வாறு செய்ய வேண்டி இருக்கலாம்.

3. காயத்தின் மீது அழுத்திப்பிடித்தும்கூட இரத்தப்போக்கு கட்டுப் படாமல், அதிகமாக வந்து கொண்டிருந்தால்:

காயத்தின் மேல் தொடர்ந்து அழுத்திப் பிடித்துக் கொண்டிருக்கவும்.

காயம்பட்ட பகுதியை எவ்வளவு முடியுமோ அவ்வளவு உயர்த்திப் பிடிக்கவும்.

காயத்திற்கு சற்றுத் தள்ளி மேல்பகுதியில் கட்டுப் போடவும் இரத்தப்போக்கு கட்டுப்படும் வகையில் கட்டை இறுக்கவும். கை அல்லது கால் நீலமாகக் மாறும் அளவுக்குக் கட்டை இறுக்க வேண்டாம்.

கட்டுப் போடுவதற்கு மடித்த துணியையோ அல்லது அகலமான 'பெல்ட்டை'யோ பயன்படுத்தவும். மெல்லிய கயிறு, நைலோன், பிளாஸ்ரிக் கயிறு முதலியவற்றை ஒரு போதும் பயன் படுத்தக் கூடாது.

**கவனிக்க வேண்டியவை:-**

நேரடியாகக் காயத்தின்மீது அழுத்திப் பிடித்தும் கட்டுப்படுத்த முடியாத அளவு இரத்தப் போக்கு கடுமையாக இருந்தால் மட்டுமே கட்டுப்போட வேண்டும்.

கட்டு இன்னும் அவசியமா என்று தெரிந்து கொள்வதற்கும், இரத்த ஓட்டத்திற்கு ஏதுவாகவும் அரைமணி நேரத்திற்கு ஒருமுறை கட்டைச் சற்று நேரம் தளர்த்திவிடவும். வெகு நேரம் கட்டை அவிழ்க்காமல் விட்டுவிட்டால் கையையோ காலையோ அகற்ற வேண்டிய அளவுக்குப் பாதிப்பு ஏற்பட்டு விடலாம்.

இரத்தப் போக்கை நிறுத்த ஒருபோதும்மண், சாணம், மண்ணெண்ணெய், சுண்ணும்பு அல்லது கோப்பித்தூள் பயன்படுத்தாதீர்கள்.

I. காயம்அல்லது இரத்தப்போக்கு கடுமையானதாக இருந்தால் அதிர்ச்சி ஏற்படுவதைத் தடுக்கப் பாதத்தை உயர்த்தித் தலையைத் தாழ்வாக வைக்கவும்.

II. இரத்தப்போக்கு கடுமையாக இல்லாத பட்சத்தில் சற்று நேரத்திற்கு காயத்திலிருந்து இரத்தம் வெளியேறினுலும் பரவாயில்லை. இது காயம் சுத்தமாவதற்கு உதவும்.

III. சோப்பும் கொதிக்க வைத்த நீரும் கொண்டு காயத்தை மேலாக கழுவிச் சுத்தமான கட்டுப்போடவும். குண்டு பாய்ந்த துளையைத் தோண்டாமல் இருப்பது பொதுவாக நல்லது.

IV. வைத்தியரை நாடி சிகிச்சையைப் பெற்றுக் கொள்ளவும்.

**எச்சரிக்கையாய் இருக்க வேண்டியது:-**

● குண்டு ஒருவேளை எலும்பைத் தாக்கியிருக்குமாளுல் எலும்பு முறிந்திருக்கக்கூடும். அடிபட்ட காலோடு நிற்க வைப்பதும், அடிபட்ட கையினுல் எதையும் தூக்குவதும் முறிவை மேலும் மோசமாக்கலாம். முறிவு ஏற்பட்டிருப்பதாகச் சந்தேகப்பட்டால் முறிந்த எலும்புக்கு அணைவரிக் கட்டை வைத்துக் கட்டி விடவும்.

● பல வாரங்களுக்குக் காலை அதிகமாக அசைக்காமல் இருப்பது நல்லது. காயம் கடுமையானதாக இருக்கும் போது காயப்பட்ட பகுதியை மார்பை விடச் சற்று உயர்த்தி வைக்கவும். காயம் பட்டவரை அசையாமல் வைத்திருக்கவும்.

● எலும்பு முறிந்திருக்கும் என்று சந்தேகப் பட்டால் அந்தப் பகுதியைப் பிடித்து அமுக்கி விட வேண்டாம். அப்படிச் செய்தால் அது முறிவை மோசமான தாக்கி குணமடைவதைக் கஷ்டமானதாக்கி விடும்.

**மார்பில் ஆழமான காயங்கள்:-**

மார்பில் ஏற்படும் காயங்கள் மிகவும் ஆபத்தானவையாக இருக்கக் கூடும். உடன் மருத்துவ உதவியை நாடவேண்டும்.

காயம் நுரையீரல் வரை ஆழமாக இருந்து சுவாசிக்கும்போது காயத்திலுள்ள துளையின் வழியாக காற்று உள்ளிழுக்கப்பட்டால் மேற்கொண்டு காற்று உட்செல்லாதபடி உடனடியாகக் காயத்தை மூடவும். 'வசலின்' அல்லது தாவர எண்ணெய் சிறிது எடுத்து வலைத்துணி மடிப்பில் அல்லது சுத்தமான கட்டுத்துணியில் தடவிக் காயத்தின் மீது போட்டு இறுக்கமாக கட்டவும். 'வசலின்' அல்லது தாவர எண்ணெய் இல்லாவிட்டால் சுத்தமான துணியைக் கொஞ்சம் துணிமடிப்பில் வைத்து அதைக் காயத்தின் மீது போட்டுக் இறுக்கமாகக் கட்டவும்.

அதிர்ச்சிக்கான அறிகுறிகள் இருந்தால் அதற்குரிய சிகிச்சை செய்யவும்.

**வயிற்றில் ஆழமான காயங்கள்:-**

வயிற்றைக் கிழித்துக் கொண்டு இரைப்பை அல்லது குடல்வரை செல்லுகின்றஎந்தக் காயமும் ஆபத்தானது. உடனடியாக மருத்துவ உதவியை நாடவேண்டும்.

சுத்தமான கட்டுத்துணி கொண்டு காயத்தை கட்டவும் குடல் வெளியே வந்திருந்தால் சிறிதளவு உப்புக்கலந்த கொதிநீரில் நனைத்த சுத்தமான துணியால் அதை மூடவும். குடலை மீண்டும் உள்ளே தள்ள நீங்கள் முயற்சிக்க வேண்டாம்,

காயம்பட்டவர் அதிர்ச்சியுற்றிருந்தால் தலைக்கு மேல் கால்களை உயர்த்தி வைக்கவும். வாய்வழியாக எதையுமே கொடுக்காதீர்கள். உணவு கொடுக்கக்கூடாது. குடிப்பதற்குத் தண்ணீர்கூடக் கொடுக்கக் கூடாது. காயம்பட்டவருக்குத் தாகமாகஇருந்தால் ஈரத் துணியைச்சப்பச் செய்யவும்.

**தலையில் குண்டு பாய்ந்த காயம்:-**

சுத்தமான கட்டுத்

(7-ம் பக்கம் பார்க்க)

## வைத்திய சஞ்சீவி

### பொங்கிச் சாப்பிடுதல்

அநேகமாக எல்லா வீடுகளிலும் சாதத்தை வடித்து விடுகிருர்கள். இதனல் வடி தண்ணீரில் சத்துக்கள் போய் விடுகின்றன. நாம் சக்கையாகிய சாதத்தை மட்டும் உண்பதால் பெரிபெரி போன்ற நோய்களுக்கு ஆளாகிருேம்.

மேற்படி கஞ்சியை ஆட்டிற்கும் மாட்டிற்கும் கொடுப்பதால் அவை புஷ்டியாய் வளர்கின்றன. எனவே அரிசியைப் பொங்கிச் சாப்பிடுவது தான் சிறந்த வழி.

இதனல்தான் தைப்பொங்கல் அன்று சூரிய வெளிச்சத்தில் புதிதாகக் கிடைத்த அரிசியைப் பாத்திரங்களில் இட்டுப் பொங்கிச் சாப்பிட்டு மகிழ்கின்ருேம்.

இதைப்போலவே தினமும் செய்யவேண்டும் என்பதை நினைவூட்டுவதற்காகவேதான் நாம் அதை விழாவாக எடுத்து வருகின்றேம். கம்பு, [illegible] இப்படிப் பொங்கிச் சாப்பிடுவதால்தான் அவர்கள் திடகாத்திரமாய் இருக்கிறுர்கள். [illegible]


## உடுவில் மகளிர் கல்லூரி

(FURTHER EDUCATION PROGRAMME)

பயிற்சி நெறி

1. I.A.B. — Preliminary, Intermediate, Final
2. HOME ECONOMICS — Dress Making, Flower Making, Cake Making & Icing.
3. NATIONAL CERTIFICATE IN ENGLISH

விடுதி வசதி உண்டு.

ஆரம்ப திகதி: 5—2—86

உடுவில், சுன்னுகம்.

இயக்குநர்
உடுவில் மகளிர் கல்லூரி.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# ஞானச்சுடராய் விளங்கிய வீரத்துறவி விவேகானந்தர்

ஒரு நாடு வளம் பெற சந்நியாசிகளுடைய திருக்கூட்டம் பெருக வேண்டும். மக்களின் எதிர்காலம் வளம் பெற அந்நாட்டில் துறவும் சேவையும் ஓங்க வேண்டும். ஒவ்வொரு தனிமனிதனும் சுயநலம் மிக்கவனுக வாழ்கின்றன். பணம் படைத்தவர்கள் எளிய மக்களைக் கண்ணெடுத்துப் பார்ப்பதில்லை. துறவு என்றால் அகத்துறவு என்றும் புறத்துறவு என்றும் இரு வகைப்படும். மனத்தில் காமினி காஞ்சனப் பற்றைத் துறக்க வேண்டும் என்று ஸ்ரீராமகிருஷ்ணர் வலியுறுத்தியுள்ளார். புறத் துறவுக்கு இலக்கணமாகக் காவிதரித்து மொட்டையடித்து இருத்தலாகும். சுவாமி விவேகானந்தர் இத்துறவு வரிசையில் யாபெரும் துறவியாவார்.

எமது யாழ்ப்பாணக்குடா நாட்டிலே துறவறத்தைப் பற்றி ஒரு தவறுன கருத்து நிலவி வருகிறது. குடும்ப வாழ்க்கையை நடத்தி, பின்பு துறவு பூணுவது சாலச் சிறந்தது என்பதாகும். இது முற்றிலும் பிழையான கருத்தாகும். உலக ஆசா பாசங்களைத் துறக்க முடியாதவர் வேறு என்ன செய்யக் கூடும். அவர் மனைவி மக்கள் என்ற சேற்றில் புதைந்து தான் வாழ வேண்டும். வேறுவழி இல்லை. உலக சேற்றில் உழன்று பின்பு சந்நியாசஆச்சிரமத்தைத் தழுவுவது நன்று, ஆனால் இப்படி வழிவந்த சந்நியாசி தனக்குத்தான் மோட்சத்தைத் தேடமுடியும். இவரால் உலக மக்



களுக்குச் சேவையாற்ற முடியாது.

துறந்தார் பெருமையைத் திருவள்ளுவர் கூறும் பொழுது "துறந்தார் பெருமை துணைக் கூறின், வையத்து இறந்தாரை எண்ணிக் கொண்டற்று" என்றார்.

அதாவது துறந்தார் பெருமையை அளவிடற்

## 'எழுமின், விழுமின், கருதிய கருமம் கைகூடும் வரை உழைமின்!'

கரியது என்றார் திருவள்ளுவர்.

ஸ்ரீ ராமகிருஷ்ணர் தேவியிடம் குறையிரந்து வேண்டினார். தாயே உலக ஆசைகளில் அழுந்தியிருப்பவர்களுடன் பேசி வாய் புண்ணுகி விட்டது. தலை கூர்ந்து தாம் பேசுதற்கு அருகதையுள்ளவரை அனுப்பவேண்டும். என்று கசிந்துருகி வேண்டினார். நரேந்திரனைக் கண்டு பேசியதும் அப்புண் தீர்ந்ததை உணர்ந்தார் பிற்காலத்தில் நரேந்திரனைப் பற்றிப் பேசும் பொழுது ஸ்ரீ ராமகிருஷ்ணர் "எனது சுகர்" என்றும், அவர் சுகப்பிரம்ம ரிஷியைப் போன்று பிறவியிலேயே பிரம்மஞானி என்றும் துறவியென்றும் கூறுவதுண்டு.

வேதகாலத்தில் துறவு நெறியைப் பின்பற்றியவர்களுக்கு இரண்டு பெரு நோக்கங்கள் இருந்தன. ஒன்று தாம் முத்தியடைதல்: மற்றொன்று உலக மக்களின் நலத்

★ சுவாமி சித்ருபானந்தா ★

தைப் பேணுதல், காலப் போக்கில் துறவின் மேன்மையை உலகத்தார் மறக்கலாயினர். சுவாமி விவேகானந்தர் தமது ஞானக் காட்சியாலும், நுண்ணறிவின் மாட்சியாலும் துறவின் பெருமையை உலகிற்கு உணர்த்தியுள்ளார்.

துறவி தன் மோட்சத்தை விரும்பக்கூடாது என்பது சுவாமிஜியின் ஆழ்ந்த கருத்தாகும். முதன் முதலில் துறவியானவன் தான் வாழும் சமூகத்தில் அரும் பணியாற்ற வேண்டும். அப்பணிமூலம் துறவியினுடைய மோட்சம் கைகூடும் இப்படியாக சந்நியாசி அரும்பணியாற்று விட்டால் தற்கால பொருளாதார நிலையில் சந்நியாசியால் ஆவதென்ன? சுவாமி விவேகானந்தருடைய வார்த்தையில் "மக்களுடைய அழுகையை நிறுத்தவும், விதவையினுடைய கண்ணீரைத் துடைக்கவும், குழந்தையை இழந்த தாயினுடைய மனத்திற்கு ஆறுதலளிக்கவும், அறிவில்லாத பொது ஜனங்களுக்கு அறிவினை அளித்து நல்வாழ்க்கை நடத்தச் செய்யவும், சமய போதனையினுலே, எல்லோருக்கும் பௌதீக ஆத்மீக நன்மையை அளிக்கவும், அறிவுச் சுடரினைக் காட்டித் துயில் புரிகின்ற பிரமமாகிய சிங்கத்தை எழுப்பவும் சந்நியாசி இவ்வுலகிலே பிறக்கின்றன்.

துறவின் மேன்மையையும், துறவு எதிர்காலத்தில் எப்படி மிளிர வேண்டுமென்பதையும் தாமே அவ்வழி நின்று ஒழுகிக் காட்டியுள்ளார்.

சுவாமிஜி தமது சந்நியாச சகோதரர்களை நோக்கி "நமது வாழ்க்கை ஆத்மாவிற்கு மோட்சமளிப்பதற்கும், உலகத்திற்கு இதத்தினை அளிப்பதற்கும் அமைந்துள்ளது. எதற்காகச் சோம்பிக் கொண்டிருக்கிறீர்கள். எழுந்திருங்கள், விழித்திருங்கள், நீங்களும் விழித்து, மற்றவர்

**சுவாமி விவேகானந்தரின் 124 வது ஜனனதினம் இன்று. அதனையொட்டி இக்கட்டுரை பிரசுரமாகிறது.**

**பருத்தித்துறை ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரம காரியதரிசி சுவாமி சித்ருபானந்தா, சுவாமி விவேகானந்தர் பற்றி இங்கு எடுத்துக் கூறுகிறார்.**

களையும் விழிக்கச் செய்யுங்கள். இவ்வுலக வாழ்க்கை கழிவதற்கு முன் அதனுல் எய்துவதற்குரிய பெரிய நன்மையை அடையுங்கள். எழுந்திருங்கள். விழித்துக் கொள்ளுங்கள். கருதிய கருமம் கைகூடும் வரை தரித்திராது முன் செல்லுங்கள்" என்று ஆத்மீகப் பறையறைந்தார். இப்பேர்ப்பட்ட ஆத்மீக சிங்க நாதத்தை எழுப்பிய மெய்த்துறவி விவேகானந்தர் பதம் பணிவோம்.

## சன்னதம்!

நாமமது தமிழரெனில் மக்களை, இந் நாட்டினிலே,
நாய்போல் சுட்டு
'சேமமுற' தெருவெங்கும் வீசலாம்! ட்ரெயின் ஏற
நின்ற பிள்ளை
'ஆமி' பரி பாஷையிலே பயங்கரமாம்! 'புவத்' அதனை
விழுங்கிக் கக்கும்!
சாமி வரும் அரசாங்கப்பூசாரிக்கு! ஐயாசந்நிதியில் நின்றால்!
பூண்டோடு தமிழரையிந் நாட்டினிலே அழிக்கவொரு
'புனித போரை'
தூண்டி விட்டுப் பதவியிலே தொடர்ந்திருக்கும் அரசாங்கம்,
துணிந்து, குண்டர்
வேண்டுவன தந்துதவும்; கொள்ளையடித் தெரியூட்டிக்
கொலைகள் செய்ய!
மாண்டவரை "மார்க்ஸீய பயங்கரர்கள்" வரிசையிலே
வைத்துச் சொல்லும்!

- ஈழமேகம்

# காந்திஜியின் வேள்வி

## அவரின் கைராட்டை இயக்கம் அதுவே முத்திக்கு மார்க்கம் என்றார்

புலவர் நா. சிவபாதசுந்தரனார்

காந்தியடிகளின் பிறந்தநாளை இந்திய நாடு முழுவதும் கொண்டாடியது இஃது காந்தியடிகளுக்குப் பிடிக்கவில்லை. உடனே அவர் எனது பிறந்தநாளைக் கொண்டாட விரும்பியவர்கள் எனது பெயரைச் சொல்லிக் கொண்டாட வேண்டாம். அதற்குப் பதிலாகச் "சர்க்கா" (கைராட்டினம்) வின் பெயரைச் சொல்லி "சர்க்கா ஜெயந்தி" என்று கொண்டாட வேண்டும் என்று கட்டளையிட்டார். அதன் பிறகு காந்தி ஜெயந்தி "சர்க்கா ஜெயந்தி" யாகப் பெயர் சொல்லிக் கொண்டாடப்பட்டது.

காந்தியடிகளின் இக்கட்டளையின் கருத்து; மனிதனைக் கொண்டாடக் கூடாது. அம்மனிதனின் இலக்கண இலக்கியங்களையே கொண்டாட வேண்டும் என்பதாம்.

காந்திஜியைக் கருதும் போதெலலாம் கைராட்டினத்தை நினைக்க வேண்டும்; கைராட்டினத்தைக் காணும்போது காந்திஜியை நினைக்கவேண்டும் என்பதே "சர்க்கா ஜெயந்தி" என்பதன் உட்கோளாகும். இதனை காந்தியடிகள் பின்வருமாறு விளக்கினார்.

"நான் இராட்டினத்தை என் முத்திக்கு வாயிலாய்க் கருதிய போதிலும் நான் அதைப் பிறருக்கெல்லாம் சுயராச்சியம் பெறுவதற்கு உதவக் கூடிய சிறந்த ஆயுதமாகவும் நாட்டின் பொருளாதார நிலையைச் சீர்திருத்த உதவும் கருவியாகவும் அமைந்துள்ளது என்று சொல்லி வருகிறேன். பிரமச்சரியத்தை அனுஷ்டிக்க விரும்புகிறவர்களுக்கும் நான் இராட்டையையே கொடுத்து வருகிறேன்.

அவர் கைராட்டினத்தை உலகியல் வாழ்வுக்கும் ஆத்மீக வாழ்வுக்கும் உதவக்கூடிய ஒரு பொதுச்சின்னமாகத் தேர்ந்து எடுத்துக் கொண்டார் என்பது தெளிவாகின்றது.

வேள்வி என்பது



"விரும்பிய உழைப்பு" என்பதே பொருளாகும். காந்தியடிகள் விரும்பிய உழைப்பு சத்தியமாகிய கடவுளைச் சார்வதாகும். இதற்கு அவர் எடுத்த தனிமுயற்சி நூல்நூற்றல் ஆகும். பொது முயற்சி தாம் பிறந்த நாட்டு மக்கள் சுயராச்சியம் உடையவராக இருத்தல் என்பதாகும். தன் வாழ்வு பிறர்வாழ்வு ஆகிய இரு நிலை வாழ்வுக்கும் விடுதலை தரும பொருளாகக் கைராட்டினத்தைக் கொண்டார் என்பது மிகத் தெளிவாகின்றது. அவர் நித்திரை விட்டு எழுந்ததும் நித்திரைக்குப் புகு முன்னும் நூல் நூற்காமல் ஒரு நாளாவது இருந்ததில்லை நூல் நூற்றலே அவரின் வழிபாடாகும். வேள்வி என்ற சொல்லுக்கு வழிபாடு என்ற பொருளும் உண்டு.

மனிதனிடம் இயற்கையில் அமைந்த தத்துவங்கள் பலவற்றுள்ளும் "சுதேசி" தத்துவமும் ஒன்றாகும் நாம் அன்னியருக்கு ஆட்பட்டு வாழ்ந்ததால் இந்தத் தத்துவத்தை இப்பொழுது நம் இதயத்திலிருந்து எடுத்துவிட்டோம்.

தன் நாட்டில் தலைக்காத உணவுவகைகளை, தயாரிக்காத உடைவகைகளை நாம் தள்ளி விட முடியவில்லை என்றால் நாம் எப்படிச் சுதந்திர மனிதர்களாக முடியும். "ஆள்வினையே ஆடவரின் உயிர்" என்று பழந்தமிழ்ப் புலவன் ஒரு பெண்ணின் வாயிலாக வெளியிட்ட கருத்து சுதேசியிலே தான் சுயராச்சியம் அமைந்திருக்கிறது என்ற காந்தியின் பொன் போன்ற கருத்தைத் தாங்கியுள்ளது.

நாம் அன்னியரின் அடிமைத் தனத்திலிருந்து அகன்று மானமுள்ள மக்களாக மலர்ச்சி பெற வேண்டுமானுல் முதற்

(7 ஆம் பக்கம் பார்க்க)

## வானம் பொழிந்தது வையகம் அழிந்தது

வானம் பொழிந்தது
பூமி விளைந்தது
வையகம் தளைத்தது
அன்று......
மேகம் இருண்டது
மின்னல் தெறித்தது
மேதினி செழித்தது
நன்று......
ஈனம் புரிந்தவர்
சேனைபடையுடன்
வானம் பறந்துமே
இன்று......
மானத் தமிழின
மக்களின் பூமியில்
குண்டுகள் பொழிந்துமே
கொன்று......
சேனை படையென
யானை யரசிடம்
சிறப்புறு பட்டமும்
வென்று......
ஈனச் செயலினை
எப்பவும் தமிழரில்
இழைத்து வருகுதே
இன்று......

—ஆவூர்க்குமரன்—

# தமது தாயகத்தின் விடுதலைப் போரில் முன்னணியில் நின்ற அன்னையர்

செம்மண் தரை மட்டும் அங்கு சிவந்து காணப்படவில்லை. நெய்தல், மருதம், முல்லை, குறிஞ்சி ஆகிய நான்கு நிலங்களிலும் மண் சிவந்து காணப்பட்டது. தாயக வீரரின் கண் சிவந்து காணப்பட்டது.

தாயகத்தின் மண்ணைக் கவர வேண்டும் என்ற எதிரிகளின் அறம் வழுவிய ஆசையால் தாயகத்தில் வீரப்போர் எழுந்தது. போரிலே பெருகிய குருதி தாயகத்தின் நானில மண்ணையும் சிவப்பாக்கியது.

தாயகத்து வீரர்கள் மட்டுமன்றி முதியோரும் பெண்களும் சிறுவர்களும் கூடத் தமக்கு ஏற்ற முறைகளில் தாயகத்து மண்ணைக்காக்க முன்னின்றனர். தாயகத்து மண்ணின் ஓர் அங்குலத்தைக் கூட அயல்வெறியர் ஆளவிடோம் என்ற உறுதியுடன் அவர்கள் போரில் ஈடுபட்டனர். எதிரிகளை முறியடிப்பதில் அன்னையர் முன்னணியில் நின்றனர்.

அயலவனுடைய படைகள் தாயகத்துக்குட் புகுந்து வீட்டிலும் வீதியிலும் எதிர்ப்பட்ட மக்களையெல்லாம் ஈவிரக்கம் இன்றிக் கொன்று குவித்தன. ஊர்களுக்குள் புகுந்து மக்களின் உடைமைகளைக் கொள்ளையடித்தன; மக்களின் இல்லங்களை எரித்துச் சாம்பராக்கின. தாயக மக்கள் கோபத்தியில் கொதித்தனர்.

அயலவரின் கொடுமை நாளுக்கு நாள் மிகுந்தது. "இன்னுயிர் ஈந்தும் நிலத்தினைக் காப்போம்" என்ற முழக்கம் எங்கும் ஒலித்தது. "நாட்டைக் காக்க வீட்டிற்கு ஒருவர் போர்க்களம் வருக" என்ற அழைப்பு முழக்கம் அதற்கு இணையாக எங்கும் எதிரொலித்தது.

நேற்றுவரை அவர்கள் பாசத்தோடு பேசிய அந்த மண்ணை அயலவன் பறிக்கத் துணிந்துவிட்டான்.

அயலவரும் நம்மவரே. அவர்களோடு நட்புறவுடன் வாழுவோம் என்று மயங்கிக் கிடந்தனர் தாயக மக்கள். அயலவரின் தொழுத கையுள்ளும் ஆற்றல் மிக்க படைக்கருவிகள் ஒடுங்கியிருந்ததைக் கண்ட தாயக மக்கள் அதிர்ச்சி அடைந்தனர்.

எதிரியின் போலித் தனத்தை உணராமல் இன்னு செய்யாமை, கொல்லாமை, உண்மை கடைபிடித்தல் முதலிய தத்துவங்களைப் பேசிப் போர்களங்களைத் துருப்பிடிக்க விட்டோமே என்று ஏங்கினர். புதிய புதிய போர் முறைகளைப் பயிலாது வாளாகிடந்தோமே என்று கவலை கொண்டனர். புதிது புதிதாகப் படைக்கலங்களை திரட்டாமல் பொருளாதார வளர்ச்சியிலும் கல்வியிலும் கலையிலும் மட்டும் ஈடுபடக் காலம் போக்கினேமே என்று

திருச்செந்தூரன்

வருந்தினர். ஆனுல் மறக்குடியிற் பிறந்த அவர்களுக்குப் படைக்கலங்களைத் திரட்டுவதும் படையணிகளை உருவாக்குவதும் கடினமாக அமையவில்லை. தாயகம் எங்கும் போர்க்கோலம். இல்லம் ஒவ்வொன்றும் பாசறை ஆனது.

அன்று எதிரிப்படை போருக்குப் புறப்பட்டு விட்டதை அறிவிக்க முரசுகள் ஒலித்தன.

அந்த இல்லத்து வீரப் பெண்ணின் அண்ணன் போர்க்களத்திற்குப் புறப்பட்டான். அவள் அவனை "வெற்றியோடு மீள்க" என வாழ்த்தி, வெற்றித் திலகமிட்டுப் போர்க்களத்துக்கு அனுப்பி வைத்தாள். போரிலே அவன் வெஞ்சமர் நிகழ்த்திப் பல யானைகளை வீழ்த்தினுன். ஆனுல் எதிர்பாராமல் வந்த எதிரியின் அம்பால் அவன் வீரமரணம் எய்தினுன்.

அவள் உள்ளத்தில் எல்லையற்ற சோகம். அதன்

## (இலக்கியக் காட்சிகள்)

வெளிப்பாடாகச் சில கண்ணீர்த் துளிகள், ஆனுல், எதிரிகளிடமிருந்து தாயகத்தைக் காக்க இது ஒரு சிறிய காணிக்கையே என்று அவள் எண்ணினுள். இனியவை அனைத்தையும் இழக்க அந்த அன்னை துணிந்து விட்டாள்.

மறுநாள் மீண்டும் முரசு ஒலித்தது.

அவளது உயிரினும் இனிய இல்லத் தலைவன் போருக்குப் புறப்பட்டான். அவனையும் அவள் வீரமரபுப்படி தாயகம் காக்கும் போருக்கு அனுப்பி வைத்தாள். அவனும் எதிரிப் படைக்குட் புகுந்து தாக்கி வீறுடன் போரிட்டு விழுப்புண் பெற்று வீரமரணம் எய்தி நடுகல்லானுன்.

மீண்டும் போர்ப்பறை அழைத்தது.

அவளது குடும்பத்தைத் தாங்கிய இரு தூண்களும் சரிந்து விட்டன. ஆனுல், அவளது நாட்டுப்பற்று நிமிர்ந்து, உறுதியாக நின்றது. தாயகத்தின் ஓரங்குலமேனும் அயல் வெறியர் ஆளவிடோம் என்ற எண்ணமே அவளது உள்ளத்தில் நிரம்பி நின்றது.

அவளுடைய குடும்பத்தில் ஆடவன் என்ற பெயருக்கு இருப்பவன் அவளுடைய ஓரே ஒரு மகனே. புலிக்குப் பிறந்தது பூனையாகுமா? இன்று அந்த வீரம் செறிந்த மைந்தன் போர்க்களம் செல்ல முடிவு செய்து விட்டான். அவனே எதனையும் தானுகவே செய்ய அறியாத பச்சிளம் பாலகன்.

அவனையும் எதிரிகளை எதிர்த்துப் போரிட அனுப்ப அவள் துணிந்து விட்டாள். அவனது குடுமிக்கு எண்ணெய் தடவினுள். வெள்ளை ஆடையை அணிந்தாள். கையிலே வேலைக் கொடுத்தாள். அவனை ஆரத்தழுவி, வீரத் திலகமிட்டு, "சென்று வா, மகனே வென்று வா" என்று வாழ்த்தி அனுப்பி வைத்தாள்.

"நாட்டைக்காக்க வீட்டுக்கு ஒருவர் வருக" என்றுதான் தாயகத் தலைவன் அழைப்பு விடுத்தான். ஆனுல், அந்த வீர மகளின் இல்லத்திலோ மூவர் நாட்டுப் பற்றின் மிகுதியால் போர்க்களம் சென்றனர். தாயகத்தின் விடுதலையைக் காண அவள் தனியொருத்தியாக இல்லத்திலே நிற்கிறுள். வீரமும் பாசமும் அவள் உள்ளத்தில் அலைமோதுகின்றன.

"இப்படை தோற்கின் எப்படை வெல்லும்" என்ற நம்பிக்கையோடு வீரமறவர் போரிடுகின்றனர். கூலிக்காகவும் கொள்ளையிற் பங்குக்காகவும் போரிட வந்த அயலவர் படை தாயகம் மீட்கும் இலட்சிய வெறியோடு போரிடுவோருக்கு எதிராக நின்று வெல்ல முடியுமா?

இக்காட்சி "புதிய புறநானூறு"களை நினைவூட்டலாம். ஆனுல் இது இன்றைய காட்சி அல்ல. ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் பழந்தமிழகத்திலே நிகழ்ந்த வீரயுகக் காட்சி இது. ஒக்கூர் மாசாத்தியார் என்ற பெண்பாற் புலவர் வரைந்த கவிதைக் காட்சி இது. புறநானூறு என்ற பழந்தமிழ்ச் செல்வத்தில் 279 ஆம் பாடலில் இக்காட்சி வரையப்பட்டுள்ளது. இதுதான் அந்த வீரயுகப் பாடல்:

கெடுக சிந்தை கடிதுஇவள் துணிவே
மூதில் மகளிர் ஆதல் தகுமே
மேல்நாள் உற்ற செருவிற்கு இவள் தன்னை
யானை எறிந்து களத்துஒழிந் தனனே
நெருநல் உற்ற செருவிற்கு இவள் கொழுநன்
பெருநிரை விலக்கி ஆண்டுப் பட்டனனே.
இன்றும்
செருப்பறை கேட்டு விருப்புற்று மயங்கி
வேல்கைக் கொடுத்து வெளிது விரித்து உடீஇ
பாறு மயிர்க் குடுமி எண்ணெய் நீவி
ஒரு மகன் அல்லது இல்லோள்
செரு முகம் நோக்கிச் செல்கஎன விடுமே.

(மூதில் - பழங்குடி; செரு - போர்; தன்னை - அண்ணன்; நெருநல் - நேற்று; கொழுநன் - கணவன்; பட்டனன் - இறந்தனன்; உடீஇ - உடுத்து; நீவி - தடவி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படிப்பதற்குப் பத்து முறைகள்

மாணவ மணிகளே,

கல்வி கற்பதற்கும் சில வழி முறைகள் இருக்கின்றன. நெறிப்படி படித்தால் கல்விஞானம் தானுகவே வந்து விடும்.

படிப்பதற்குப் பத்து முறைகள் இங்கு தருகின்றோம்: நீங்கள் படிக்கும் முறை சரியானதா என்று ஆராய அவை உங்களுக்கு வழிகாட்டும்.

(1) நீங்கள் படிக்கும் பாடத்தில் உங்கள் விருப்பம் இருக்க வேண்டும்.

(2) பாடத்தின் அடிப்படைக்கருத்துக்களைச் சுருக்கமாக அறிந்து படிக்கத் தொடங்குங்கள். ஒன்றும் தெரியாமல் 'நெட்டுரு'ப் போடக்கூடாது.

(3) பாடத்தை முதலில் ஒருமுறை படித்து விடுங்கள். பின் இரண்டு அல்லது மூன்று நாட்களுக்கு ஒருமுறை தொடர்ந்து படித்து வாருங்கள்.

(4) ஒன்றை நீங்கள் நல்ல முறையில் படித்த பின்பும் உங்கள் மனம் திருப்தி அடையாவிட்டால் மீண்டும் அதைத் திருப்பிப் படியுங்கள்.

(5) நீங்கள் படித்தவற்றை மனதுக்குள்ளே சொல்லிப் பாருங்கள். இம்முறையை நீங்கள் பயன்படுத்தினுல், நீங்கள் படித்தவற்றில் எந்தப் பகுதி பலவீனமாய் இருக்கிறது என அறிந்து அதை நன்கு படிக்க முடியும்.

(6) படிக்கும்போது எந்தச் சிந்தனையிலும் மனத்தை அலையவிடாதீர்கள். மனம் படிக்க வேண்டும் என்று எண்ணும் போது மட்டும் நீங்கள் படியுங்கள்.

(7) நீங்கள் படித்தவற்றைத் தனிமையில் அமர்ந்து நினைவு கூர்ந்து பாருங்கள். அவ்வாறு நினைவு கூர முடியாவிட்டால் நீங்கள் படிக்கும் முறைகளில் ஏதோகுறைகள் சில இருக்கின்றன. அவற்றை அறிந்து உடனேகுறைகளைத்திருத்திக் கொள்ளுங்கள்.

(8) சுமார் ஒரு மணி நேரம் படித்தபின் சில நிமிடங்கள் ஓய்வு எடுங்கள். பின் மீண்டும் படிக்கத் தொடங்குங்கள்.

(9) சில சமயங்களில் நீங்கள் படிக்கும் பகுதி முன்பு எப்போதோ படித்த மாதிரி உணர்வீர்கள். அப்போது உடனே அந்த முழுப் பகுதியையும் சொல்லி விடுவீர்கள். அச்சமயங்களில் நீங்கள் காலத்தையும் சக்தியையும் மிச்சப் படுத்தலாம்.

(10) முடிவாக உங்களுக்கு தன்னம்பிக்கை வேண்டும். நான் இதைப் படிக்க முடியாவிட்டால் வேறு யார் இதைப்படிக்க முடியும் என்ற எண்ணம் வேண்டும். தன்னம்பிக்கை இல்லாவிட்டால் வாழ்க்கையே இல்லையே!

(நன்றி - கல்கண்டு)

## அத்தியாயம் - 2

# சிறைப் பறவைகள்

து. வைத்திலிங்கம்



## இரு மாத குறுநாவல்

பழி பாவத்துக்குப் பயப்படாமல் வட்டி வேண்டிக் குவிக்கிறன்! அதுதான் இரண்டு குமரையும் வீட்டில்வைத்துக் கொண்டு இருக்கிறன்!

கோயிலடியில் பெண்கள் கதைக்கும் வம்பு சமாசாரம் கனகசபையின் காதுகளுக்கும் எட்டும்!

ஆனல் மனுசன் அசையமாட்டான் பாவி!

''அதுசரி, அந்த சேவையர் மாப்பிள்ளையின்ரை சாதகம் திலகத்துக்கு நல்ல பொருத்தம்தானே! ஒருக்கா போய் அவன் தரகரைக் காணுங்கோவன்!''

பூரணம் குரலைச் செருமிக் கொண்டே கணவனைப் பார்த்துச் சொன்னள்.

ஏதோ வட்டிக் கணக்குப் பார்த்துக்கொண்டிருந்த கனகசபை நிமிர்ந்தார்

என்ன சொன்னன்?.. பொருத்தம்தான்! அவன் கள் ஒருலட்சமும் கையிலை தரட்டாம்!

கையில கொடுக்க முடியாது! வட்டிக் கடையிலை போடுவன். மாதாமாதம் வட்டிக்காசும் வரும்! முதலும் முதலாய் இருக்கும் என்று சொன்னன்! அதுக்கு மாட்டினமாம்! பேந்தென்ன கலியாணம்?

''உங்களுக்கென்ன விசரே? ஊர் உலகத்திலை இல்லாத வேலைபார்க்கிறியள்! உங்கடை எண்ணத்துக்கு யார் வருவினம்! அவள் இப்படியே சிவியம் முடியுமட்டும் இருக்க வேண்டியது தான்!

பூரணத்துக்கு அழுகை முந்திக் கொண்டுவந்தது.

பின்னே இருக்காதா என்ன?

என்னுடைய அலுவல் எனக்குத் தெரியும் நீ போடி அங்காலை...!

ஓ! உங்களுக்கு இது தான் தெரியும்! காசை வைச்சுக் கும்பிடுங்கோ! அவளவை வயது முத்திச் சாகட்டும்...!

பூரணத்தின் குரல் வெடித்தது.

ஓ! சாகட்டும்! நீ போடி!எல்லாம் எனக்குத் தெரியும்!

ருத்திரமூர்த்தியானர் கனகசபை.

''அம்மா இஞ்சை வாங்கோ......''

திலகம் அவசரமாய் தாயை அழைத்தாள்.

மூக்கைச் சிந்தியபடியே உள்ளே சென்றுள் பூரணம்.

அவளுக்குத் திலகத்தைப் பார்க்க பாவமாய் இருந்தது.

ஊர் உலகத்தில் எல்லாம் கல்யாணம் கார்த்திகை என்று சிறப்பான காரியங்கள் நடக்கும் போது, பணத்தின் மீது பூதம் காக்குமாப்போல தன் கணவன் கனகசபை, தன் பெண்களுடைய வயதையோ, அல்லது அவர்களது உள்ள உணர்வுகளையோ இலட்சியம் செய்யாது கல்லுளிமங்கனுக இருக்கும் தன்மை அவளை வாட்டி எடுத்தது. அவள் யாரிடம் தன் மனப் பாரத்தைச் சொல்லி அழ முடியும்?

தன்னுள் கிடந்து மறுகினுள்.

திலகம் அட்வான்ஸ் லெவல் சித்தியடைந்தும் அவள் பல்கலைக்கழகத்துக்கு எடுபடமுடியவில்லை. அவளின் படிப்பு அத்துடன் முற்றுப் பெற்றது. வீட்டுப் பொறுப்புகள் யாவற்றையும் தனதாக்கிக் கொண்டாள். எல்லாம் கச்சிதமாய் இருக்கும் அவளது காரியங்கள்.

பார்த்தவர்கள் மீண்டும் அவளைத் திரும்பிப் பார்க்கும் தன்மையான அழகு.

''அவள் தாயைப் போல நல்ல வடிவு!''

பொதுவாக கிராமத்தில் பரவியிருந்த அபிப்பிராயம்.

ஏன் பூரணத்தின் அழகை விரும்பியே கனகசபை கல்யாணம் செய்து கொண்டவராயிற்றே! அதுவேறு சங்கதி!

எதிலும் ஒரு அடக்கம், நிதானம் திலகத்தினுடையது!

''சரசு பெரிசாய் கத்தாதை! அடக்கமாய் இரு!'' தங்கையைத் திருத்துவாள்.

சந்திரன் எழும்பு! நித்திரை கொண்டது போதும்! எழும்பிப் படி!

இப்படி தன் இளசுகளை அவள் அன்பால் அடக்கி வீடு பரிமளிக்கச் செய்வாள்.

திலகத்துக்கு என்ன? பெரிய வீடு வளவு! பரந்தன் வயல்! கைகொள்ளாக் காசு! ஏராளமான நகை நட்டு! சும்மா கொத்திக் கொண்டு போவார்கள்!

இப்படி ஊரார் கதைத்தாலும் அவர்கள் நினைத்தபடியோ திலகம் எதிர்பார்த்தபடியோ அப்படி ஒருவரும் வரவில்லை அவளைக் கொத்திக் கொண்டு போவதற்கு.

கொத்திக் கொண்டு போக கனகசபை விட்டால் தானே!

தரகர்கள் பலர் கனகசபையின் வீட்டில் வந்து போயினர். சாதகங்கள் கைமாறப்பட்டன. ஆனலும் ஒன்றுமே பயனில்லாமல் இருந்த

ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு நொட்டை சொட்டை சொல்லி வந்த தரகரை அந்த வீட்டை மறுபடி நினைத்துப் பார்க்க முடியாமல் செய்தார் கனகசபை.

அவர் விதித்த நிபந்தனைகள் வேடிக்கையாக இருந்தன. பூரணத்துக்கும் மகள் திலகத்துக்கும் அவை வேதனையாக அமைந்தன.

சீதனம் குடுக்கலாம்! காசாக மாப்பிள்ளையின் கையில் தரமாட்டன்! என்னுடைய அடைவு கடையில் காசு இருக்கும். வருட முடிவில் கணக்கைப் பார்த்து வட்டியை அவை எடுக்கலாம்!

இது அவரின் நிபந்தனைகளில் ஒன்று

இவருக்கு தான் சளைத்தவன் இல்லை என நினைத்து ஒருவர் தனது மகனுக்கு திலகத்தைக் கேட்டு வந்தார்.

கனகசபையின் நிபந்தனையை அவர் ஏற்றுக் கொண்டார்.

அதற்கென்ன? காசு நீங்கள் கையிலை தர வேண்டாம்! வருட முடிவிலை வட்டியை எடுத்துக் கொள்ளலாம். அது நல்ல ஏற்பாடு!

கனகசபை விழித்துக் கொண்டார்.

''பெடியன்ர உத்தியோகம் சரியில்லை''

அவர் இலகுவில் வந்த கல்யாணத்தைத் தட்டிக் கழித்தார்.

கடந்த ஐந்து வருடங்களாக இதே கதைதான்.

திலகத்துக்கு வீட்டில் நடக்கின்ற சங்கதிகள் யாவும் இப்பொழுது மன வருத்தத்தைத் தருவதில்லை.

ஆரம்பத்தில் மற்ற இளம் பெண்களைப்போல் தனக்கு நல்ல ஒரு கணவன் வரவேண்டும் தன் வாழ்வு வசந்தமாக இருக்க வேண்டுமென்று ஆசைப்பட்டது என்னவோ உண்மைதான்...

ஆனல்இப்பொழுதோ-அவளுக்கு எல்லா உணர்வுகளுமே மரத்து விட்டது மாதிரி இருக்கிறது.

''அப்பா பணத்தைச் சேர்த்து வைச்சு அதுக்கு மேலே படுக்கட்டும்! எங்களுக்குக் கலியாணமும் இல்லை கருமாதியும் இல்லை! சாகும் பொழுது அவருடைய வாய்க்குள் பணத்தை கரைச்சு ஊத்துவம்!''

சரசு ஒருநாள் ஆவேசமாய் கூறினுள்

முதல் நாள்தான் ஓர் அருமையான கல்யாணம் குழம்பி விட்டிருந்தது.

அவளோடு வேலை பார்த்த சாந்தியின் தமையன் தொலைபேசிப் பரிசோதகராய் வேலை பார்த்தவன். பின் வெளி நாடு ஒன்றுக்குச் சென்று கை நிறையச் சம்பாதித்தவன், ஊருக்கு திரும்பி வந்த பொழுது கல்யாண ஏற்பாடுகள் நடந்தன. சரசு சாந்தியிடம் அவனுடைய சாதகத்தை வேண்டி பூரணத்திடம் கொடுத்தாள். சாதகம் நல்ல பொருத்தம். இரு பகுதியினரும் ஒருவரை ஒருவர் அறிந்தவர்கள். கல்யாணம் முடிந்ததும் மனைவியைத் தன்னேடு அழைத்துக்கொண்டு போவதற்கான ஏற்பாடுகளுடன் அவன் வந்திருந்தான்.

சிறிது பிணக்கும் இல்லாமல் எல்லாவற்றுக்கும் தலையாட்டிய கனகசபை கடைசியில் பெரியகுண்டு ஒன்றைத் தூக்கிப் போட்டார்.

''பொடியன் சரியான கறுப்பு! திலகத்துக்குப் பொருத்தமில்லையப்பா... இதை கை விடுங்கோ!''

அவ்வளவு தான்...

வழமைபோல் வீடு மௌனமாகியது. இதில் சரசுவுக்குத்தான் கடும் கோபம்!

சரசு இப்படிக் கத்தியதும், திலகம் ஓடி வந்தாள்.

''என்னடி சரசு மரியாதை இல்லாமல் கதைக்கிருய்!''

''நீ ஒரு விசரி அக்கா... உனக்கு தைரியம் இல்லை. அவ்வளவுதான்!''

''சரசு சொல்லுறதிலை என்ன பிழை? இந்தக் காசை சேர்த்து என்ன செய்யப் போகிருர்? ஒரு நாளைக்குப் பார் என்ன செய்வன் என்று...!'' சந்திரன் ஆவேசத்துடன் கத்தினுன்.

''அங்கை என்ன சத்தம்...''

கனகசபை உள்ளே வரவும் அவரவர் தமது அலுவல்களைப் பார்க்கச் சென்றனர்.

* * *

வாழ்க்கை வாழ்வதற்கே என்ற தத்துவத்தில் அசையாத நம்பிக்கை கொண்டவள் சரசு. இளமை கொப்பளிக்கும் பருவ காலம் அவளுடையது. காலில் சக்கரம் பூட்டியது போல பரபரவென்று எந்த நேரமும் இனம் தெரியாத ஒரு சுறு சுறுப்பு.

''குமாப்பிள்ளை அடக்கமாய் இருக்கவேணும் சரசு. சும்மா பல்லை இளிச்சுக்கொண்டு திரியாதை...!''

பூரணம் எந்த நேரமும் தன் இளைய மகளைக் கரிச்சுக் கொட்டிய படிதான்.

ஆனல் சரசுவோ, எல்லாம் தன் இஷ்டப் படிதான்.

படிக்கும்போதும் அப்படித்தான். ஜீ. சீ. ஈ அட்வான்ஸ் லெவல் பரீட்சை சித்தியடைந்ததும் அவள் அடைந்த மகிழ்ச்சி!

தாய் கத்தக்கத்த, தன் தோழியர் மூவரோடு படம், அது இதுவென்று முன்னூறு ரூபாவரை செலவு வைத்து விட்டாள்.

அதற்குக் கணக்குக் கேட்டு கனகசபை கிளப்பிய புயலும் அதனல் ஏற்பட்ட ரகளையும் ஓய இரண்டு வாரங்கள் சென்றன.

வீடு ஒரே நரக வேதனை தான்.

கனகசபையின் பிள்ளையள் மூவரும் படிப்பில் படுசுட்டிகள் தான்.

சொல்லி வைத்தாற் போல் திலகம், சரசு, சந்திரன் மூன்று பேரும் அட்வான்ஸ் லெவல் வகுப்பு சித்தியடைந்திருந்தாலும் பல்கலைக்கழக அனுமதி கிட்டவே இல்லை. தரம் பிரிக்கும் யந்திரத்தின் நெஞ்சு கல்லாக இருந்தபடியால் இம் மூவரைப்போல் இன்னும் எத்தனை பேரோ...?

பொது வேலைநிறுத்தம் ஒன்று ஏற்பட்டு மாதக் கணக்கில் இழுபட்டது.

''கச்சேரியில் ஆட்களை வேலைக்கு எடுக்கினமாம். நான் அப்பிளை பண்ணப் போறன்''

சரசு இப்படிச் சொல்லிக் கொண்டு வந்தாள் ஒருநாள். 'உனக்கு ஏன் இப்ப வேலை? அவன் சந்திரனுக்கு கிடைச்சாலும் பறவாயில்லை.'

பூரணம் கூறினுள்.

''எனக்கேன் வேலையோ... படிச்சுப் போட்டு அக்கா மாதிரி அடுப்படிக்குள் இருக்க எனக்கென்ன தலை எழுத்தே?''

சிலிர்த்தெழுந்தாள் சரசு.

''சரசு நீயும் அப்பிளிகேசன் போடு, சந்திரனையும் போடச் சொல்லு'' திலகம் இடையில் குறுக்கிட்டாள்.

சரசுவும் சந்திரனும் வேலைக்கு விண்ணப்பம் அனுப்பினர்கள்நேர்முகப் பரீட்சைக்கு இருவருக்கும் அழைப்பு வந்தது. இருவரும் சென்றனர். முதலில் அழைக்கப்பட்டது சரசு. நேர்முகப் பரீட்சை மேசையில் மூவர் இருந்தனர். இருவர் வயதானவர்கள். ஒருவர் இளைஞர்.

வயதான இருவரும் நயன பாஷையில் ஏதோ பேசிக் கொண்டனர்.

சம்பந்தமில்லாத கேள்விகள் பல கேட்டனர்.

எல்லாவற்றுக்கும் சிரித்தபடியே சரசு பதிலிறுத்தாள்.

சந்திரனின் முறை வந்தது. அவன் சென்றுன்.

''அவர் வாற வரத்தைப் பார்'' - வயதானது ஒன்று முணுமுணுத்தது. மற்றது அதை ஆமோதித்தது.

சில கேள்விகள்

ஏனே தானேவென்று அச்சடங்கு முடிந்தது.

ஒரு வாரத்தில் சரசுவை வேலைக்கு வரச் சொல்லிக் கடிதம் வந்தது. சந்திரனின் முகம் தொங்கி விட்டது. சந்திரனுக்குக் கடைசிவரை கடிதம் வரவேஇல்லை.

அவனுக்கு மட்டுமல்ல, அவனைப்போல் எத்தனையோ இளைஞர்கள்!

அந்தமுறை கஞ்சிக்கு பயறு போட்டாற்போல் பெயருக்கு சில இளைஞர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். ஆனல் நாற்றுக்கு தொண்ணூறு விகிதம் இளம் பெண்களே தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

சரசு சந்தோஷத்தில் பூரித்துப் போனுள். கனகசபையிடம் சென்று நியமனக் கடிதத்தைக் காட்டினுள்.

''உதுக்கு எவ்வளவு சம்பளம் கிடைக்கும்?''

அவரின் நோக்கமெல்லாம் பணத்தில் தான் இருந்தது.

''சம்பளம் கிடைத்த பின்தான் தெரியும்!''

துடுக்காகப் பதில் கூறி விட்டு சரசு நகர்ந்தாள்.

''அறுந்த மனுசனுக்கு எந்த நேரம் பார்த்தாலும் பணத்தின் நினைப்புத்தான்!''

பூரணம் தனக்குள் சொல்லிக் கொண்டாள்.

சரசு மாதாமாதம் சம்பளம் எடுக்கும் நாட்களில் தனக்கு ஏராளமான பொருள்களை வேண்டி வருவாள் சேலை, சட்டைத்துணி, பவுடர் என்று விதம் விதமாகக் கொள்வனவு செய்வாள் திலகத்துக்கும் கொடுப்பாள்.

''சரசு எனக்கெதற்கு இந்தத் துணி? வீணைச் செலவு செய்கிருய்? அப்பா கண்டால் கத்துவார்''

திலகம் அலுத்துக் கொள்வாள்.

''அக்கா, இப்படி அசடு மாதிரிக் கதைக்காதை! உனக்குத் தேவையானதைக்கூட வேண்டாமென்று மறுக்கிருயே! உலகத்திலே உன்னை மாதிரி பத்துப்பேர் இருந்தால் அப்பா மாதிரி ஆயிரம் பேர் உருவாகுவார்கள்.''

''சரசக்கா எனக்கு மாதம் நூறு ரூபாய் தந்து விடவேண்டும்!''

தம்பி சந்திரன் சிரித்தபடியே கூறி விடுவான். வீட்டில் அவன் கடைசிப் பிள்ளை என்றபடியால் அவனுக்குச் செல்லம் கூட.

ஆனல் கனகசபைக்கு இச்செல்ல விளையாட்டுகள் கண்ணில் காட்டக் கூடாது.

''செல்லமென்ன செல்லம்! தடியாடு மாதிரி வளர்ந்திருக்கிறன்!''

அவரின் வாழ்த்துக்கள் சந்திரனுக்கு அத்துப்படியாகி விட்டன.

நீர் சுத்திக்கொண்டிரும் நான் வாறன்! - என்றரீதி.

சரசு காசை இப்படித் தண்ணீர் இறைத்த மாதிரிச் செலவழிப்பது கனகசபைக்குப் பிடிக்காது.

''காசுக் கணக்கெல்லாம் என்ன மாதிரி? வீட்டுச் செலவுக்கும் நீ தரவேணும்! இப்ப உழைக்கிருய் தானே!''

''நான் அம்மாவிடம் கொடுக்கிறனே தானே!'' சரசு வாதாடினுள்.

''பூரணம் அவளின்ரை சம்பளம் எவ்வளவு? வீணுய்ச் செலவழிக்கிறுள் போலை கிடக்கு! மாதாமாதம் அப்படியே தரச் சொல்லு. வட்டிக்குக் கொடுத்தாலும் அவளுக்குத் தானே!

தன் மனைவியிடம் கூறினுர்.

''உங்களுக்கு எந்த நேரமும் வட்டி ஞாபகம் தானே! அவள் வங்கியிலை கணக்குத் திறந்திருக்கிறுள். மாசா மாசம் தன் பாட்டுக்குச் சேர்க்கிறுள். நீங்கள் அதிலை தலையிடா

(7 ஆம் பக்கம் பார்க்க)

## காந்தி அடிகளின் யாழ்ப்பாண விஜயம்

## இளைஞர்களின் சாதனை

காந்தி அடிகளின் யாழ்ப்பாண விஜயம் யாழ்ப்பாண இளைஞரின் சாதனை என்று பலராலும் போற்றப்படுகிறது.

தற்போதைய இளைஞர் எழுச்சியைப் போல அந்த நேரத்தில் நிகழ்ந்த இளைஞர்களின் எழுச்சியாக இதனைக் கொள்ளலாம்.

இன ஒதுக்கலையும், பிரித்தானிய ஏகாதிபத்திய கொடுமைகளையும் எதிர்த்து காந்திஜி சாத்விகப் போராட்டம் நடத்திக் கொண்டிருந்த காலத்தில் அவரை பிரித்தானியரின் ஆட்சியின் கீழ் இருந்த இலங்கைக்கு அழைத்தது ஒரு சாதனை இல்லையா?.

சமய ரீதியில் வேறுபட்டு இருந்த யாழ்ப்பாணத்துக்கு, சமய ஒருமைப்பாட்டுக்குக் குரல் கொடுத்த காந்திஅடிகளை அழைத்தது ஒரு சாதனை இல்லையா?.

தேன்கூடு

### ஹண்டி மாஸ்டர்

இவ்வாறு பலவகையிலும் ஒரு சாதனையாக அமைந்தது காந்திஜியின் யாழ்ப்பாண விஜயம். இது யாழ்ப்பாண மாணவ காங்கிரஸின் சாதனை.

மாணவ காங்கிரஸின் சார்பில் துடிப்பாக இயங்கியவர் ஹண்டி பேரின்பநாயகம்.

கிறிஸ்துவ மாணவ இயக்க மாநாட்டில் பங்குபெற ஹண்டி பேரின்பநாயகம், ஏ எம். கே குமாரசாமி ஆகியோர் தமிழ்நாடு சென்ற சமயம், இங்குள்ள இளைஞர்கள் மகாத்மாவை யாழ்ப்பாணம் அழைக்க வேண்டும் என்ற ஆர்வத்தை வெளியிட்டனர்.

சிறையிலிருந்து விடுதலையாகி காந்திஅடிகள் பெங்களூரில் ஓய்வு எடுத்துக் கொண்டு இருந்த சமயம் அது. அப்போது தமக்குத் 'தரிசனம்' தரும்படி ஹண்டி மாஸ்டர் காந்தி அடிகளுக்கு எழுதினுர். அனுமதியும் கிடைத்தது இருவரும் அவரைச் சந்திக்கச் சென்றனர். அப்போது ராஜாஜி, மகா தேவ்தேசாய் ஆகியோர் காந்தி அடிகளுடன் இருந்தனர்.

கதர் இயக்கத்தை ஆரம்பித்து பட்டினி கிடக்கும் பல லட்சம் இந்தியர்களுக்கு உணவும் உடையும் வழங்க காந்தி அடிகள் நிதியம் ஆரம்பித்த காலகட்டம் அது.

இச்சந்திப்பின் போது ஹண்டி மாஸ்டர் மகாத்மாவை இலங்கைக்கு வருமாறு அழைப்பு விடுத்தார். கதர் இயக்கத்துக்கு இலங்கையில் நூறுயிரம் ரூபா சேகரித்துத் தருவதானல், தாம் அழைப்பை ஏற்பதா காந்தி அடிகள் கூறினுர். இவர்கள் இருவரும் தமது சம்மதத்தைக் கொடுத்தனர்.

1927 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 13 ஆம் திகதி காந்திஜி கொழும்பு வந்து சேர்ந்தார். கொழும்பு, காலி, கண்டி ஆகிய இடங்களில் பல சொற்பொழிவுகளை ஆற்றினுர். கொழும்பு தமிழ்ச் சங்கம் அளித்த வரவேற்புக்கு சேர். பொன். இராமநாதன் தலைமை வகித்தார்.

26ஆம் திகதி ரயில் மூலம் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தார். பல இடங்களில் உரையாற்றினுர். யாழ் இந்துக் கல்லூரி, பரமேஸ்வராக் கல்லூரி, மானிப்பாய் இந்துக் கல்லூரி, விக்டோறியா கல்லூரி, இராமநாதன் கல்லூரி, சென். ஜோன்ஸ் கல்லூரி, உடுவில் மகளிர் கல்லூரி, வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி ஆகிய பாடசாலைகளுக்கு விஜயஞ் செய்தார்.

யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவந்த மோர்னிங் ஸ்டார், ஹிண்டு ஓர்கன் பத்திரிகைகள் காந்திஜியின் வருகையைப் பாராட்டி ஆசிரியர் தலையங்கம் எழுதின.

### யோகர் சுவாமிகள்

யோகர் சுவாமிகள் தனது சீடர்களுடன் காந்தி அடிகளை நேரிற் சென்று தரிசித்தார். அன்று மகாத்மா மௌனவிரதம் அனுஷ்டிக்கும் தினம். எனவே எழுத்து மூலம் இரு பெரியார்களும் கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டார்கள்

யோகர் சுவாமியுடன் சென்ற சீடரொருவர் காந்திஜியிடம் அப்பிள் பழமொன்றைக் கொடுத்தார். வெளிநாட்டுப் பழங்களை உண்பதில்லை என்பது தனது விரதம் என்று தெளிவுபடுத்திய காந்திஜி அதனை ஏற்கவில்லை.

காந்திஜியின் கதரியக்க நிதியத்துக்கு இலங்கை மக்களின் அன்பளிப்பாக நூற்றியையாயிரம் ரூபா இரண்டு அணு கிடைத்தது. இத்தொகையை ராஜாஜி அறிவித்ததும், ஹண்டி மாஸ்டரை நோக்கித் தனது பொக்கை வாய்ச் சிரிப்பினை உதிர்த்தார் காந்தி அடிகள்.

காந்தி அடிகளின் விஜயத்தினுல் யாழ்ப்பாண இளைஞர்கள் மத்தியில் புதுவேகம் பிறந்தது. இலங்கை முழுமையான சுதந்திரம் பெற வேண்டும், அரசாங்க சபைத் தேர்தலைப் பகிஷ்கரிக்க வேண்டும், தேசிய உடை, தேசியமொழி,சமூ*,அரசியல் வாழ்வில் முதலிடம் பெற வேண்டும், - என்பவை அவர்கள் மத்தியில் ... தின.

- சுந்தரனுர் -

## சொற்சிலம்பம்

### போட்டி இல. 2

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | | | X | 3 | X | 4 |
| 5 | | X | X | 6 | | 7 | |
| 8 | | 9 | 10 | | X | 11 | |
| X | 12 | | | X | 13 | | X |
| 14 | | X | | X | | X | 15 |
| 16 | | X | 17 | | | 18 | |
| | X | 19 | | X | 20 | | |
| 21 | | | X | 22 | | | X |

அனுப்புபவர் பெயர்:- ..............................

விலாசம்:- ..............................

..............................

கையெழுத்து:- ..............................

**மேலிருந்து கீழ்:**

1. அகங்காரம்.
2. நாளின் ஆரம்ப வேளையை இப்படிச் சொல்லுவார்கள்.
3. வாழ்க்கையின் ஆரம்பம் இப்படித் தான் தொடங்குகிறது.
4. அன்புடையாரின் இதுவும் பிறர்க்கு உரியதே.
6. சிலர் இதை அடிப்பார்கள்.
7. சர்ப்பத்தைக் கட்டுப்படுத்தக் கையாளும் கருவி.
9. கறியில் சேர்ப்பது. வயிற்றில் வாயுக் குணங்களைத் தவிர்ப்பது.
10. துஷ்யந்தன் காதலி.
11. மக்கள் கூட்டம்.
14. மாமிசம் விற்கும் கடை.
15. ரூபமற்றது. இருவரைப் பிணைத்து நிற்பது.
18. வாழ்க்கையில் எப்போது இதனைச் செய்யக் கூடாது. ஆனல் எவராலும் இதனைச் செய்யாமல் இருக்கவும் முடியாது.
19. ஒருவகை உணவு. ஆனந்தப்படுவதையும் இப்படிச் சொல்லலாம்.

**இடமிருந்து வலம்:**

1. சுதந்திர இந்தியாவின் தந்தை. அவரை இப்படித்தான் அழைப்பார்கள்.
5. பர்வதம்.
6. பாண்டவரில் மூத்தவன்.
7. இந்துக்களின் விரத நாள். ஒரு மாதத்தின் முக்கிய நட்சத்திரம்.
11 ஊற்றிலிருந்து நீர் இப்படித்தான் பாயும்.
12. சிலர் தலையில் இருப்பது.
13. இது இதையே கெடுக்கும்.
14. முற்காலத்தில் மரண தண்டனைக்கு இதில் ஏற்றுவார்கள்.
16. சாந்த குணமுடையோன்.
17. மின்குமிழின் ஒளிரும் இழை இதனுல் செய்யப்பட்டது.
19. அறுபத்துநான்கு வகையுண்டு.
20. மந்தநிலை.
21. பரீட்சைகளில் பெறுபேறுகளை இந்தக் கணக்கில் தருவார்கள்.
22. எய்தவன் இருக்க இதை நோவதில் என்ன பயன்?

### போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் 'சொற்சிலம்பம்' குறுக்கெழுத்துப் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களும் நிரப்பி அனுப்பலாம்.
3. 'சஞ்சீவி'யில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் மூன்று பேருக்கு முறையே 50, 25, 15 ரூபா பரிசில்கள் வழங்கப்படும்.
6. பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள் 'சொற் சிலம்பம்' போட்டி இல 2, சஞ்சீவி, தபால் பெட்டி இல. 23, யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்கு அடுத்துவரும் புதன்கிழமைக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்க வேண்டும்.
7. த ஷப்ரு-உமா எக்ஸ்போட்ஸ் லிமிட்டெட், ஷப்ரு யுனிக்கோ பிஞன்ஸ் லிமிட்டெட் ஆகியவற்றில் பணிபுரியும் ஊழியர்களும் அவர்களது உறவினர்களும் இந்தப் போட்டியில் பங்குபற்ற முடியாது.

* சொற்சிலம்பம் போட்டி இல. 1 இல் வெற்றி பெற்றவர்கள் பற்றிய விவரம் அடுத்த வாரத்தில் பிரசுரிக்கப்படும்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## பெண் விடுதலை காணிடச் சேரின்....!

மூக்காடு போட்டொரு மூலையுள் இருந்து பெண்
மூச்செலாம் விடென்று வாழ்ந்த
அக்கால மடமையை அழித்திடு—உரிமை
அவனியில் வென்றிடக் கரங்கள்
துப்பாக்கி எந்திடத் துணிந்திடு—விடுதலை
துளிர்த்திட வீராங் கனைகளாய்
எக்கேடும் தகர்த்திட எழுந்திடு பெண்ணே
என்றும் நீ ஆணுக்கு நிகரே

அடுப்படி கிடந்து நெருப்பினில் உழன்று
அழியாத கடன் அவள் கூடிப்
படுக்கையைப் பகிர்ந்து டாலரைச் சுமந்து
பாருக்கு நல்கும் எந்திரமோ?
கெடுத்திடும் கொடியர் துயரங்கள் சூழின்
கேடுகள் களைந்திடச் சமனாய்
எடுத்தடி வைத்திடு ஆணுக்குப் பெண்ணிங்கே
என்றுமே நிகரென்று கொள்ளு

உளுத்திட்ட கொள்கை உறவுகள் குடும்பமே
உலகத்து இன்பமென் றெண்ணிக்
கழுத்திலே தாலியாய் கையிலே குழந்தையாய்
காலத்தை ஓட்டி மடிதலிலும்
கொழுத்திடும் தீமையை அழித்திடக் கிளர்ந்தெழு
கொற்றமே உன்னதாகும்
வெளுத்திடும் பூமி விடிந்திடும் வாழ்வு பெண்
விடுதலை காணிடச் சேரின்.

— நெடுந்தீவு லக்ஸ்மன் —

# வீட்டு விபத்துகளை தவிர்ப்பது குடும்பத் தலைவியின் கடமை

## சிறுவர், முதியவர் விடயத்தில் அதிக கவனம் அவசியம்

அபிராமி வரதன்

எமது சமூகத்தில் வீட்டு விபத்துக்களினால் பாதிக்கப்படுபவர்களில் பெரும்பாலானோர் சிறுவர்களும் முதியவர்களும் ஆவர். அவர்களைச்சரியாக கவனித்து, விபத்துக்களைத் தவிர்க்கும் பொறுப்பு வீட்டுத்தலைவிகளையே சாரும். எனவே வீட்டுத் தலைவியர் இவ் விபத்துக்களைப் பற்றிய அறிவைப் பெறுவது அவசியம்.

கிராமங்களில் மண்ணெண்ணெய் விளக்குகள் பாவிப்போர் பெரும்பாலும் போதிய கவனம் எடுப்பதில்லை. இக்கவனயீனம் காரணமாகப் பல வீட்டு விபத்துக்கள் நிகழ்கின்றன. மண்ணெண்ணெய்விளக்குகளால் ஏற்பட்ட விபத்துக்களில் இறப்போர் ஒருபுறம். அவ் விபத்துக்களினால் அங்கவீனர் ஆவோர் மறுபுறம்.

பாதுகாப்பான மண்ணெண்ணெய் விளக்குகளை மட்டுமே வீட்டுத் தலைவிகள் வீடுகளில் உபயோகிக்க வேண்டும். பல தீப்பெட்டிகள் பாதுகாப்பான முறையில் தயாரிக்கப்படுவதில்லை. இதனாலும் தீவிபத்து ஏற்படுவதுண்டு

பாதுகாப்பில்லாத கிணறுகள், கிடங்குகளினாலும் வீடுகளில் விபத்துக்கள் ஏற்படக் காணலாம். முதியவர்கள், குழந்தைகள் இதனால் காயப்படுவதும் இறப்பதும் உண்டு ஆகவே வீட்டில் எந்தப் பகுதிகளிலும் இருக்கும் கிணறு, கிடங்குகள் பாதுகாப்பாக இருக்கின்றதா என்பதில் வீட்டுத் தலைவிகள் கவனமாக இருக்க வேண்டும்.

மின்சார பாவனை இப்போது வாழ்க்கையில் அத்தியாவசியமான ஒன்றாக மாறியிருக்கின்றது. அடுப்புக்கள், டெலிவிஷன், ரேடியோ, இஸ்திரிக்கைப் பெட்டி, சவரஞ்செய்யும் உபகரணம், மின்விசிறி, மின்விளக்கு, நீரிறைக்கும் இயந்திரம் ஆகிய பல்வேறு உபகரணங்களை வீடுகளில் மின்சாரத்தினால் இயக்குகின்றோம்.

இத்தகைய சூழலிலே மின்சார உபகரணங்களின் குறைபாடு அல்லது மின்சக்தி விநியோகத்தில் உள்ள கோளாறு காரணமாக வீடுகளில் விபத்துக்கள் ஏற்படுவதுண்டு. மின்சார பாவனையில் கையாள வேண்டிய தற்காப்பு முறைகளை வீட்டுத் தலைவியர் நன்கு தெரிந்திருப்பது அவசியம்.

சிறுவர்கள் விளைவுகளைப் புரிந்து கொள்ள முடியாதவர்கள். முதியவர்கள் முதுமை காரணமாக உடல் பலவீனம் உற்றிருப்பர் நினைவு, சக்தி குறைந்து காணப்படுவர். இதனால் முதியவர்களும் வீடுகளில் காணப்படும் விபத்துச் சூழலை உணர்ந்து கொள்ள மாட்டார்கள். இந்த நிலையில் வீட்டு விபத்துக்களைத் தவிர்க்கும் அல்லது தடுக்கும் பாதுகாப்புக்களைத் தேடிக் கொள்ளும் பொறுப்பு குடும்பத் தலைவிகளைச் சேருகிறது.

வீட்டில் உள்ள முதியோர் சிறுவர்களுக்குப் பார்வை, கேள்வி சம்பந்தமான கோளாறுகள் இருப்பின் உடனே வைத்தியர்களிடம் காட்டி வைத்தியம் செய்தல் வேண்டும்.

மாடிப் படிகளுக்கு உரிய கைப்பிடி இருத்தல் அவசியம். வீட்டில் போதிய வெளிச்ச வசதி தேவை வழுக்கும் தோல் இணைத்த சப்பாத்துக்கள் செருப்புகளை முதியோர், சிறுவர் பாவிக்கக் கூடாது.

பால், தண்ணீர், எண்ணெய் ஆகியவற்றைக் கொதிக்க வைக்கும் போது அடுக்களையில் அவதானம் தேவை. கூர் மிக்க கத்தி போன்ற ஆயுதங்களை அடுக்களை, தோட்டங்களில் உபயோகிக்கும்போது அவற்றை பிளாஷ்டிக் உறைகளில் கவனமாக வைத்தல் நல்லது சிறுவர்களின் கைக்கு அவை எட்டாதவாறு பார்த்துக் கொள்வது அவசியம்.

நஞ்சு, மருந்து, பசளை வகைகள், கிருமிநாசினி, குளிகைகள், பெயின்ட் ஆகியவற்றைக் கவனமாக வைத்தல் வேண்டும். சிறுவர்கள், முதியவர்கள், கண்பார்வை குறைந்தோர், சித்தசுவாதீனம் இல்லாதவர்கள் இவற்றை எளிதில் கையாளாத வண்ணம் கவனம் எடுத்தல் வேண்டும்.

கணவனையும் குழந்தைகளையும் கண்ணும் கருத்துமாகப் பேணிக் காக்கும் குடும்பத் தலைவிகளுக்கு வீட்டு விபத்துக்களைத் தடுப்பதிலும் அவதானம் அவசியம்.




### குருவிகள்

சின்னச் சின்னக் குருவிகள்
சிறகடித்துப் பறக்குதே!
என்னைச் சுற்றி எங்குமே
இனிய கீதம் பாடுதே!
*
வண்ண வண்ணப் பறவைகள்
வானில் வட்டம் இடுகுதே!
எண்ணி, எண்ணிப் பார்க்கிறேன்
இன்னும் என்ன வேண்டுமே!

- தம்பி -

## அரசனின் மூடத்தனம்

முன்னொரு காலத்திலே கலாரசிகனான ஓர் அரசன் இருந்தான். அவன் ஒரு விநோதப்பிரியன். ஒரு நாள் நடுத்தர வயது மதிக்கத்தக்க ஒரு மனிதன் அரசனிடம் வந்து "அரசே நான் ஒரு பெரிய அதிசய சாதனை ஒன்றை உங்களுக்குச்செய்து காட்டப் போகிறேன். நீங்கள் அதற்கு அனுமதி வழங்கிப் பிரசன்னமாக இருக்கவும் வேண்டும்" என்றான்.

அரசனும் "அது என்ன அதிசய சாதனை?" என்றான். அந்த மனிதன் "மன்னவா, இவ்வூர்ப் புறத்தில் நந்திமலை என்று ஒரு மலை இருக்கின்றது. அதை நான் பெயர்த்து என் தோள்களில் வைத்து சுமந்து காட்டப் போகிறேன்" என்றான். அரசன் அதிசயப்பட்டு "ஒரு சாதாரண மனிதனால் செய்யக்கூடிய விஷயமா இது" என்று வினவினான். அம்மனிதனும் "நான் செய்து காட்டுவேன். நம்புங்கள் அரசே" என மன்றாடினான்.

அரசனும் இதனை நம்பி, இந்த நிகழ்ச்சிக்கு ஒரு நாளும் குறித்து, தனது மந்திரி பிரதானிகளுடன் குறித்த தினத்தில் மலையடிவாரத்திற்கு வந்தான். தேர்த்திருவிழாவிற்குப் போல் பெரிய கூட்டம் சேர்ந்து விட்டது.

அந்த விநோத மனிதனும் மலையடிவாரத்திற்கு வந்து அரசனை வணங்கி விட்டு மலையைத் தூக்க ஆரம்பித்தான். முடிகிற காரியமா. உடனே அவன் அங்கு கூடியிருந்த ஜனங்களைப் பார்த்து, "சகோதரர்களே, உங்களுக்கு கொஞ்சமும் இரக்கமில்லையா? நான் இவ்வளவு கஷ்டப்படுகிறேனே. நீங்கள் பார்வையாளர்களாக மட்டும் இருக்கிறீர்களே நீங்களும் என்னுடன் சேர்ந்து இந்த மலையைத் தூக்க உதவுங்கள், பார்வையாளராக இருக்காதீர்கள்" என்றான்.

அரசனும் அந்த மனிதனை நம்பிய மூடத்தனத்தை எண்ணி வேதனையும் வெட்கமும் அடைந்தான்!

— ரி. என். சர்மா —



## சுவைத்துப் பாருங்கள்!

### தேங்காயில் தயாராகும் இனிமை மிகு சிற்றுண்டிகள்

ஆனை விலை, குதிரை விலையாகக் காணப்பட்ட தேங்காய் இன்று தேடுவாரற்று மலிந்து காணப்படுகின்றது இதனை உங்கள் கைவண்ணத்தில் இனிமையான உணவுகளாகத் தயாரிப்பதுடன் விலைமதிப்புள்ள பண்டங்களாக்கி விற்பனையும் செய்து கொள்ளலாம்.

**தேங்காய்ப்பால் இனிப்பு:**

தேவையான பொருள்கள்:
2 கோப்பை தேங்காய்ப் பால்,
அரைக் கிலோ சீனி
கலரிங்
வனிலா அல்லது ஏலம்
விரும்பின் சிறு துணிக்கைகளாக்கப்பட்ட கச்சான் அல்லது கஜு.

**செய்முறை:**

ஒரு பாத்திரத்தில் தேங்காய்ப்பாலையும் சீனியையும் இட்டு தடிப்பாகும் வரை நன்கு காய்ச்சவும். பின்பு கச்சான், வாசனைப் பொருள், நிறம் என்பன இட்டு ஒரு பட்டர் தடவிய தட்டிலூற்றவும் பின்பு துண்டுகளாக்கிப் பரிமாறவும். விரும்பின் இறுக்கமாகும் பருவத்தில் உருண்டைகளாக்கிக் கொள்ளலாம்.

**தேங்காய்ப்பூ இனிப்பு:**

தேவையான பொருள்கள்:
ஒரு தேங்காய் – வாசனைப்பொருள்
அரைக் கிலோ சீனி – கலரிங்
ஒரு கோப்பை நீர்

**செய்முறை:**

தேங்காயை நன்கு மெல்லிய துருவல்களாகத் துருவிக் கொள்ளவும். பின்பு வறுத்து எடுக்கவும். ஒரு கோப்பை நீரில் சீனியைப் பாணி காய்ச்சி, பூவையும், வாசனை, நிறம் என்பன சேர்த்து பாத்திரத்தில் ஒட்டாத பதம் வரும் வரை கிளறவும். பின்பு பட்டர் தடவிய தட்டில் இட்டு இறுகிய பின்பு துண்டுகளாக்கவும்.

(மிகுதி அடுத்த வாரம்)

## டெலிபோன்மூலம் வஞ்சம் தீர்த்தார்

டெலிபோன் மூலம் எதிரியை வஞ்சம் தீர்த்துக் கொண்ட புதுமைப் பெண் ஒருத்தி பற்றி ஜப்பானில் இருந்து செய்தி வெளியாகி உள்ளது.

டோக்கியோ நகரில் இச்சம்பவம் இடம் பெற்றதாக ஏ. எப். பி. செய்தி ஸ்தாபனம் செய்தி வெளியிட்டு உள்ளது.

38 வயதான மாஸா இயோரி என்ற பெண் 42வயதான தனது அயல் வீட்டுப் பெண்ணுடன் கடந்த பெப்ரவரியில் கோபித்துக்கொண்டார். நீச்சல் தடாகம் ஒன்றின் அருகில் கார் தரிக்கும் இடம் பற்றிப் பிரச்சினை மீது இருவரும் கோபித்துக் கொண்டனர்.

ஆத்திரத்தைத் தீர்த்துக் கொள்ள இயோரி தனது டெலிபோனை ஆயுதமாகப் பாவிக்கத் தொடங்கினர்.

தினமும் நள்ளிரவில் இருந்து அதிகாலை 4 மணி வரை இயோரி எதிரிக்கு டெலிபோன் செய்வார். பாவம் அயல் வீட்டுப் பெண். டெலிபோனை எடுக்கும் போது இயோரி தனது டெலிபோனை வைத்து விடுவார்.

அது மட்டுமல்ல. அயல் வீட்டுப் பெண் மணி டெலிபோன் மூலம் ஆர்டர் கொடுப்பது போல் இயோரி தனது டெலிபோன் மூலம் உணவு வகைகளுக்கு ஆர்டர் கொடுப்பார். அயல் வீட்டுப் பெண்ணே பொருள்கள் வாகனத்தில் வந்திறங்குவதைக் கண்டு திக்குமுக்காடிப் போய் விடுவார். அத்துடன் பெருந்தொகைப் பணத்தைக் கட்டவும் செய்தார்.

அத்துடன் நிற்கவில்லை, ஒரு முறை 120 டொலர் பெறுமதியான பச்சை மீன் அவரது வீட்டுக்கு வந்திறங்கவே அவர் திணறிப் போய்விட்டார்.

இப்படி எண்ணூறு தடவை டெலிபோன் மூலம் தொல்லைப்படுத்திய இயோரியை டோக்கியோ பொலீஸார் கைது செய்தனர்.

## எழுத்தாளர் சாதனை எட்டுவழிகள் காரணம்

எழுதி எழுதியே பத்து வருடங்களில் ஒன்பதரைக் கோடி ரூபாக்களை சம்பாதித்திருக்கிறார் ஒரு எழுத்தாளர்.

'கோட் ஃபாதர்' என்ற நாவலை எழுதி உலகப் புகழ் பெற்ற மரியோ புஸோதான் அந்த எழுத்தாளர்.

தாம் முன்னேறகடைப்பிடித்த வழிகளை மற்றைய எழுத்தாளர்களுக்கு ஆலோசனையாக தருகிறார் அவர். அவை உங்களுக்கும் உதவக் கூடும்:-

- ✶ நான் என்ற வார்த்தையை உபயோகிப்பதைத் தவிர்த்துக்கொள்.
- ✶ நீ எழுத விரும்பியதை யாருக்கும் காட்டாதே.
- ✶ நீ எழுதி முடிப்பதற்கு முன்பு அதைப்பற்றி யாரிடமும் பேசாதே.
- ✶ எழுதுவதை மீண்டும் மீண்டும் திருத்தி எழுதுவதில் தான் எழுத் எழுத்தாளனின் ரகசியமே இருக்கிறது.
- ✶ எழுத்து பிரகரமாவதற்கு முன்னர் அதை சினிமாவுக்கு விற்று விடாதே.
- ✶ குடும்பச் சண்டைகள் எழுத்தைப் பாதிக்காமல் பார்த்துக் கொள். காலையில் எழுத வேண்டுமானால் முதல் நாள் பூராவும் மனைவியோடு பேசாதே.
- ✶ நிறைய படி; நிறைய சினிமாவுக்குப் போ.
- ✶ உன்னைத் தவிர வேறு யாரையும் நம்பாதே.

## இருநூறு மொழிகள் ஆபிரிக்காவில்

ஆபிரிக்கக் கண்டத்தில் எத்தனை மொழிகள் பேசப்படுகின்றன?

200 ஆபிரிக்க மொழிகள் பேசப்படுகின்றன. இவற்றை விட 20,000 உள்ளூர் மொழிகளும் பழங்குடிகளால் பேசப்படுகின்றன.

பிரஞ்சு, ஆங்கிலம், போர்த்துக்கீஸ் மொழிகளை பேசும் ஆபிரிக்கர்கள் 5 இல் இருந்து 20 சதவீதம் வரை இருப்பதாகக் கணக்கிடப்பட்டுள்ளது.

ஆபிரிக்காவில் பரவலாகப் பேசப்படும் மொழிகள் ஹோஸா (மத்திய ஆபிரிக்கா), சுவாஹிலி (கிழக்கு ஆபிரிக்கா) ஆகியன.

40 கோடி ஆபிரிக்கர் சுவாஹிலி மொழியைப் பேசுகின்றனர். இரண்டரைக் கோடி மக்கள் ஹோஸா மொழியைப் பேசுகின்றனர்.

## 112 வயதில் விட்டது ஆஸ்த்மா

முதுமை அடைந்தவர்களுக்கு நோய் வந்தால் மாற்றமுடியாது என்று நம்மவர்கள் கூறுவார்கள்.

அது சரியானதா?

பெலி ரைன்ஸ், டப்ளின் வாசி. பின்னர் அமெரிக்காவில் குடியேறினார். அப்போது அவருக்கு வயது 11. அமெரிக்கா வந்த பின்னர் அவருக்கு ஆஸ்த்மா பிடித்தது.

ஆஸ்த்மா நோயாளிகளைப் பார்த்தவர்கள் நித்ய கண்டனம், பூரண ஆயுசு' என்பார்கள்.

ஒன்று, இரண்டு அல்ல, 101 வருடங்கள் இவர் ஆஸ்த்மாவினால் அவதிப்பட்டார்.

112 ஆவது வயதில் இவருக்கு ஆஸ்த்மா சுகமாயிற்று.

பின்னர் அந்த நோயே இல்லாமல், சுகதேகியாக மேலும் 11 ஆண்டுகள் வாழ்ந்தார்.

1811 இல் பிறந்த இப்பெண் 1934 ஆம் ஆண்டு ஏப்ரல் 15 இல் மறைந்தார்.

எய்ட்ஸ் நோய்:

## முத்தக் காட்சிகளை இனி அடிக்கடி காண முடியாது

ஆங்கிலப் படங்களில் இதழோடு இதழ் சேர்க்கும் முத்தக்காட்சிகள் இனி சர்வசாதாரணமாக இடம்பெற முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

'எய்ட்ஸ்' நோய் பயம் ஹொலிவூட் நடிக நடிகையர் மத்தியில் ஏற்பட்டு வருவதே இதற்குரியகாரணமாகும்.

58,000 உறுப்பினர்களைக் கொண்ட அமெரிக்க திரைப்பட ரெலிவிஷன் நடிகர் சங்கம் தயாரிப்பாளருக்கு விடுத்தவேண்டுகோள் ஒன்றில்,

எய்ட்ஸ் நோய் பீடிக்கப்படும் பயம் உள்ளதால், இதழோடு இதழ் சேர்க்கும் முத்தக்காட்சிகள் இடம் பெறுவதுபற்றி நடிக, நடிகையருக்குமுன் கூட்டியேஅறிவிக்க வேண்டும் என்று கேட்டுள்ளது.

7,000 படத் தயாரிப்பாளர்களுக்கு இந்த வேண்டுகோள் அனுப்பப்பட்டுள்ளது.

நிர்வாணக் காட்சிகள், ஸ்டன்ட்காட்சிகளில் பங்குபற்றும் நடிக நடிகையர் பற்றியும் நடிகர் சங்கம் இது மாதிரி கொள்கையை வகுத்துள்ளது என்றும் கூறியுள்ளது.

எய்ட்ஸ் நோயினால் பீடிக்கப்பட்டு இருப்பது தெரிந்தும் லிண்டா இவான்ஸ் என்ற நடிகையுடன் முத்தக்காட்சி ஒன்றில் ரொக் ஹட்ஸன் நடித்தமை குறித்து கடுமையாக விமரிசிக்கப்பட்டது

ரொக் ஹட்ஸன் அண்மையில் எய்ட்ஸ் நோய் காரணமாக மரணமானார் என்பது தெரிந்ததே. ஆனால் நடிகை லிண்டா இவான்ஸ், ரொக் ஹட்ஸனில் மூன் பெருமதிப்பு வைத்திருந்ததாகக் கூறினர்.

எய்ட்ஸ் நோய் தன்னினச் சேர்க்கையில் ஈடுபடுபவர்களைத் தான் பெரும்பாலும் பீடிக்கின்றது என்றும்,

திரைப்பட நடிகர் சங்கத்தின் உறுப்பினர்களில் பத்து சத வீதமானவர் தன்னினச் சேர்க்கை பழக்கம் உள்ளவர்கள் என்றும் கழக வட்டாரங்கள் கூறின.

## பஞ்சாமிர்தம் பலாசஅமிர்தம்

## அழுகைக்குப் பரிசு ஜனாதிபதி பதவி

மனம் உருகி அழுதால் இறைவனை அடையலாம். இப்படி இந்து சமயம் கூறுகின்றது.

ஆனால் அழுதே ஜனாதிபதியானர் ஒருவர். இது அமெரிக்காவில் நடந்தது.

1840 இல் நடந்த தேர்தலில் திரு. ஹரிஸன் ஜனாதிபதி பதவிக்கு நியமிக்கப்பட்டார்.

அப்பதவிக்கு ஹென்றி கிளே என்பவர் நியமிக்கப்படாதது, ஜோன் ரைலருக்கு மிகவும் கவலையளித்தது.

அழத் தொடங்கி விட்டார். அவரது அழுகையை அதிகாரிகளால் நிறுத்த முடியவில்லை.

வட்பாளர் தெரிவு மாநாட்டு அதிகாரிகள் ஒரு முடிவிற்கு வந்தனர். ஜோன் ரைலரை உப ஜனாதிபதி வேட்பாளராக நியமித்து விட்டார்கள்.

அவரது அழுகை நின்றது. தேர்தலில் வெற்றியீட்டிய ஹரிஸன், ஒரு மாதமே ஜனாதிபதியாகப் பணி புரிந்தார். பின்னர் சுகயீனம் காரணமாக இறந்து போனார்.

ரைலர், பின்னர் அமெரிக்க ஜனாதிபதியானர்.

அழுகைக்குக் கிடைத்த பரிசைப் பார்த்தீர்களா?

### குளிப்பதை வெறுப்பவர்கள்

தினமும் நாம் குளிக்க வேண்டும். இது இயற்கையாகவே நாம் கடைப்பிடிப்பது.

ஆனால் பர்மா நாட்டில் உள்ள கச்சின் பழங்குடிமக்கள் அப்படி அல்ல.

குளிப்பதையே அவர்கள் வெறுக்கின்றார்கள்.

கச்சின் பழங்குடிகள் வாழ்விலே மூன்று முறை தான் குளிப்பார்கள்.

ஒன்று, பிறந்தவுடன்.

இரண்டு, திருமண தினத்தன்று.

மூன்று, இறந்த பின்னர்.

## பட்டினியா? பாதுகாப்பா? அமெரிக்காவில் எது முக்கிய பிரச்சினை?

அமெரிக்காவில் ஒரு கோடி 33 லட்சம் குழந்தைகள் பட்டினியால் வாடுகின்றன. இரண்டு கோடி மக்களுக்கு உணவுப் பஞ்சம்.

அமெரிக்காவின் பென்ரகன் பாதுகாப்புத் திட்டத்துக்கு செலவிடும் தொகையில் இரண்டு சதவீதத்தை இச் செலவுக்கு ஒதுக்கினால் அங்கு பட்டினிப் பிரச்சினை முற்றாக ஒழிந்துவிடும்.

[illegible] றேகன் நிர்வாகம் இதற்கு தயாரில்லை. பட்டினிப் பிரச்சினையை விட பாதுகாப்பு பிரச்சினையே அவர்களுக்கு முக்கியமாகப் படுகிறது.

பென்ரகன் பாதுகாப்புக்கு மட்டும் 570கோடி டாலர் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

அதே நேரத்தில் 1986 வரவு செலவுத் திட்டத்தில்' சமூக நலன்புரிச் சேவைகளுக்கான செலவினத்தில் மேலும் வெட்டுக்களைக் கொண்டு வர றேகன் நிர்வாகம் முனைந்துள்ளது.

[illegible]கள். நோய்களினால் இறக்கும் குழந்தைகளின் எண்ணிக்கையை விட, உணவு இன்றி இறக்கும் குழந்தைகளின் எண்ணிக்கை அமெரிக்காவில் அதிகம் என்று 'குழந்தைகளைக் காக்கும்' அமெரிக்க நிறுவனம் ஒன்று தகவல் வெளியிட்டு உள்ளது.

குழந்தைகளுக்கான போஷாக்குச் செலவீனம் இவ் வருடம் 700 மில்லியன் டாலரால் வெட்டப்பட்டுள்ளது. இதன் காரணமாக 18,000 பாடசாலைகளில் உள்ள உணவு விடுதிகள் மூடப்படவுள்ளன.

## ★ அமெரிக்காவா? ★ எமெரிக்காவா?

அமெரிக்கா, இத்தாலியக் கடல் பிரயாணி ஒருவருக்கு கடமைப்பட்டுள்ளது என்பது நன்கு தெரிந்ததே.

காரணம் அந்த இத்தாலியரின் பெயரை, தனது நாட்டின் பெயராக அமெரிக்கா கொண்டு உள்ளதே.

ஜோர்ஜ் பெர்ஜர் என்ற விஞ்ஞானி, அந்த இத்தாலியப்பயணி பற்றி ஒரு புத்தகம் எழுதுவதில் ஈடுபட்டிருந்தார்.

அச்சமயம் இத்தாலியப் பயணியின் உண்மையான கையெழுத்துக் கொண்ட சுவடி ஒன்றை, சுவடிக் கூடம் ஒன்றில் கண்டுபிடித்தார்.

கையெழுத்து லத்தீன் மொழியில் இருந்தது.

எமரிகஸ் வெஸ்புஸியஸ் (Emerigus Vespuccius) என்பதே அக் கையெழுத்து.

அமெரிக்கா என்று அந்த நாட்டை அழைப்பதில் ஒரு பிழை கண்டு பிடிக்கப்பட்டது.

'எமெரிக்கா' என்றே அமெரிக்காவை அழைக்க வேண்டும். அதுதான் சரி- இப்படி ரஷ்யாவில் இருந்து(எம் என்) மொஸ்கோ நியூஸ் இதழ் கூறுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பகுதி II**

# வடமராட்சியின் பனைவளம்
## விருத்தி செய்யின் பெரும்பயன்

இலங்கையின் வடமாநிலத்தில் குறிப்பாக வடமராட்சியின் ஓர் இணையற்ற இயற்கை வளம் பனை இப்பகுதியின் வற்றாத புதையல் இது என்று கூறின் அது மிகையாகாது.

பனையின் குருத்தோலையிலிருந்து, வேர் வரை சகல பாகங்களும் மிக்க பயன் தருவதாக உள்ளன. மனிதனுக்கும், கால்நடைகளுக்கும் உணவுப் பொருள்களைப் பெறுதல், மருந்துப் பொருள்களை உற்பத்தி செய்தல், வெல்லம் தயாரித்தல், கைப்பணிப்பொருள்கள் தயாரித்தல் என்று இதன் பயன்களை அடுக்கிக் கொண்டே போகலாம்.

ஏனைய பயிர்களைப் போல இதற்குப் பண்படுத்தல், உரமிடுதல், நீர்ப்பாசனம், பாதுகாத்தல் போன்ற செயல்முறைகள் அவசியமற்றவை. வறண்ட நிலம், மணல் தறை, கடற்கரை, சுண்ணும்புக் கற்பாறை... போன்ற எப்பகுதிகளிலும் பனையைப் பயிரிடலாம். இயற்கையின் நன்கொடையாகக் கிடைத்த இவ்வளத்தை நவீனமயப்படுத்தி, மேலும் அபிவிருத்தி செய்வதன் மூலம் வடமராட்சிப் பகுதி மக்களின் பல்வேறு சமூக பொருளாதாரப் பிரச்சினைகளுக்கு ஓரளவு தீர்வு காண முடியும்.

பனையின் மூலமான பிரதான உற்பத்திப் பொருளாக நாம் பனங்கட்டியைக் கொள்ளலாம். பதநீரிலிருந்தே பனங்கட்டி தயாரிக்கப்படுகின்றது. 12 கலன் பதநீரிலிருந்து 15 இரு. பனங்கட்டி தயாரிக்க முடியும். இதன் மூலம் 8 மாதங்களுக்குத் தொடர்ச்சியான பலனைப் பெறக்கூடியதாகவுள்ளது.

பனங்கட்டிக்கு உள்ளூரில் சிறந்த சந்தை வாய்ப்பும் உண்டு. எமது நாட்டில் நிலவும் சீனிப்பற்றுக் குறையைப் பனங்கட்டி மூலம் நிவர்த்தி செய்ய முடியும். வடமராட்சியில் வருடாந்தம் பதினொரு இலட்சத்து 43 ஆயிரம் இறாத்தல் டனங்கட்டி உற்பத்தி செய்யப்படுகின்றது. மேலும் சிறப்பான முறையில் இவ்வளத்தைப் பயன்படுத்துவோமாயின் உற்பத்தியை மேலும் பெருக்கிக் கொள்ளலாம்.

உலகசந்தையில் சீனியின் விலை உயர்வு காரணமாக இலங்கை மிகவும் நெருக்கடி நிலையை எதிர்நோக்கியுள்ளது. இந்நிலையில், பனங்கட்டி உற்பத்தியை வர்த்தக ரீதியில் இடம்பெறச் செய்தல் மூலம் இந்நெருக்கடி நிலையைத் தீர்த்துக் கொள்ளலாம்; மேலும்

இது சிறந்த ஔடதமாகும்.

பனஞ்சீனி, பனங்கட்டி செய்யும் பருவ காலம் தவிர்த்து ஏனைய காலங்களில் பன்ன வேலையில்

தேவையில்லை.

பனம்நாரைக்கொண்டு குப்பைக்கூடை, சைக்கிள் கூடை, நாற்காலிவகை, உல்லாச இருக்கைகள், கயிறு, வடம், நூல்,

கூடைகள், நவீனரகத் தொப்பி, சுவர் மாட்டிகள், தட்டங்கள், கைப்பைகள், அழகிய பூங்கொத்து போன்றவற்றையும் உற்பத்தி செய்யக்கூடியதாகவுள்ளது. இவை வெளிநாட்டவரை வெகுவாகக் கவரும் என்பதில் ஐயமில்லை இக்கைப்பணிப் பொருள்களை

ஏற்றுமதி செய்வதன் மூலம் அதிக அந்நியச் செலாவணியையும் பெறலாம்.

மேலும் இத்தகைய கைத்தொழில்கள் யாவும் முற்றாக மனித ஊழியத்தையே வேண்டி நிற்கின்றன. எனவே வடமராட்சியில் பெருகிவரும் சனத்தொகைக்கு வேலை

### அந்நியச் செலாவணி பெற அருமையான ஒரு வழி

பனங்கட்டிக்கு நல்ல சந்தைப் பெறுமதியும் கிடைக்கும். இலங்கையில் சி. ஐ. எஸ் ஐ ஆர். நிபுணர்கள் சீனி, டனங்

ஈடுபட முடியும். பனை ஓலை, பனம்நார், பனந்தும்பு போன்ற பல்வேறு பாகங்களையும் கொண்டு சிறந்த கைப்பணிப்

கைப்பை போன்ற பொருள்களை உற்பத்தி செய்யக்கூடியதாக உள்ளது. பனையோலை, ஈர்க்கு என்பவற்றின் மூலம் பெட்டி, பாய், கடகம் மட்டுமே செய்ய முடியும் என்ற நிலைமாறி அழகிய

**சி. அம்பிகாவரன்**

கட்டி என்பவற்றின் உற்பத்தித்தொழிலைக் கூட்டுறவு மூலம் மேற்கொண்டால் நல்ல பயன் பெறலாம் எனச் சிபார்சு செய்துள்ளார்கள்.

இவ்வாய்வுக் குழுவினர் வடமாகாணத்தில் கோண்டாவில், திருநெல்வேலி, வரணி, வடமராட்சி, காங்கேசன்துறை, அராலி ஆகிய இடங்களில் சீனித்தொழிற்சாலை அமைக்கலாம் எனக் குறிப்பிடப்பட்டமை ஈண்டு நோக்கற்பாலது. பனங்கட்டியை விடப் பனஞ்சீனி, பனங்கற்கண்டு போன்றனவும் பதநீரிலிருந்து தயாரிக்கப்படுகின்றன.

பனங்கட்டியானது வருமானத்தைப் பெற்றுத் தருவதோடு சிறந்த ஆரோக்கிய வாழ்க்கைக்கும் உதவுகின்றது கர்ப்பிணிகள், பாலூட்டும் தாய்மார் போன்றோருக்கும் சொறி, சிரங்கு, தடிமன், தலையிடி போன்ற நோய்களால் அலதிப்படுவோருக்கும்

பொருள்களை உற்பத்தி செய்யலாம். இவற்றை உற்பத்தி செய்வதற்கு அதிகமூலதனமோ, நவீன யந்திர வசதிகளோ

> **வாசகர் கவனத்திற்கு...**
>
> தமிழ் பிரதேசங்களான எமது தாயகத்தை விவசாயம், கைத்தொழில், பொருளாதாரம் ஆகிய துறைகளில் அபிவிருத்தி செய்வதற்கு வழிகாட்டுவதே இந்தப் பகுதியின் நோக்கமாகும்.
>
> மேற்கண்ட விடயங்களில் ஆய்வுரீதியான கட்டுரைகளும் நடைமுறைச் சாத்தியமான ஆலோசனைகளும் விரும்பி வரவேற்கப்படும்.

வாய்ப்பை வழங்கும் ஓர் பிரதான மூலமாக இத்தொழில் முயற்சி அமையலாம்.

பனம் பொருட்களில் அகிலப்புகழ் பெற்ற உற்பத்திப் பொருள் "பனந்தும்பு" ஆகும் ஐரோப்பிய நாடுகளில் இவற்றுக்கு நல்ல மதிப்பு நிலவுகிறது. துடைப்பம், தூரிகை போன்றவற்றைச் செய்வதற்கு பனந்தும்பு முதற்தரமானது. தன்னிகரற்றது

1892 – 1914 ஆண்டு வரை யாழ்ப்பாணத்திலிருந்து முதன்முதலாக ஐரோப்பிய நாடுகளுக்குப் பனந்தும்பு ஏற்றுமதியானது. யுத்தகாலத்தின் பின் இவ் ஏற்றுமதி சவனிப்பாரற்றுப் போய் விட்டது. அதிக வருமானந்தரத்தக்க இத்தும்புத் தொழிலைப் புனரமைப்புச் செய்வதன் மூலம் சிறந்த பலனைப் பெறலாம்.

இதைத்தவிர நவீனமயப்படுத்தப்பட்டமுறையில் மரபுரீதியான பனம் உணவுப் பொருட்கள், பனம்பானம், பனம் ோடியல், பனம் இரஷ், ஜாம் போத்தலிலடைக்கப்பட்டபதனீர் போன்றவற்றையும் தயாரிக்க முடியும்.

பனையிலிருந்து பெறப்படும் மற்றோர் பெறுமதிவாய்ந்த பொருள் ஊமல் ஆகும். ஊமலைக்கொண்டு சிறிய டப்பிகள், அகப்பைகள் போன்றன உற்பத்தி செய்யப்படுகின்றன. சிறந்த எரிபொருளாகவும் இதனைப் பயன்படுத்தலாம். ஊமலை விஞ்ஞான ரீதியில் அணுகிய சி. ஐ.எஸ். ஐ. ஆர். ஸ்தாபனத்தார் அதில் 34.6 வீதம் தூய பைரோலிக்னிய அமிலம் காணப்படுவதாகக் கூறுகின்றனர். மேலும் இதிலுள்ள அசெட்டிக்கமிலம் இறப்பரைக் கட்டியாக்க உதவுகின்றது. இலங்கை ஆண்டுதோறும் பெருமளவு அசெட்டிக்கமிலத்தை இறக்குமதி செய்கின்றது. பனைவளம் வடமராட்சி மக்கள் இவ்வமிலத்தைத் தயாரித்து இறப்பர்த் தொழிற்சாலைகளுக்கு விநியோகிக்கலாம். ஒரு அந்தர் நிறையுள்ள ஊமலிலிருந்து ஐந்து இரு. அசெட்டிக் கமிலமும், ஒரு இருத்தல் மீதைல் அற்ககோலும் தயாரிக்கப்படலாம். இதுவரை இந் நடவடிக்கை குறித்து, எவ்வித முயற்சிகளும் எடுக்கப்படவில்லை.

இந்த இரசாயனப் பொருளை எடுத்த பின் எஞ்சிய ஊமல்கரியைச் சிறந்த எரிபொருளாகவும் பயன்படுத்தலாம்.

இவை தவிர மருத்துவம், சித்த வைத்தியம் போன்ற துறைகளிலும் பனம் பொருட்கள் பயன்படுத்தப்படுகின்றன. பனங்கிழங்கிலுள்ள சில இரசாயனப் பொருட்கள் மேககரணம், வெள்ளை, வெட்டை, நீர்க்கருப்பு, சரும நிறமாற்றம் போன்ற நோய்களுக்கு அருமருந்தாகிறது. பனம் நுங்கு உயிர்ச்சத்து Aயையும், இரும்புச்சத்தையும் அதிகமாகக் கொண்டுள்ளது. மலச்சிக்கல், மூலாதாரச்சூடு, வயிற்றுக் கோளாறு போன்ற நோய்களைத் தீர்க்கக்கூடியது. இவை தவிரப் பனைவேரிலிருந்தும் பலவிதமான பொருட்களைச் செய்யக்கூடியதாக உள்ளது.

வடமராட்சியின் பனைவளத்தை நோக்கின் வடமராட்சி தெற்மேற்கிலுள்ள பனையின் தொகை 7 லட்சத்து 46 ஆயிரத்து 295 ஆகும். வடமராட்சி வடக்கு கிழக்கில் உள்ள பனையின் தொகை 5 லட்சம் 63 ஆயிரத்து 475 ஆகும். ஆனால் இதிலுள்ள மரங்கள் யாவும் முற்றாகப்பயன்படுத்தப்படுவதில்லைதற்போது 'பனை மூலவுயிர் முதலுருவங்கி' ஒன்று ஸ்தாபிக்கப்படும் முயற்சி இடம் பெற்று வருகிறது. இவ்வங்கி அகால முதிர்வுள்ள குறுகிய காலத்தில் பூக்கக்கூடிய பனை இனங்கள், தண்டின் வளர்ச்சி குறுகிய குட்டை மரங்கள், தரமான பதனீர் பெறக்கூடிய பனைமரங்கள் என்பனவற்றைக் கொண்டிருக்கும். இவ்வினங்களை விருத்தி செய்து வருடம் முழுவதும் பயன் தரத்தக்க வகையில் மாற்றியமைக்க வேண்டும். இதன் மூலம் இவ்வூர் மக்களின் பொருளாதாரப் பிரச்சனைகளின் சுமையை ஓரளவு தீர்த்துக் கொள்ள முடியும்.

(அடுத்த வாரம் வடமராட்சியின் சக்தி வளம்)




★ வடக்கின்

# முதலாவது தும்பு தொழிற்சாலை பூநகரியில் நிறுவப்பட்டது

வடமாகாணத்தின் முதலாவது தென்னந் தும்புத் தொழிற்சாலை பூநகரியில் நிறுவப்பட்டுள்ளது.

தனியார் நிறுவனம் ஒன்று நடத்தும் இத்தொழிற்சாலைக்குத் தேவையான மூலப் பொருளான தேங்காய் மட்டை, பூநகரி, டனை, சாவகச்சேரி, கிளிநொச்சி ஆகிய இடங்களில் இருந்து பெறப் படுகின்றது.

தொழிலாளர்களும் பூநகரியில் இருந்து தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள்.

5 லட்சம் தேங்காய்மட்டைகளை ஒரே நேரத்தில் ஊறப்போடுவதற்காகப் பாரிய கிடங்குகள் வெட்டப்பட்டுள்ளன.

சிறுகைத்தொழில் திணைக்களத்தில் இயங்கும் 9 நிலையங்களுக்குத் தற்போது தும்புத் தட்டுப்பாட்டினால் நெருக்கடிக்கு உள்ளாகியிருக்கின்றன.

அந்நிலையங்கள் நல்ல முறையில் இயங்குவதற்கு தேவையானதும்பைத் தயாரித்து வழங்க இத்தொழிற்சாலை முன் வந்துள்ளது. இதைவிட கயிறு, தும்புத்தடி, தயாரிக்கும் நிலையங்களை நிறுவவும் தொழிற்சாலை நிர்வாகம் நடவடிக்கை எடுத்து உள்ளது.

பூநகரிப் பகுதியில் படித்த வேலையற்ற இளைஞர்களுக்கும் யுவதிகளுக்கும் தொழில் வாய்ப்பை இந்நிலையங்கள் ஏற்படுத்திக் கொடுக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இத்தொழிற் சாலையில் முதலாம் கட்டத்தில் வருடம் ஒன்றிற்கு 3 லட்சம் கிலோ தும்பையும்–

இரண்டாம், மூன்றும் கட்டங்களில் முறையே 4 லட்சம் கிலோ, 5 லட்சம் கிலோ தும்பையும் தயாரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

இதைவிட ஆண்டொன்றுக்கு 300 தொன் சயிறு, 10,000 தும்புத் தடிகள் தயாரிக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. உள்ளூர் மூலப்பொருள்களைக் கொண்டு ஆரம்பமாகியுள்ள இத் தொழிற்சாலையினால் உள்ளூர்த் தேவையின் ஒரு பகுதியையாவது பூர்த்தி செய்ய முடியும் என்று நிர்வாகம் கருத்துத் தெரிவித்துள்ளது.

**இந்து நாகரிகம்**
**ஜி. சி. ச.**
**(உயர்தரம்)**

# வருணாச்சிரம தருமம் ஒரு வாழ்க்கை நெறி

★ வி. சிவசாமி எம்.ஏ ★
சமஸ்கிருதத் துறைத் தலைவர்,
யாழ். பல்கலைக்கழகம்

'இந்துசமூகம்' என்று கூறும்போது பலவகையான கருத்துக்கள் ஒருவர் மனதில் ஏற்படினும் அதன் மிக முக்கியமான இயல்புகளும் இலட்சியங்களும் 'வருணாச்சிரம தருமம்' என்ற சொற்றொடரில் அடங்கும். இது வர்ணம், ஆச்சிரமம், தருமம் என்ற மூன்று சொற்களைக் கொண்டது ஆகும். இப்பதங்களுக்குப் பலவாறு கருத்துக் கொண்டு இவை கூறும் குறிக்கோளைப் பலவாறு திரித்தும் மிகைப்படுத்தியும் பலர் கூறிவந்துள்ளனர். இவ்வாறு கூறியவர்களுள் வெளிநாட்டவர் மட்டுமன்றி உள்நாட்டவரும் அதாவது, இந்தியரும் அடங்குவர். சில வேளைகளிலே இவர்கள் தத்தமது கருதுகோளுக்கும் நோக்கத்திற்கும் ஏற்றவாறு பொருள் கூறிப் போந்தனர்.

**வருணம்**

முதலிலே, "வருணம்" என்ற பதத்தினை எடுத்துக்கொள்ளலாம். இப்பதம் நிறம், வெளிவடிவம், தோற்றம், ஒளி எனப் பல பொருள்படும். இந்தியாவில், மிகப் புராதன காலத்தில் வாழ்ந்த மக்கள் குறிப்பாக, ஆரியப் பண்பாட்டைக் கொண்ட மக்கள் தம்மை மற்றையோரிலிருந்து வேறுபடுத்துவதற்கு இப்பதத்தினை முதலிற் பயன்படுத்தினர் என்பர்.

ஒவ்வொரு நாட்டிலுமுள்ள பல்வேறு சமூகத்தினரும் தம்மைப் பிறரிடமிருந்து வேறுபடுத்தி வந்துள்ளமை குறிப்பிடற்பாலது. இவ்வாறு இப்பதம் ஒரு சமூகத்தினர் மற்றவர்களை வேறுபடுத்துதற்குப் பயன்படுத்தப்பட்டுப் பின்னர் சமூகம் முழுவதிலும் வாழ்ந்த மக்களைத் தொழில், நிறம், குணம் முதலியவற்றின் அடிப்படையிற் பகுத்துக் கூறுவதற்குப் பயன்படுத்தப்படலாயிற்று எனலாம்.

**நால்வகை வருணம்**

பிராமணர், க்ஷத்திரியர், வைசியர், சூத்திரர் எனச் சமூகத்தினர் நால் வகையினராக வகுக்கப்பட்டனர். இப்பிரிவுகள் பரம்பொருளிலிருந்து தோன்றினர் எனக் கூறப்பட்டது. எவ்வாறாயினும், இப்பிரிவுகள் முறையே சமூகத்தின் அறிவுக் குழுவினர், ஆளும் வர்க்கத்தினர், பொருளாதார உற்பத்தியாளர், தொழிலாளிகள் ஆகியோரைக் குறிப்பதாகவே கொள்ளப்படும்.

மனித உடலுக்கு தலை, மார்பு, கை, வயிறு, தொடை, கால் முதலிய எல்லா உறுப்புக்களும் எவ்வாறு இன்றியமையாதனவோ அவ்வாறே இவ்வகுப்பினரும் சமூகத்திற்கு அத்தியாவசியமானவர்கள்; சமூகத்தின் பிரிக்க முடியாத பகுதியினராவர்.

மேலும் பொதுவாக, இவர்களிடையே உறவுகள், தொடர்புகள் குறைவாகவோ அல்லது அருகியோ காணப்பட்டன வெனக் கருதினாலும் மநுஸ்மிருதி போன்ற தரும சாத்திரங்களைக் கொண்டு பார்க்கும்போது இவர்களிடையே நெருங்கிய தொடர்புகளும் இணைப்புமிருந்ததை அவதானிக்கலாம். வருணங்களுக்கிடையே தொடர்புகள், திருமணத் தொடர்புகள் முதலியன தாழ்ந்ததிலிருந்து உயர்ந்ததிற்குச் செல்லுதல் முதலியனவும் நிலவின. வழக்கமாகக் கருதப்படுவது போல பிறப்பினால் மட்டும் ஒருவனின் வர்ணம் ஏற்படாது. அவன் தனது உலகியல் அறிவு, ஆத்மீக ஞானம், பண்பு மூலம் தன்னிலையினை மேம்படுத்திக் கொள்ளலாம். சூத்திரனும் பிராமணன் ஆகலாம். இந்த நோக்கிலே பார்க்கும்போது திருவள்ளுவர் கூறும்,

"பிறப்பொக்கும் எல்லா வுயிர்க்கும் சிறப்பொவ்வா செய்தொழில் வேற்றுமை யான்"

என்பது நன்கு தெளிவாகும்.

இக்கருத்து உபநிடதங்களிலே மேலும் தெளிவாகின்றது. இவற்றின்படி பரம்பொருளை உணர்ந்த எவரும் பிறப்புச் சுழற்சியினின்றும் விடுதலை பெற்று அப்பரம்பொருளுடன் இரண்டறக் கலந்துவிடுவர். எனவே, இங்கு உயர்வு, தாழ்வு இல்லை. யாவரும் பரம்பொருளின் அம்சங்களே. [illegible]

இவை படிமுறையிலேயே முற்றிலும் நிலவின எனக் கொள்ள முடியாது

**வருணமும் சாதியும்**

இவ்வர்ணமுறையினைச் சாதிமுறையென முற்றிலும் அடையாளம் காண முடியாது. இன்றைய சாதிமுறை வேறு; வர்ண முறை வேறு, பகவத்கீதை கூறும் வர்ணமுறை குணம், தொழில் அடிப்படையிலானது. [illegible]

[illegible] டன் ஒன்று சேருவர்.

**ஆச்சிரமம்**

ஆச்சிரமம் என்னும் பதம் துறவிகளின்இருப்பிடம், வாழ்க்கையின் கட்டம், கல்விக்கூடம் எனப் பல பொருள்படும் இதன்படி தனி மனிதன் ஒருவனின் வாழ்நாள் பிரமச்சரியம், கிருகஸ்தம், வானப்பிரஸ்தம், சந்நியாசம் என நான்கு கூறுகளாக வகுக்கப்படும். இவை படிமுறையில் அமைவன; அதாவது, ஒன்றின் பின் ஒன்று ஏற்படும்.

**பிரமச்சரியம்**

வாழ்க்கையின் ஆரம்ப கட்டமே பிரமச்சரியம். பிரமச்சரியம் என்பது பரம்பொருளைப் பற்றிக் கூறும் வேதங்களைக் கற்று ஒழுகுதல் எனப் பொருள்படும் ஆனால், ஒவ்வொரு வருணத்தவரும் தத்தம் தொழிலுக்கான கல்வியினை, தொழிற் பயிற்சியினை இக்காலகட்டத்திலே பெறுவர். வேதங்களைப் பேணிப் பாதுகாத்தலும் அவற்றின்படி ஒழுகுதலும் [illegible]

[illegible] மையாகும்.

**கிருகஸ்தம்**

கிருகஸ்தத்தில் ஒருவன் மாணவப்பருவம் முடிந்து இல்லற வாழ்க்கையை மேற்கொள்ளுவான். இல்வாழ்க்கையே ஆச்சிரம தருமத்தின் அச்சாணி போன்றதாகும். ஏனெனில், மக்கட் சமூகம் தொடர்ந்து நிலவுவதற்கும் ஏனைய தருமங்களும் ஆச்சிரமங்களும் நிலவுவதற்கும் இல்வாழ்வானே பெரும் புணையாவான். இக்கருத்தினை மநுஸ்மிருதி போன்ற தருமசாத்திர நூல்களும் திருக்குறளும் வலியுறுத்துகின்றன. எடுத்துக் காட்டாக, திருவள்ளுவர் இக்கருத்தினை,

"இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும் நல்லாற்றின் நின்ற துணை."

என அழுத்திக் கூறியுள்ளார்.

**வானப்பிரஸ்தம்**

இல்லற வாழ்க்கையினை நன்கு நடத்திய பின் ஒருவன் தனியாகவோ மனைவியுடனோ சமூகத்திலே பற்றின்றி வாழ்வான். அல்லது சமூகத்திலிருந்து பிரிந்து சென்று வெளியே வாழ்வான்; காட்டிலும் வாழ்வான். இது வானப்பிரஸ்தம் எனப்படும்.

**சந்நியாசம்**

முடிவில், வாழ்வின் இறுதி நாட்களை முற்றும் துறந்த முனிவராகப் பற்றின்றிப் பரம்பொருளைத் தியானித்துக் கொண்டு கழிப்பான். இது சந்நியாசம் எனப்படும்.

இந் நான்கு ஆச்சிரமங்களையும் தொகுத்து நோக்கும்போது பிரமச்சரியம், வானப்பிரஸ்தம், சந்நியாசம் ஆகிய மூன்றிற்கும் புலனடக்கம். பற்றின்மை முதலிய சில பொது அம்சங்கள் இருப்பதை அவதானிக்கலாம்.

வாழ்க்கையின் முற்பகுதியிலே உலக இன்பங்களை இறைவழி நின்று அநுபவித்துப் பிற்பகுதியிலே பற்றினைத் துறந்து பரஞானிகளாக ஒருவன் வாழவேண்டுமெனக் கூறப்பட்டுள்ளது. இங்கு இல்லறம், துறவறம், உலகியல், பரஞானம் ஆகியன ஒன்றிணைக்கப்படுதலைக் காணலாம். மேலும் பிற்கட்டங்களிலே ஒருவன் சமூகத்திலிருந்து பிரிந்து வாழ்வான் என்பதைச் சொல்லொடு பொருளாக யாவரும் காட்டிற்குச் சென்றனர் எனக் கொள்ள முடியாது. இவ்வுலக வாழ்வு வாழ்ந்து கொண்டு தத்தம் இடங்களிலே உள்ளத்திலே துறவிகளாக, பற்றில்லாதவர்களாக வாழ்ந்தனர் என்பதே பொருத்தமான விளக்கமாகும்.

மேலும் இவ்வாச்சிரம முறை படிமுறையாக இருப்பினும் சிலர் உயர் நோக்கங்களுக்காக நைஷ்டிகப் பிரமச்சாரிகளாகவும் வாழ்வர். சுவாமி விவேகானந்தர், பீஷ்மாச்சாரியர் போன்ற பெரியோர்கள் நைஷ்டிகப் பிரமச்சாரிகளாக வாழ்ந்தனர்.

(அடுத்த வாரத்தில் தருமம் பற்றிய இயல்புகளையும் இலட்சியங்களையும் விரிவாகக் காணலாம்.)

> **மாணவ மணிகளே!**
>
> கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண, உயர்தர வகுப்பு) தேர்வுகளில் நீங்கள் சித்தி அடையச் "சஞ்சீவி" தனது பங்களிப்பைச்செய்ய விரும்புகிறது.
>
> பல்வேறு பாடங்களுக்குப் பாடவிதானத்தைத் தழுவிய சிறப்புப் போதனை வழிகாட்டிகளை (Tutorials) இந்தப் பகுதியில் வாரம் தோறும்தருவோம். படித்துப் பயன் பெறுங்கள்.
>
> -ஆசிரியர்-




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவாஜி ஒரு ஜாம்பவான்

## சினிமா உலகில் அவருக்குத் தனி இடம்

டைரக்டர் பாரதிராஜா ''லவர்ஸ்'' என்ற இந்திப் படத்தைத் தயாரிக்கின்றார். பம்பாய் படப்பிடிப்பின் போது பிரபல ஆங்கில சினிமா சஞ்சிகையான ''ஃபிலிம் பெயார்'' க்கு அளித்த பேட்டி இது.

கேள்வி: முதன் முதலாக 'பதினாறு வயதினிலே' படத்தைஎடுக்கும் போது நீங்கள் அடைந்த துன்பத்தையும் மகிழ்ச்சியையும் கூறமுடியுமா?

பதில்: 'தாகம்' படத் தயாரிப்பில் நானும் சமராமேன் நிவாஸும் ஈடுபட்டிருந்தோம். அச்சமயம் சொந்தமாக ஒரு படம் தயாரிக்க முடிவு செய்தோம். 'மயில்' என்ற தலைப்பில் படத்திற்கான வசனங்களை நான் எழுதினேன். இது புதுவிதமான ஒரு கலைப்படம். கதாநாயகியான மயில் படம் முழுவதும் நான்கு, ஐந்து வசனங்கள் மட்டுமே பேசுவார். படம் நன்றாக ஓடும் என நான் நிச்சயமாக நம்பினேன்.

இப்படத்தைத் தயாரிக்க நிதி உதவி கோரி பிலிம்ஸ் பினான்ஸ் காப்பரேஷனுக்கு விண்ணப்பித்தேன். காப்பரேஷன் எனது விண்ணப்பத்தை நிராகரித்து விட்டது. நான் மனங்கலங்கிப் போனேன்.

இக்கட்டத்தில் தயாரிப்பாளர் ராஜ்கண்ணு உதவிக்கு வந்தார். அவரை எனது ஞானபிதாவாக மதிக்கிறேன். எனது கதையில் அவர் மனதைப் பறிகொடுத்தார். ஆனால் அவர், படத்தை கொஞ்சம் வர்த்தக ரீதியில் தயாரிக்கும்படி சொன்னார்.

படத்தை டைரக்ட் செய்ய எனக்கு எண்ணமே இல்லை. சில டைரக்டர்களின் பெயர்களை, தயாரிப்பாளருக்குச் சிபார்சு செய்தேன்.

மூன்று தினங்களில் டைரக்டரின் பெயரைச் சொல்வதாக கூறி ராஜ்கண்ணு சென்றார்.

மூன்றும் நாள் ராஜ்கண்ணு வந்தார். நீங்கள் தான் படத்தின் டைரக்டர் என்று என்னிடம் சொன்னார். நான் திகைத்துப் போனேன். நான் விரும்பவில்லை. அவர் என்னை ஏற்கும்படி தூண்டுதல் செய்தார். 'மயில்' என்ற பெயரில் இருந்து 'பதினாறு வயதினிலே' என்று படத் தலைப்பு மாற்றப்பட்டது. அத்துடன் படப்பிடிப்பு ஆரம்பமானது.

கேள்வி:- இதுதான் நீங்கள் டைரக்ட் செய்த முதல்படம். படத் தயாரிப்பில் நீங்கள் புதிது. அத்துடன் அனுபவமும் குறைவு அந்த நிலைமையில் பிரபல நடிகர் நடிகைகளான கமலஹாசன், ஸ்ரீதேவி ஆகியோரை இயக்குவதில் உங்களுக்குக் கிடைத்த அனுபவம் எப்படி?

பதில்:- சொல்லக் கூடிய அளவு பிரச்சினைகள் எனக்கு இருக்கவில்லை. தொழிலின் ஆரம்பத்தில் இருந்து இது வரை விநியோகஸ்தர்கள், தயாரிப்பாளர்கள், கலைஞர்களிடமிருந்து எனக்கு எதுவித கஷ்டமும் ஏற்படவில்லை.

ஆரம்பத்தில் படத் தயாரிப்பில் நான் காட்டிய புதுமையும் சம்பிரதாயங்களுக்கு உட்படாத நோக்கையும் பார்த்து ஸ்ரீதேவி தான் சிறிது யோசனை செய்தார்.

''பாரதிராஜா தான் விரும்பியபடி படத்தைத் தயாரிப்பார். மரங்களையும் நீரோடைகளையும் மட்டும் தான் பாரதிராஜா படமாக எடுக்க விரும்பினால், அதுதான் படம்'' இப்படி ராஜ்கண்ணு அடித்துச் சொலலி விட்டார்.

அதன் பின்னர் பிரச்சினையே எழவில்லை. பதினாறு வயதினிலே வெற்றிபபடமானது.

கேள்வி:- இன்றைய தமிழ் சினிமாவின் மிகப் பழைய முகமான சிவாஜி கணேசனை வைத்து 'முதல் மரியாதை' படத்தைத் தயாரித்தீர்கள். நட்சத்திரத்தை உருவாக்குபவர் என்ற உங்கள் நிலையில் இது ஒரு பெரும் மாற்றம் அல்லவா?

பதில்;- பட உலகில் சிவாஜி ஒரு ஜாம்பவான். உலக சினிமாவிலே அவருக்கு தனி இடம் உண்டு. அந்த உலகில் எனக்கு ஒரு இடம் தேவைப்பட்டது.

நாளை சிவாஜியைப் பற்றி பேசும் போது, அவரை வைத்து இயக்கிய நல்ல டைரக்டர்களில் பாரதிராஜாவும் ஒருவன் என்று பேசப் படவேண்டும்.



சொல்லாமல் கொள்ளாமல் சிவாஜி–லட்சுமியை அறுபதாம் கல்யாணம் செய்துகொண்டுவிட்டாரோ? இல்லை, இல்லை. அப்படியொரு விபரீதமும்நடந்துவிடவில்லை, எல்லாம் திரையில்தான்.

படம்: ஆனந்தக் கண்ணீர்.

தயாரிப்பு: பேரின்பம்

## கவர்ச்சிக் கன்னியின் வேதனம் என்ன?

ஹொலிவூட் திரையுலகின் கனவுக் கன்னியாகத் திகழ்ந்தவர் சோபியா லோறன். கவர்ச்சியின் மறுபெயர் சோபியா லோறன். அவரின் அங்கங்கள் அனைத்தும் கவர்ச்சியின் சின்னங்கள்.

அவரின் வாழ்க்கையின் ஆரம்ப காலம் மிகவும் சோகமானது. வறுமையில் வாடிய அவர், துணை நடிகையாகப் படவுலகில் புகுந்தார்.

முதன்முதல் துணை நடிகையாக நடித்து அவர் பெற்ற வேதனம் எவ்வளவு என்று நினைக்கிறீர்கள்? ரூபா இருநூற்று நாற்பது மட்டுமே.

அதிர்ஷ்டதேவதையும் அவரின்கவர்ச்சியில் மயங்கினாளோ என்னவோ?

அவருக்குசினிமாமார்க்கெட் விறுவிறு என்று ஏறத் தொடங்கியது. அதேபோல் அவரின்வேதனமும் போட்டி போட்டுக் கொண்டு ஏறியது.

1965-ஆம் ஆண்டு வெளியான ''தி ஃ பால் ஆவ் ரோமன் எம்பயர்'' என்ற படத்திற்கு அவர் வாங்கிய பணம் 72 லட்சம் ரூபா. கறுப்புப்பணம் எவ்வளவோ?

–பிஸ்கின்

## திரை உலகில்

நீண்ட நாட்களுக்குப் பிறகு பானுப்பிரியா தமிழில் நடிக்கிறார். தெலுங்கில் மிகவும் பிரபலமாக இருக்கும் அவர் ''பாடும் பறவைகள்'' படத்தின் மூலம் மீண்டும் தமிழ்த் திரையுலகுக்கு வருகிறார்.

★ ★ ★

''கோபுரங்கள் சாய்வதில்லை''யின் இந்திப் பதிப்பான ''நஸீப் அப்னா அப்னா''வில் தமிழில் சுகாசினி நடித்த வேடத்தில் ராதிகா நடிக்கிறார்.

★ ★ ★

''இரவுப் பூக்கள்'' படத்தின் பெயர் ''இரவுக்கு ஆயிரம் கண்கள்'' என்று மாற்றப்பட்டுள்ளது.

★ ★ ★

## சென்றவார செய்திக்கொத்து

ஜனவரி 25 — 31

சனி:

● கிளிநொச்சி ரயில் நிலையத்தில் 11 தமிழர் சுட்டுக் கொலை. அங்கு மோட்டோ ஷெல் தாக்கி 6 தமிழர் பலி.

● ஜெயலலிதா மன்றங்களைக் கலைக்க எம். ஜி. ஆர். உத்தரவு.

ஞாயிறு:

● ஒட்டுசுட்டானில் 8 தமிழர் சுட்டுக் கொல்லப்பட்டனர்: 3 பொலிஸார் பலி. போராளிகள் — பொலிஸார் நேரடி மோதல்.

● தமிழரைத் தாக்குவதை நிறுத்துக — அலன் தம்பதிகள் ஜனாதிபதிக்குக் கடிதம்.

திங்கள்:

● தலவாக்கலையில் பதற்றம்: மலையகத் தமிழர் தாக்கப்பட்டனர். ஊரடங்கு அமுல்.

● கும்புறுபிட்டியில் 7 தமிழர் பலி.

● சுன்னாகத்தில் ஆர்ப்பாட்ட ஊர்வலம்.

● கிளிநொச்சி ரயில் நிலையக் கோரக்கொலை; பாரபட்சமற்ற விசாரணை நடத்துவதாக லலித் உறுதி.

செவ்வாய்:

● தமிழருக்கு எதிரான வன்முறை குறித்து இந்தியா கவலை; இந்தியத் தூதர் ஜே.ஆரிடம் தெரிவிப்பு.

● மலையகத்தில் தீவைப்பு, கொள்ளை; கொழும்பிலும் பதற்றம்.

● லலித்தின் அழைப்பை அன்னியர் முன்னணி தூக்கி எறிந்தது.

புதன்:

● வடக்கில் பாதுகாப்பு வலயத்தை எதிர்த்துப் பேரணி.

● மட்டக்களப்பில் பூரண ஹர்த்தால்.

● மலையகத்தில் 40மணி நேர ஊரடங்கு.

● அமெரிக்காவின் சலஞ்சர் வானில் வெடித்துச் சிதறியது.

வியாழன்:

● மன்னாரில் 10 மணி நேரம் போராளிகள் — இராணுவம் மோதல்; 26 சிப்பாய்கள் மரணம் என்று புலிகள் அறிக்கை.

● முல்லைத்தீவில் நான்காவது நாளாகப் போராளிகள் — ஆயுதப்படையினர் மோதல்.

● மறியல் இயக்கம் முடிவடைந்தது; மீண்டும் யாழ் அரச அலுவலகங்கள் இயங்கத் தொடங்கின.

## வெள்ளித் திரை

### கமல் -- ராதிகா இணைகின்றார்கள்

''சங்கராபரணம்'' புகழ் கே. விஸ்வநாத் இயக்கும் ''சுவாதி முத்யம்'' படத்தில் கமல்–ராதிகா இணைகிறார்கள்.

முதன் முதலாக இப்படத்தில் தான் இவர்கள் இருவரும் சேர்ந்து நடிக்கிறார்கள். இதுவரை கமலஹாசனுடன் ஜோடியாக நடிக்கவில்லை என்ற குறை இந்தப் படத்தின் மூலம் தீர்ந்து விட்டதாகக் கூறுகிறார் ராதிகா.

நடிப்புத் திறமை வாய்ந்த நடிகையாகத் தன்னை பட்டை தீட்டிக் கொள்ள, மெட்டி, நினைவுகள் உறங்குவதில்லை, நல்லவனுக்கு நல்லவன் போன்ற படங்கள் வாய்ப்பாக அமைந்தன என்கிறார் ராதிகா.

சங்கராபரணம், சலங்கை ஒலி போன்ற சிறந்த படங்களைத் திரையுலகுக்குத் தந்தவர் கே. விஸ்வநாத். அவரின் டைரக்ஷனில் ''சுவாதி முத்யம்'' படத்தில் நடிப்பது பெருமையாக இருக்கிறது என்றும் சொன்னார் ராதிகா.



ராதிகா

## சண்டைக் காட்சிகளில் எம். ஜி. ஆர்.

### மிகப் பெரிய சாதனை புரிந்தவர்

மக்கள் திலகம் எம். ஜி. ஆர். 'நீரும் நெருப்பும்' படத்தில் ஒரு சண்டைக் காட்சியில் புரிந்த சாதனை பிரமிக்கத்தக்கது.

ஸ்டண்ட் மாஸ்டர்சங்கர் தனது அனுபவங்கள் பற்றி குறிப்பிடுகையில் இதைக் குறிப்பிட்டார்.

''மூன்று முகம்'' படத்தில் புதுமையாக ஸ்டண்டுகளை அமைத்துப் பாராட்டுப் பெற்றவர் சங்கர். சியாம் சுந்தரிடம் 18 ஆண்டுகள் பணியாற்றியவர்,

அவர்தனது அனுபவங்கள் பற்றி மேலும் குறிப்பிடுகையில்:-

'மூன்று முகம்' படத்தில் அலெக்ஸ் பாண்டியனைக் கொலை செய்யும் கட்டம். எங்களது சண்டைக் காட்சிகளில் தமிழ் நாட்டுச் சண்டைக் கலை அடிப்படையில் ''கொப்படா'' ஆயுதமுறையை அதில் பயன்படுத்தினேன்.

''மர்மயோகி'' யில் எம். ஜி. ஆர். ஒருவர் தான் இதனை முன்பு உபயோகப்படுத்தி இருந்தார்.

''கொப்படா'' வைத் தாங்கிவரும் எதிரியை கவசம் அணிந்த ரஜனிகாந்த் தடுத்துக் கொள்கிறார். ஒரு பொலிஸ் அதிகாரியின் மனோ தைரியத்தை வெளிப்படுத்தும் வகையில் —

''என் இறுதி மூச்சு உள்ளவரை போக்கிரிகளை அடக்கியே தீருவேன்'' என்று கூறி, இறந்த நிலையிலும் அலெக்ஸ் பாண்டியன் எதிரியின் சட்டையைத் தன் இரத்தக்கறை படிந்த கைகளினால் கிழிக்கும் காட்சியைச் சிறப்பாகப்படமாக்கினோம், அது அபாரமாக அமைந்து விட்டது,

இதைவிட துறைமுகத்திலும் ஒரு சண்டைக் காட்சியை படமாக்கினோம். இந்தச் சண்டைக் காட்சியை ரஜனிகாந்த் மிகச் சிறப்பாகச் செய்து படத்தின் விறுவிறுப்புக்கு வித்திட்டது எனக்கும் பெருமையாக இருந்தது,

பத்மினி பிக்சர்ஸாரின் ''ரகசிய பொலிஸ் 115'' யில் எம். ஜி. ஆருக்கும் ஜஸ்டினுக்கும் ஒரு சண்டைக் காட்சி.



ஜஸ்டினை 28 நாட்களில் தயார் செய்தேன். அவரது அடி இரும்பு போல் இருக்கும், ஒத்திகையே அமர்க்களமாக இருந்தது. இதில் எம். ஜி ஆர். சண்டையிட்டது போல் வேறு எவருமே செய்திருக்க முடியாது.

இதேபோல் வாள்ச் சண்டையிலும் எம். ஜி. ஆருக்கு நிகராக வேறு எவரையும் குறிப்பிடமுடியாது.

வலது கையால் வாள் போர் செய்யும் ஒருவர் இடது கையால் செய்ய மாட்டார். ஆனால் 'நீரும் நெருப்பும்' படத்தில் இரண்டு கைகளாலுமே–யாருமே செய்ய முடியாத ஒரு அசுர சாதனையை புரட்சித் திலகம் எம். ஜி. ஆர். செய்தார். இக் காட்சியை நினைக்கும் போதே மெய் சிலிர்க்கிறது.

எதிர் காலத்தில் ''மோட்டார் ஜம்ப்'' ''பிளேன் க்ராஷ்'' காட்சிகளையும் படங்களில் புகுத்த உத்தேசித்துள்ளேன்.

இதற்கு வெளிநாடு சென்று சண்டை முறைகளைத் தெரிந்து வர அரசு எங்களுக்கு உதவ வேண்டும்– என்றார் ஸ்டண்ட் மாஸ்டர் சங்கர்.


இதோ
அறிமுகப்படுத்துகின்றோம்!
FROZEN FOODS
ஐஸ் கிறீம்
இன்சுவை, பல்சுவை, தரம், தராதரம்
இவற்றை ஒரே நேரத்தில்
உங்கள் மழலைச் செல்வங்களுக்கும்
உங்கள் இல்லங்களுக்கு வருகைதரும்
விருந்தினருக்கும் களிப்பூட்ட பரிமாறுங்கள்:
FROZEN FOODS
ஐஸ் கிறீம்
என்றும் சிறந்ததையே வழங்கும்
செனித் மார்கட்டிங்
ஸ்தாபனத்தின் மற்றும் ஒரு புது முயற்சி
ஏகப் பிரதிநிதிகள்:
ஜோ. எகட்டன்
செனித் மார்கட்டிங், யாழ்நகர்.
ஏக கையிருப்பாளர்கள்:
வரணி மிஷன் பாம்
(விற்பனை நிலையம்)
145, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.
மற்றவர்கள் செய்யும் சத்தியத்தை நாங்கள் காப்பாற்றுகின்றோம்.
விலை விபரங்கள்:

| | |
|---|---|
| பிளாஸ்டிக் கப் (வனிலா) | 4-50 |
| சொக்கலேட் | 4-75 |
| பெமலி புளக் | 23-50 |
| கலன் | 140-00 |

கூடிய கொள்முதலுக்கும், விசேட ஓடர்களுக்கும் சலுகைகள் உண்டு.
விபரங்களுக்கு:
வரணி மிஷன் பாம்
(விற்பனை நிலையம்) யாழ்நகர்.


### காந்திஜியின்...

(3ம் பக்கத் தொடர்ச்சி)

கண் நம் மானத்தைத் தாங்கும் ஆடையை அன்னியர் உழைப்பிலிருந்து அமைத்துக் கொள்ளாமல் நம்முடைய சுய முயற்சியிலிருந்து அதனை ஆக்கி அணிந்து கொள்ள வேண்டும். இது சுதந்தரமாகும்.

### துப்பாக்கி...

(2 ம் பக்கத் தொடர்ச்சி)

துணிகொண்டு காயத்தைக் கட்டவும்.

காயம்பட்டவரை பாதி உட்கார்ந்த நிலையில் இருக்க வைக்கவும். [illegible] உதவியை [illegible]

நன்றி: மூலிகை

# அடித்துச்செல்லப்பட்ட

## பாடசாலை உதைபந்தாட்டம்

யாழ்ப்பாண பாடசாலைகள் விளையாட்டுச் சங்கத்தின் கடந்த வருடத்திற்கான உதைபந்தாட்டப் போட்டி இடைநடுவில் கைவிடப்பட்டு விட்டது.

சங்கத்தின் முக்கிய பிரமுகர் ஒருவர் சஞ்சீவி விளையாட்டுப் பகுதிக்கு இத்தகவலைத் தெரிவித்திருக்கிறார்.

கடந்த காலங்களில் வடக்கில் சூடு பிடித்திருந்த விளையாட்டு உதைபந்தாட்டம். அதிலும் பாடசாலைகள் உதைபந்தாட்ட சீசன் என்றால் தனிக் 'களை' கட்டிவிடும்.

பல்லாயிரக் கணக்கில் ரசிகர்கள் கூடி, சங்கத்திற்கு பெருந்தொகை வருமானத்தைத் தேடிக் கொடுப்பதும் இந்த சீசனில்தான்.

ரசிகர்களின் ஆவேசம் விளையாட்டு அபிமானிகள் அங்கலாய்க்கிறார்கள்.

விளையாட்டுச் சங்க அதிகாரிகள் எப்படியும் வருடாந்த சுற்றுப் போட்டியை நடத்தி முடிப்பது என்று கங்கணம் கட்டிக் கொண்டு செயற்பட்ட போதிலும் பாடசாலைகள் சுற்றுப்போட்டியில் அதிக ஆர்வம் காட்டவில்லை.

—— என்வி ——

முதலாம் பிரிவு அணிக்கு வெறும் பந்தை உதைக்கும் திறமையுள்ள பதினொரு பேரை (வீரரை?) தேடிப் பிடிப்பதே மிகக் கஷ்டமான தாக இருக்கிறது என பிரபல பாடசாலை ஒன்றின் விளையாட்டுப் பொறுப்பாசிரியர் கூறினார் என்றால் நிலைமை எப்படி இருந்திருக்கும்?

டம் ஆரம்பமானது.

ஒரு புறம் இளம் சமுதாயம் விளையாட்டில் ஆர்வம் காட்டாதநிலை. மறுபுறம் அசிரத்தையாக நடந்து கொள்ளும் பாடசாலை ஆசிரியர்கள். நாட்டின் குழப்பநிலை பிறிதொரு புறம். போதாக் குறைக்கு பெருமழையும் ஜீ. சி. ஈ. (சாதாரண)தர பரீட்சையும் ஒன்று சேர சுற்றுபபோட்டி அடித்துச் செல்லப்பட்டு விட்டது.

அண்மைக் காலத்தில் கூட தேசிய மட்டத்தில் உதைபந்தாட்ட வீரர்களை யாழ்ப்பாணப் பாடசாலைகள் உருவாக்கின என்பதை இங்கு சுட்டிக் காட்ட விரும்புகிறோம். அத்தகைய தகைமையை மேலும் வளர்த்துக் கொள்ளாமல் தவறவிடுவது தவறு.

## விளையாட்டு மஞ்சரி

சில சமயங்களில் அடிதடியில் தொடங்கிக் கலவரத்தில் முடிந்து விடுவதுமுண்டு. அவ்வளவு விறுவிறுப்பு அந்த நேரத்தில்.

ஆனால் நிலைமை இப்போது தலைகீழ். விளையாட்டில் இருந்த ஆர்வம் இப்போது வேறுபக்கம் திரும்பி விட்டது.

துடுப்பு ஏந்திய பல கரங்கள் துவக்கு ஏந்த வேண்டிய சூழ்நிலை உருவாகி விட்டதாலும் –

பந்தெறிந்த கைகள் [illegible] விட்டதாலும் – [illegible] விளையாட்டுக்கள் மந்த நிலைக்கு வந்துவிட்டதாக

இதேவேளை யாழ். கல்வித் திணைக்களம் நடத்திய உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி மறுபுறம்.

அந்தச் சுற்றுப்போட்டி கூட முற்றாக நடத்தி முடிக்க முடியாத நிலையில் கடந்த இரண்டு மாத காலத்திற்கு மேல் சுற்றுப்போட்டி இறுதிக் கட்டத்தில் இழுபறிபடுகிறது.

கல்வித் திணைக்களத்தையும் அதன் சுற்றுப் போட்டிகளையும் தூக்கி எறிந்து நடத்தக்கூடிய வகையில் பாடசாலைகள்.....

இந்த நிலையில்தான் பாடசாலைகள் சங்க சுற்றுப்போட்டி கடந்த வருடம் ஆரம்பமானது.

பொறுப்பானவர்கள் இதனை நன்கு உணர்ந்து உதைபந்தாட்ட தரத்தை உயர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இந்த வருட சுற்றுப் போட்டியையாவது பாடசாலைகள் விளையாட்டுச் சங்கம் திறம்பட நடத்த வேண்டும். அதற்கு பாடசாலை விளையாட்டுப் பொறுப்பாசிரியர்கள் தங்கள் பங்களிப்பை உணர்ந்து செயற்பட வேண்டும்.

(அடுத்த வாரம், சூடு பிடிக்க ஆரம்பித்திருக்கும் வடபகுதி கிரிக்கெட் சீசன் பற்றி . . .)

### சிறைப்.....

(4 ம் பக்கத் தொடர்ச்சி)

மல் பேசாமல் இருங்கோ!''

பூரணம் அவரை அடக்கி விட்டாள்.

என்றாலும் கனகசபை சமாதானம் அடையவில்லை. சந்தர்ப்பம் கிடைத்த போதெல்லாம் வீட்டில் புறுபுறுப்புத்தான்.

சரசுவுக்குத் தன் தமக்கை வாய் பேசா மடந்தையாய் வீட்டில் அடங்கி இருக்கிறாளே, அவளின் கல்யாண விஷயங்களில் தன் தந்தை அசமந்தமாய் இருக்கின்றாரே, என்றெல்லாம் ஒரே ஆத்திரம்.

தன் ஆத்திரத்தைச் செயலிலும் சொல்லிலும் காட்டத் தவறியதே இல்லை.

அக்கா மாதிரி இருக்கக் கூடாது. தன் வாழ்க்கையைத் தானே அமைத்துக் கொள்ளவேண்டும் என்று தன் மனதில் அத்திவாரமொன்றைப் போட்டு விட்டாள்.

வேலையில் அவள் காட்டிய ஆர்வமும் உற்சாகமும் எல்லோரையும் கவர்ந்ததில் ஆச்சரியமில்லை.

(வளரும்)

## மினிசினிமா


நவா மினி
(உஷா மினி முன்பாக)
Richard Harris
இராணுவத் தளபதியாக
Richard Roundree
கெரில்லாத் தலைவராக
GAME for VULTURES
முதன் முதலாக எமது மினியில் மட்டுமே காண்பிக்கப்படுகிறது.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

சமுத்திரா மல்ரி சேவிசஸ்
* திருமண சேவை
* காணி வாங்கி விற்கும் சேவை
* உள்ளூர் உற்பத்திச் சேவை
* கட்டட ஒப்பந்தம்
சமுத்திரா மல்ரி சேவிசஸ்
(கோண்டாவில் சந்தி)
303, பலாலி வீதி, கோண்டாவில்.

சஞ்சீவி
1.02.1986

சமுத்திரா மல்ரி சேவிசஸ்
* மின்சார உபகரணச் சேவை
* வீடியோ புகைப்படச் சேவை
* திருமண ஒழுங்குகள்
சமுத்திரா மல்ரி சேவிசஸ்
கிளைகள்:
முருகமூர்த்தி லேன், நெல்லியடி-கரவெட்டி.
கே.கே.எஸ். வீதி, தெல்லிப்பளை.

# இந்தியாவுக்கு ராஜதந்திரம்; எங்களுக்கு உயிர் அந்தரமோ!

## பண்டாரியின் இறுதி விஜயம் பயன் தருமா?

வெங்கடேஸ்வரன் வருவதற்கு முன்னர் மீண்டும் ஒருதரம் இலங்கை வரப்போகின்ருர், திரு. ரொமேஷ் பண்டாரி.

பண்டாரியின் ராஜதந்திரம் இறுதிக் கட்டத்திற்கு வந்துவிட்டது.

இனியும் பண்டாரியினுல் இழுத்துக்கொண்டு போக முடியாது.

இலங்கைப் பிரச்சினையில் ஏதாவது ஒரு முடிவைக் கண்டாகவேண்டிய நிலைக்கு திரு. பண்டாரி தள்ளப்பட்டுள்ளார்.

ஜனுதிபதி ஜெயவர்த்தனுவும் பண்டாரி போய் வெங்கடேஸ்வரன் வரட்டும் என்றும் இழுத்தடிக்க முடியாது.

இதுவரை வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தான் பிரச்சினை என்று இழுத்தடித்து வந்த திரு. ஜெயவர்த்தனுவுக்கு இப்பொழுது மலையகத்திலும் தொல்லை தொடங்கிவிட்டது.

இப்போது திரு. ஜெயவர்த்தனுவுக்கு இரண்டு பக்கத் தாக்குதல் (Two – pronged attack) தொடங்கிவிட்டது.

ஒரு பக்கத் தாக்குதலால் திரு ஜெயவர்த்தனுவை வழிக்குக் கொண்டு வரமுடியாது; இரண்டு பக்கத் தாக்குதல்கொடுத்தால்தான் சரிவரும் என்று இந்திய ராஜதந்திரம் எண்ணியதோ தெரியவில்லை.

மலையகத் தமிழர் பிரச்சினையிலும் திரு. ஜெயவர்த்தனுவை மாட்டிவிட்ட நிலையில் திரு பண்டாரி பெப்ரவரி 3இல் வருகிருர்.

இனப் பிரச்சினைக்கு, தமிழர் விடுதலைக் கூட்டணி சமர்ப்பித்தமாற்று யோசனைகளின் அடிப்படையில் திட்டவட்டமான பதிலை இலங்கை கொடுத்தாக வேண்டும்.

திம்புக்குப் போய்' வள வளா' பேசிய இலங்கை அரசுத் தூதுக்குழு போன்று இம்முறை திரு. ஜெயவர்த்தனு நடந்து கொள்ளமுடியாது.

சென்னையில் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்கள் – போராளிகளைச் சந்தித்து விட்டுத் தான் திரு. பண்டாரி இலங்கை வருகிருர்.

ஜெயவர்த்தனுவைச் சந்தித்துவிட்டு, அவர் சொல்வதை போராளிகள்–கூட்டணித் தலைவர்களிடம் சொல்லும் நிலையில் திரு. பண்டாரி இம்முறை வரவில்லை.

கூட்டணித் தலைவர்கள் — போராளிகள் சொல்வதை திரு ஜெயவர்த்தனுவிடம் கூறும்நிலையில் தான் திரு பண்டாரியின் இவ்வார விஜயம் அமைந்துள்ளது.

1958இல் 'யாத்திரை' போய் குழப்பியடிக்கப்பட்ட 'இணைப்பு' இன்று விஸ்வரூபம் எடுத்துள்ள நிலையில் ஜே ஆர் – பண்டாரி சந்திப்பு இருக்கப் போகிறது.

ஜனுதிபதியைச் சந்தித்தபின்னர், திரு பண்டாரி நேராக மாலைதீவு போகிருர்.

அங்கு வைத்துத்தான் திரு. பண்டாரி, பிரதமர் ராஜீவ் காந்திக்கு இலங்கை விஜயத்தின் பலாபலனை வெளியிடப் போகின்ருர்.

பலாபலன் எப்படி இருக்கும்? இந்தியாவுக்கு ராஜதந்திரம்; எமக்கோ உயிர் அந்தரம் என்ற நிலையில் இருக்குமா? வெளியுறவுச் செயலாளராக மார்ச்சில் பதவி ஏற்கப்போகும் திரு. ஏ. பி. வெங்கடேஸ்வரன் கைகளில்தான் இலங்கைப்பிரச்சினை ஒப்படைக்கப்படுமா?

இரண்டரை ஆண்டுகள் பொறுத்திருந்துவிட்டோம். அடுத்த வாரம் வரை பொறுத்து இருந்து தான் பார்ப்போமே!

### உள்ளும் புறமும்

--குறுமுனி--

### குட்டு அம்பலம்

1984, மாதந் தவருது சர்வகட்சி மாநாடு நடந்த சமயம்.

ஒருநாள் மாநாடு முடிந்து, அமைச்சர் லலித் அத்துலத் முதலி செய்தியாளர்களைச் சந்தித்தார்

'நல்லசெய்தி! நாடற்றோருக்கு இலங்கைக்குடியுரிமை வழங்க மாநாட்டில் சகலரும் ஒப்புக்கொண்டுவிட்டனர்.

மகாநாயக்க தேரர்களும் ஒப்புக் கொண்டனர்''—இப்படி அமைச்சர் சொன்னுர்.

அருகிலிருந்ததிருமலை முன்னுள் எம் பி. திரு சம்பந்தன் 'மகாநாயக்க தேரர்கள் அப்படி ஒப்புக் கொள்ளவில்லையே'– என்று அமைச்சரிடம் மெதுவாகச் சொன்னுர்.

'இல்லை சாம்! மகாநாயக்கதேரர்களும் ஒப்புக்கொண்டு விட்டனர்'- மீண்டும் திரும்பிச்சொன்னுர் அமைச்சர் லலித்.

ஒப்புக்கொண்டிருந்தால் நல்லதுதானே! ஏன் அதை இல்லை என்று சொல்வான் – இந்தஎண்ணத்தில் திரு. சம்பந்தனும் மௌனமாக இருந்துவிட்டார்.

அன்று மூடிமறைத்தது இன்று அம்பலமாகிவிட்டது. 'நாங்கள் ஆதரவு கொடுக்கவில்லை' என்று மல்வத்தை, அஸ்கிரிய பீடாதிபதிகளே இன்று சொல்லிவிட்டனர்.

முதலில் அஸ்கிரியா தான் மறுத்தது. மல்வத்தை மௌனமாக இருந்தது.

அவரது மௌனத்தைக் கலைத்தது அரசின்வானொலியும் ரூபவாகினியும்.

குடியுரிமை வழங்க மல்வத்தையும் ஆதரவு தந்ததாக அவைகூற,

மல்வத்தை மகாநாயக்கதேரர் அதை மறுத்துஓர் அறிக்கையை வியாழன் வெளியிட்டார்.

'சர்வகட்சி மாநாட்டில் நான் சொன்னதைத் திரித்து வானொலி, ரூபவாகினி பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன. இலங்கைக் குடியுரிமைபெறத் தகுதியுள்ளவர்களுக்குத்தான் குடியுரிமை வழங்கவேண்டும்.

மற்றவர்களை நாடற்றவர்களாகக் கருதி மேல் நடவடிக்கை எடுக்க வேண்டும்

இலங்கையின் சகல இடங்களுக்கும் சகல இன மக்களும் சென்று வாழக் கூடியதான தீர்வே இனப்பிரச்சினைக்குக் காணப் படவேண்டும் என்று தான் மாநாட்டில் கூறினேன்' இப்படி அவரின் அறிக்கை கூறுகிறது.

* *

30-1-1986 நாடாளுமன்றத்தில்பிரதமர் திரு. பிரேமதாஸ சொன்னது;

375,000 பேருக்கு இலங்கைக் குடியுரிமை வழங்கும்சட்டம் சிறிமா–சாஸ்திரி ஒப்பந்தத்தின் கீழ் 1964இல் நாடாளுமன்றத்தில் சுதந்திரக் கட்சி அரசிஞல் கொண்டு வரப்பட்டது.

அன்று யு. என். பி. அதை எதிர்க்கவில்லை. மனிதாபிமான அடிப்படையில் நாடற்ருேர் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும் என்ற காரணத்திஞல் அச்சட்டத்தை ஆதரித்தோம்.

### சொல்லி இருக்கவேண்டியது

இலங்கைத் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காண 1957இல் பிரதமர் பண்டாரநாயக்காவும் திரு செல்வநாயகமும் உடன்படிக்கை ஒன்றைச் செய்தனர்.

அதன்படி வடக்கு, கிழக்கு மாகாணங்கள் பிராந்தியசபை மூலம் இணைந்து செயல்பட வழிகாணப்பட்டது.

மனிதாபிமான அடிப்படையிலும் தமிழர்பிரச்சினை தீர்க்கப்படவேண்டும் என்ற எண்ணத்திலும்தான் எமது தலைவர் பிக்குகளையும் அழைத்துக்கொண்டு 1958இல் அந்த உடன்படிக்கையைக் கிழித்தெறியும்படி கோரி கண்டிக்கு யாத்திரை செல்ல முயன்ருர்.

### அரசியல் துணுக்கு

மகன் ; அம்மா ! அப்பாவும் செல்வாவும் இணைப்புப் பற்றி உடன்படிக்கை எழுதிய சமயம் நீதான் பாற்சோறு (கிரிபத்) பரிமாறினியாம்.

அம்மா : மோனே! நீயும் அந்தநேரத்திலே பொடிப் பயல்.

நானும் நீயும் இப்படி வருவம் எண்டு நினைக்க வில்லையே!

* *

கந்தர்மடம் சந்தியில் இரண்டு பேர்;

1ஆம் நபர் :

கோட்டைக்கு முன்னுல் போய் சத்தியாக்கிரகம் இருப்பதுதான் சரியான வழி.

2ஆம் நபர் ;

அப்படி இருப்பதுதான் எமக்கும் நல்ல பாதுகாப்பாக இருக்கும் என்று உள்ளே இருப்பவர்கள் கூறிவிட்டால்.....

## கொலையுண்ட தமிழர் எண்

ஒரு புள்ளி விவரம்

யாழ்ப்பாணம், பெப்.1 ஜனவரி மாதத்தில் மட்டும், வடக்கு கிழக்கு மாகாணங்களில் 142 தமிழர்கள் (4 பெண்கள், 1 குழந்தை உட்பட) துப்பாக்கிச் சூடு தாக்கி மரணமாஞர்கள்.

இறந்தவர்களில் பாடசாலை அதிபர், சுங்க அதிகாரிகள் ஆகியோர் அடங்குகின்றனர்.

ஜனவரியில் இடம் பெற்ற வன்கொலைகளில் உச்சக்கட்டமாக கிளிநொச்சி ரயில் நிலையக் கொலைகள் அமைந்தன.

சம்பவங்கள் இடம் பெற்ற இடம், திகதி, எண்ணிக்கை வருமாறு:–

ஜன 2– உருத்திரபுரம் –01
ஜன 4– யாழ்நகர் – 5
ஜன 5– யாழ்நகர் –10
ஜன 9– திருமலை –01
ஜன 11– முல்லைத்தீவு –11
ஜன 13– ஆலங்கேணி –20
ஜன 13–வாழைச்சேனை 08
ஜன 13– புன்னலைக்கட்டுவன் –01
ஜன 15– மட்டக்களப்பு –01
ஜன 16– யாழ்நகர் –03
ஜன 16–உருத்திரபுரம்-05
ஜன 17– பலாலி குரும்பசிட்டி –04
ஜன 18– பருத்தித்துறை –01
ஜன 18– நாவற்குழி – 2
ஜன 19– இருதயபுரம் –21
ஜன 19– கிளிநொச்சி –01
ஜன 21– திருமலை –01
ஜன 23– தெல்லிப்பளை வயாவிளான் 07
ஜன 26– கிளிநொச்சி –18
ஜன 26– வவுனியா –01
ஜன 27– ஒட்டுசுட்டான் –08
ஜன 27-கும்புறுபிட்டி-07 தம்பலகமம் –05

# இரு அமைச்சர்களை பதவி கவிழ்த்த இந்திய உளவு விவகாரம்

இந்திய அரசியலில் கடந்த வாரம் நிகழ்ந்த முக்கிய சம்பவங்களில் ஒன்று, இரு கனிஷ்ட அமைச்சர்களினதும் ஒரு சிரேஷ்ட அரசாங்க அதிகாரியினதும் திடீர் ராஜினுமாக்கள் ஆகும்.

இவர்களின் ராஜினுமாக்கள் பற்றிய செய்தி வெளிவந்த கையோடு பத்திரிகைகள் பல்வேறு தகவல்களை அம்பலப்படுத்தி உள்ளன.

இந்திய உளவாளி ஒருவருடன் இவர்கள் வைத்திருந்த நெருங்கிய உறவே இவர்களது ராஜினுமாவுககுக் காரணம் என்று தெரிவிக்கப்படுகிறது

கடந்த 24 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மேற்கண்ட இரு அமைச்சர்களை அழைத்து, பிரதமர் ராஜீவ்காந்தி பேசி இருந்தார். நான்கு தினங்கள் கழித்து காரணம் எதுவும் அறிவிக்கப்படாத நிலையில் இவர்களது ராஜினுமாச் செய்தி வெளிவந்தது.

உணவு, சிவில் சப்ளைக்குப் பொறுப்பான ஸ்டேட் மந்திரி கே. பி. சிங் டியோ, கிராம அபிவிருத்திக்குப் பொறுப்பான ஸ்டேட் மந்திரி சனுலால் சந்திராகர் ஆகியோரே ராஜினுமாச் செய்த கனிஷ்ட அமைச்சர்கள் ஆவர்.

ராஜினுமாச் செய்த அரசாங்க உயர் அதிகாரி எம். எஸ் சஞ்சீவிராவ். இவர் இந்திய எலெக்ரோனிக் கமிஷன்தலைவர்.

இந்த மூவரும் வர்த்தகரான ராமசுவரூப் என்பவருடன் நெருங்கிய உறவு வைத்திருந்தனர் என்று தெரிய வந்திருக்கிறது.

55 வயதான ராமசுவரூப் கடந்த ஆண்டு அக்டோபர் மாதம் கைது செய்யப்பட்டிருந்தார்.

தைவான், இஸ்ரவேல், மேற்கு ஜெர்மனி ஆகிய நாடுகளுக்கும் மற்றும் சில பெயர் குறிப்பிடப்படாத நாடுகளுக்கும் இவர் இந்தியாவின் ரகசியத் தகவல்களை விநியோகித்தார் என்று குற்றஞ் சாட்டப் பட்டிருக்கிறது

இவற்றில் தைவானுடனும் இஸ்ரவேலுடனும் இந்தியாவுக்கு ராஜீய தொடர்பு இல்லை அதனுல் இந்த விவகாரத்தை பிரதமர் ராஜீவ் காந்தி ஒரு பாரதூரயான விஷயமாகக் கருதுகிருர்.

வர்த்தகரான ராமசுவரூப் பல இந்திய அரசியல்வாதிகளுக்கும் உயர் அதிகாரிகளுக்கும் விருந்து அளித்திருக்கிருர். இலவச விமான டிக்கெட்டில் சிலரை லதவானுக்கும் அனுப்பி இருக்கிருர்.

கைதான பின்பு இவர் இந்தியப் பொலீஸாருக்கு அளித்த வாக்கு மூலத்தை அடுத்தேமேற்கண்ட மூவரின் ராஜினுமாக்களும் இடம்பெற்றுள்ளன.

இந்திய அரசியலில் உளவு விவகாரம் இது முதலாவது சம்பவம் அல்ல. இதற்கு முன்பும் இந்திய வர்த்தகர் ஒருவர் பிரான்ஸ், ரஷ்யா, கிழக்கு ஜெர்மனி ஆகிய நாடுகளுக்கு ரகசிய தகவல்களை வழங்கியது கண்டு பிடிக்கப்பட்டது.

இதனை அடுத்து அப்பொழுது பிரெஞ்சுத் தூதுவரை இந்தியா திருப்பி அனுப்பி இருந்தது.

சர்வதேச அரங்கில் இந்தியா தற்போது பெரும் வல்லரசாக உருவெடுத்து வருவதால் தனது ரகசியங்களைப் பாதுகாப்பதில் அதிக அக்கறை காட்டிவருவதில் வியப்பில்லை.

## உலக உலா

ஏன்.பி.சீலன்

## பிலிப்பீன்ஸ்: மார்க்கோஸ் மீண்டும் வெல்வாரா?

ஆசியாவில் அமெரிக்காவின் மிக நெருங்கிய நட்பு நாடான பிலிப்பீன்ஸில் எதிர்வரும் 7–ஆம் திகதி பொதுத் தேர்தல் நடக்கிறது.

கடந்த 20 வருடகாலமாக தொடர்ந்து பதவியிலிருந்துவரும் பேர்டினன்ட் மார்க்கோஸ் இம்முறையும் தேர்தலில் போட்டியிடுகிருர்.

கடந்த காலங்களைப்போன்று இம்முறையும் தேர்தலில் ஒழுங்கீனங்கள், மோசடிகள், இராணுவ பயமுறுத்தல்கள் இடம்பெறலாம். என்று அரசியலில் அவதானிகள் கருதுகின்றனர்.

முன் எப்போதும் இல்லாதவாறு ஜனுதிபதி பேர்டினன்ட் மார்க்கோஸ் இம்முறை பெரும் சவாலை எதிர் நோக்கி இருக்கிருர்.

கொருசன் அங்கினே என்ற பலம்மிக்க பெண் வேட்பாளர் இவரை எதிர்த்துப் போட்டியிடுவதே இதற்குக்காரணம்.

எதிர்க்கட்சி அரசியல்வாதியாக இருந்த இவரின் கணவர் நீண்டகால அஞ்ஞாத வாசத்தின் பின்பு நாடு திரும்பிய போது மணிலா விமான நிலையத்தில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டிருந்தார்.

# இலங்கை விடயத்தில் ராஜீவ் கடும் போக்கு!

## இந்திய சோதிடர் நாராயணன் ஆரூடம்

இலங்கை இனப்பிரச்சினைக்கு தீர்வுகாணும் விஷயத்தில் பாரதப் பிரதமர் ராஜீவ் காந்தி கடுமையான போக்கைக் கடைப்பிடிப்பார்.

திரு ராஜீவ்காந்தி பிடிவாதக்குணம்உடையவர். ஒன்றை நினைக்க மாட்டார். நினைத்தால் அதனை முடிக்காமல்விடவும் மாட்டார்.

போகும் சம்பவங்கள் பற்றிய திரு. நாராயணனின் ஆரூடங்கள் வருமாறு:–

1986 இல் ஜெயவர்த்தன அரசு கவிழும். திருமதி.சிறிமாவோ பண்டாரநாயக்கா பதவிக்கு வருவார்.

திரு. ஜெயவர்த்தனு சனியின் ஆட்சிக்கு உட்பட்டிருக்கிருர். அவரின் பதவிக்கு எந்நேரமும் உலக நாடுகளினுல் போற்றப்படுவார்

சனி, விருச்சிகத்தில் இருப்பதால் அடுத்து பத்து மாதங்களுக்கு பிரதமர் காந்தி மிகுந்த பாதுகாப்புடன் இருக்க வேண்டும்.

### தமிழ்நாடு

தமிழ்நாட்டில் இந்திரா காங்கிரஸ் குழப்ப நிலையில் இருக்கும். காங்கிரஸ் பொதுச் செயலாளர் திரு. கருப்பையா மூப்பஞருக்கு மிக நல்ல காலம். தமிழ்நாட்டில்

## சோதிட சஞ்சீவி

இப்படித் தமிழகத்தில் இருந்து வெளிவரும் 'தேவி'சஞ்சிகையில் ஆருடம் கூறப்பட்டுள்ளது.

"1986 இல் இலங்கையில் புரட்சிகர மாறுதல்கள் இடம்பெறப்போகின்றன'' என்று புதுவருடப் பலன் கூறியிருப்பவர் பிரபலஎண்கணித,வானியல் நிபுணரான திரு ஆர். நாராயணன்.

அதிசய சக்தியைப் பெற்றுள்ளதாகக் கூறப்படும்இவர் கடந்த காலங்களில் சொன்ன ஆரூடங்கள் அப்படியே பலித்துள்ளதாக 'தேவி' சஞ்சிகை கூறுகிறது.

- 1971 இல் தி.மு.க. இரண்டாக உடையும்.
- அடுத்த முதல்வர் எம்.ஜி.ஆர்.
- 1980 இல் எம். ஜி. ஆர் ஆட்சிகலைக்கப்படும்.
- 1984 இல் இந்திரா காந்தி, எம்.ஜி ஆர். ஆகியோருக்கு கூடாதகாலம்.

இவை எல்லாம் திரு. நாராயணன் சொன்னவை [illegible]

1986 இல் நடைபெறப் ஆபத்துண்டு.

1986இல் சனிபார்வை மத்திய கிழக்கு நாடுகள், பாகிஸ்தான், இலங்கை மேல் உண்டு.

17-01-1986 முதல் 17–10–1986 வரை ஜெயவர்த்தனு அரசுக்கு போதாத காலம்.

சிங்கள மக்கள் ஜெயவர்த்தனு மீது துவேஷம் கொள்வர். நாட்டில் கொந்தளிப்பு, பொருளாதார ரீதியிலான கஷ்டங்கள்,வன்முறைச் சம்பவங்கள் இடம்பெறும்.

பிரதமர் பிரேமதாஸ, அமைச்சர் அத்துலத் முதலி அரசியல் அனுதைகளாக மாறுவர்.

இலங்கையில் தமிழர் இழந்த உரிமைகளைப் பெற்று வாழ்வார்கள்.

### இந்தியா

அடுத்த தேர்தல் வரை பிரதமர் ராஜீவ் காந்தி உச்சத்தில் இருப்பார். அவரை எதிர்க்கும் வலு எதிர்க்கட்சிகளுக்கு இல்லை.

தலைசிறந்த அரசியல் தலைவர் என்று இவர் அடுத்த பெரிய தலைவராக அவர் உருவெடுப்பார்.

26 – 10 – 1986 வரை எம். ஜி. ஆருக்கு போதாத காலம் இக்காலத்தில் தனது உடல் நலம் குறித்து எம். ஜி. ஆர். அக்கறை காட்ட வேண்டும்.

அ. தி. மு. க. வில் உட்பூசல் ஏற்படும்.

### இந்திய பாகிஸ்தான் யுத்தம்

26 – 10 – 86 முதல் 26–10–88 க்கு இடைப்பட்ட காலத்தில் இந்திய பாகிஸ்தான் யுத்தம் ஏற்படும்.

காஷ்மீர் எல்லைப் பிரச்சினை காரணமாகவே யுத்தம் வெடிக்கும்.

பாகிஸ்தான் அணுகுண்டைப் பயன்படுத்தாது.

## கீரையின் மகத்துவம்

அகத்திக்கீரை ,முருங்கைக்கீரை, பசளைக்கீரை, அரைக்கீரை எனப்பலவகைக் கீரைகள் பயிராகின்றன 200க்கு மேற்பட்ட கீரைகள் இந்தியாவில் பயிர் செய்யப்படுவதாக ஒரு புள்ளி விபரம் கூறுகிறது

ஒருவனது ஒரு நாளைச் சமச்சீர் உணவுத் திட்டத்தில் 116 கிராம் கீரை வகை உணவு, இருக்க வேண்டும் இவ்வகை உணவு, மனிதனுக்குத் தேவையான தாதுப்பொருளையும் ஏ. சி. வைட்டமின்களையும் பெருமளவில் பெற்றிருக்கிறது.

ஜாவா பிலிப்பைன்ஸ் போன்ற இடங்களில் மாந்தளிர் கூட உணவுப் பொருளாகப் பயன்படுத்தப்படுகிறது வேறு சில நாடுகளில் மூங்கிலின் பசுந்தளிர் உணவாகப் பயன்படுகிறது.

கீரைகளைப் பயிரிடுவதிலும் தொல்லையில்லை. அதன் விளைச்சலும் பெருவாரியாக இருக்கும். ஒரு சிறு பொட்டலத்திலுள்ள முட்டைக்கோஸ் 30 கிலோ முட்டைக்கோஸ் விளைவிக்கும். 60 கிராம் கீரை விதை 7 கிலோ கீரையை உற்பத்தி செய்கிறது.

நன்கு ஊட்டச்சத்துள்ளதும் எளிதாகப் பயிரிடக் கூடியதுமான கீரை வகை உணவைச் சேர்த்துக் கொள்வது வேண்டத்தக்கது.

தொகுப்பு- க. கனகராசா

## அரசின் பதிலை ஆரா...

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

''இந்தியன் எக்ஸ்பிரஸி''ற்கு அளித்த பேட்டி ஒன்றில் ''அரசியல் முறையை நாடினுல் அரசியல் தீர்வு, இராணுவ தீர்வை நாடினுல் இராணுவத் ' தீர்வு ' என்று ஜே ஆர். ஜெயவர்த்தனு ஆக்கிரோஷத்துடன் தெரிவித்திருக்கிருர்.

''இனப்பிரச்சினையை விரைவில் தீர்த்துவிடுவீர்களா?' என்று செய்தியாளர் கேட்டபோது அதுபற்றி எனக்குச் சொல்லத் தெரியாது என்று ஜனுதிபதி கூறினுர்.

அவர் மேலும் கூறியதாவது:–

தமிழர்களுக்கு நாம் எதைத் தருவோம் என்பதைக் கூறிவிட்டோம். இனி முடிவு எடுப்பது அவர்களின் பொறுப்பு

எங்களைப் பொறுத்த மட்டில் இன்னும் [illegible] மாதத்தில் போராளிகளை தோற்கடித்து விடுவோம் –இப்படி அவர் சொன்னுர்.

## குடியுரிமை:.

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

நடந்தால் சபையை விட்டு வெளியேற்ற நேரிடும் என்று சபாநாயகர் அவரை எச்சரித்தார்.

மூன்ருவது கட்டவாக்கெடுப்பின் போது சிறிலங்கா சுதந்திரக் கட்சி எம்.பி.க்கள் சபையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர்.

இதன் மூலம் நீண்டகாலப் பிரச்சினையாக இருந்து வந்த மலையகத் தமிழர் பிரச்சினைக்கு தீர்வு பிறந்துள்ளது.

## மேலும் 100 ...

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

தடுத்து வைக்கப்பட்டிருக்கிருர்கள்

நேற்றைய தேடுதல் காலை 7 மணி முதல் மாலை 4 மணி வரை நீடித்தது. மன்னுர் வீதி, பழைய பொலீஸ் நிலைய வீதி, வவுனியா நகரம் ஆகிய [illegible] கள் இடம்பெற்றன.

அச்சிடுவோரும் வெளியிடுவோரும்: தஷ்ப்ரு உமா எக்ஸ்போட்ஸ் லிமிட்டெட், 207, மின்சார நிலையவீதி, யாழ்ப்பாணம். அச்சகம்: 15, 2 ஆம் ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
வெளியிட்ட திகதி: 01-02-1986

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org